"[illegible]" அல்லது

[illegible].

O-,2MCK4,J
N34
149257

605

1605

28 SEP 1934

# "JAYA=SATHI"

OR

# "THE EVILS OF DRINK"

A TAMIL DRAMA

BY

MR. N. A. V. CHETTIAR.

---

# "ஜெய-சதி"

அல்லது

# "குடியின் கெடுதல்"

---

நு. அ. வை. செட்டியாரால்

எழுதப்பட்ட

ஓர் தமிழ் நாடகம்.

:o:

FIRST EDITION.

—

1934

TED AT THE VICTORIA PRESS, COONOOR.

RESERVED.] [PRICE AS. 8.

O-,2MCK3,J.
N34
149257

உ

28 SEP 1934
MADRAS

# "JAYA-SATHI"

OR

# "THE EVILS OF DRINK"

BY MR. N. A. V. CHETTIAR

## "ஜெய-சதி"

அல்லது

## "குடியின் கெடுதல்"

இந்த நாடகம், நு. அ. வை. செட்டியாரால்
எழுதப்பட்டது.

**Inscribed to The Holy Memory of Lord Ganesha.**

ஸ்ரீ மஹா கணபதியே நமஹ:
ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி துணை.

*Persons, professional or amateur desiring to stage this drama of mine must previously obtain my permission to do so.*

Military Accounts Department,
Aruvankadu. (Nilgiris)
30th June 1934.

*THE AUTHOR.*

காபிரைட் பெற்றது.

விலை அணா 8.

# முன்னுரை.

இவ்வுலகமீது ஏதுமறியாதவனும், மிக ஏழைக்குள் ஏழையாகிக் கல்லாதவர்க்குள் கடைப்பட்ட நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுவது யாதெனில் :—

இத்தேயத்தில் குடிகொண்டிருக்கும் வறுமையெனும் பிணிக்குக் காரணம் பஞ்சமா பாதகங்களிலொன்ருகிய கட்குடி அதிகரித்திருப்பதே, இந்த மதுபானப் பழக்கத்தால் எத்தனையோ தனவந்தரின் குடும்பங்கள் நசிந்து, இருந்த இடம் தெரியாமல் போய்விடுகின்றன. ஏழைகளின் கதியோ, சொல்லொணு பரிதாபமான நிலைமைக்கு வந்துவிடுகிறது. இவைகளை நாம் பிரத்தியட்சமாய்ப் பார்த்துவருகிருேம். இக்கொடிய அரக்கனின் பாசத்தில் விழுந்து மதிமயங்கிக்கிடக்கும் ஏனையோரின் மனதை நல்வழியில் திருப்ப நன்மக்கள் பலர் பலவாறு முயற்சிசெய்துவருகிருர்கள். அவ்வாருன துறைகளில் ஒன்று குடியால் சம்பவிக்கும் கெடுதல்களை நாடகமாக நடித்துக்காட்டுவதே.

தமிழ் பாஷையில் எளியேனுகிய நான் என் சிற்றறிவிற்கெட்டிய அளவில் இந்நாடகத்தை எழுதலானேன். இதில் அநேக குறைவுகளும், தவறுகளும் இருக்குமாயினும் இதைக் கண்ணுறும் நண்பர்கள் குற்றங்களைக்கருதாமல் குணத்தையே மனத்திற்கொண்டு, இந்நாடகத்தை ஜனங்களுக்கிடையில் நடித்துக்காட்டுவார்களென நம்புகிறேன்.

இந்நாடகத்தை முற்றிலும் வாசித்துத் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கும் திருவாளர் - வித்வான் - குஞ்சிதபாதம் பிள்ளைக்கு என் மனமார்ந்த வந்தனத்தை அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்நாடகத்தை நடத்திடக்கோருபவர் இதை நடித்திடுமுன் என் அநுமதியைப் பெறவேண்டுமென அதிக தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அருவங்காடு,
(நீலகிரி)
—6—1934.

நு. அ. வை. செட்டியார்,
மிலிடெரி அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மெண்டு.

# OPINION.

### நீலகிரி உப்பதலை டிஸ்டிரிக்ட் போர்டு ஹை ஸ்கூல்
### தமிழ் பண்டிதர் திருவாளர்
## வித்வான் வை. குஞ்சிதபாதம் பிள்ளை எழுதுவது:—

அரசியல் அலுவலில் இருந்துவரும் நண்பர் திருவாளர், என். எ. வி. செட்டியாரவர்களால் எழுதப்பட்ட "ஜெய-சதி" அல்லது "குடியின் கேடுதல்" என்ற பெயரமைந்த நாடக நூலை முற்றும் படித்துப் பார்த்தேன். ஷை செட்டியாரவர்கள் ஆங்கிலம், தமிழ் பயிற்சி முதலியவற்றில் வல்லவரா யிருத்தலோடு, பல நாடகங்களையும், மேடையில் தாமே நடித்துக்காட்டுந் திறமையும், பிறருக்கு நாடகங்களைக் கற்றுக்கொடுக்கும் ஆற்றலும் மிக்குடையராதலின் இவரை ஒரு நாடக நூலாசிரியரென்று கூறுதல் மிகையாகாது. இன்னார் தாமெழுதிய நாடகத்தை இளஞ்சிறார்கட்குத் தாமே பயிற்றுவித்து, சென்ற 25-11-1933-ல், கார்டைட் பாக்டரி ஸ்கூல் கட்டிடத்தில், ஷை தொழிற்சாலையின் சூப்பரிண்டெண்டெண்டு கனம் ஜி. எஸ். பட்லர் B. A. (OXON) F. I. C. அவர்கள் முன்னிலையில் நடிக்கச்செய்து, யாவரும் மகிழச் செய்ததிலிருந்தே இவருக்கு நாடகத் தமிழிலுள்ள புலமை நன்கு விளங்கும்.

இந்நாடக நூல் பஞ்சமா பாதகங்களில் தலைசிறந்த கட்குடியின் கெடுதலை விளக்கி, அதை நிறுத்தி உலகிற்கு நன்மை புரியவேண்டுமென்ற நீதியைக் கூறுமுகத்தால், தீநட்பின் தீமையையும், விலைமாதரின் கொடுமையையும், "கெடுமதி தனக்கே" என்ற பழமொழியையும், கற்புடைப் பெண்டிரின் பெருமையையும், இன்னும் பலநீதிகளையும் தெளிவாக விளக்கிச் சொல்லுதலால் இது உலகிற்கு ஓர் சிறந்த நீதியைக் கற்பிக்கும் நூலாயிருக்கிறது. இந்நூல் தமிழுலகத்திற்குப் பெரிதும் பயன்படுமென்று நம்புகிறேன். அழகிய எளிய நடையில் எழுதப்பட்ட இந்நாடக நூலை, மாணவர்களும் பிறரும் படித்து இன்புற்று, பொது மக்களிடையே நடித்துங் காட்டுவார்களானால், நம்நாட்டில் குடிப்பழக்கம் குறையும் என்பதில் ஐயமில்லை.

நாடகத்தமிழின் சிறப்பும் பயிற்சியும் குன்றியிருக்கும் இக்காலத்தில், இத்தகைய நூல்கள் வெளிவரவேண்டியது மிக இன்றியமையாததாகும். இந்நூலை மிக்க முயற்சியோடு எழுதித் தமிழுலகத்திற்கு உதவிய செட்டியாரவர்கட்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு அவர்கள் இன்னும் இத்தகைய நூல்கள் பல எழுதத் திருவருள் கூட்டுவித்தருள இறைவனை வழுத்துகின்றேன்.

இங்ஙனம்,

6-5-1934. வித்வான், வை. குஞ்சிதபாதம்.

# "ஜெய-சதி" அல்லது "குடியின் கெடுதல்"

—o—

## நாடக பாத்திரங்கள்.

| | | |
|---|---|---|
| தாமோதரம் பிள்ளை | — | நாட்டுப்பட்டி ஜமீன்தார். |
| கேசவப்பிள்ளை | — | ஷை ஊரில் ஓர் தனவந்தர். |
| மாதவராயர் | — | தாமோதரம் பிள்ளையின் நண்பர். |
| நாராயணையா | — | கேசவப்பிள்ளையின் நண்பர். (உண்மையில் கள்வர் கூட்டத் தலைவன்.) |
| வாமநேச நாய்க்கர் | — | கற்பகராஜத்தின் தந்தை. |
| கருண சேகரர் | — | சேரமான் ராஜ்ஜியத்தின் அரசர். |
| சுகுண நேசர் | — | ஷையாரின் மந்திரி. |
| தாண்டவராயன் | — | தாமோதரம் பிள்ளையின் வேலைக்காரன். |
| சீனு | — | சங்கத்தில் சிற்றுண்டி விற்பவன். |
| கற்பகராஜம் | — | தாமோதரம் பிள்ளையின் மனைவி. |
| மோஹனாங்கி | — | ஓர் தாசி. |
| அஞ்சலை | — | ஷையாளின் தோழி. |
| மோஹனவல்லி | — | நாராயணையாவின் வேலைக்காரி. |
| விமலா | — | சேரமான் ராஜ்ஜியத்து அரசியின் தோழி. |
| மற்றுமுள்ளோர் | — | அரசி, கற்பகராஜத்தின் சிநேகிதர்கள், (மூன்று ஸ்திரீகள்) மாமா, வண்ணான், அம்பட்டன், குடுகுடுப்பைக்காரன், தட்டான், குடிகள், சேவகர்கள், வீரர்கள். |
| **கதை நிகழும் இடம்** | — | சேரமான் ராஜ்ஜியம். |

# "ஜெய-சதி"

## முதல் அங்கம். முதற்காட்சி.

**இடம் :**—வர்த்தமான பத்திரிகைகள் வாசிக்கும் ஓர் சங்கத்தில் ஓர் அறை.

**காலம் :**—மாலை.

தாமோதரம் பிள்ளை, கேசவப்பிள்ளை, மாதவராயர், நாராயணையா, ஆகிய நால்வரும் சீட்டாடிக்கொண்டிருக்கிறார்கள்.

**தாமோ :**—(கேசவப்பிள்ளையைப் பார்த்து) நீர் ஏனையா ஆடுதன் எட்டைத் தள்ளாமல் கையில் வைத்துக்கொண்டிருந்தீர்கள்? நான் இஸ்பேட் ஜாக்கியை இறக்கினபொழுது நீர் அதைப் போட்டிருந்தால் இந்தத் தடவை நாம் ஆட்டத்தில் ஜெயம் பெற்றிருக்கலாமே! உம்முடைய பிசகால்தான் நாம் ஆட்டத்தைத் தோற்கும்படி நேரிட்டது!

**கேசவ :**—என்ன ஐயா, அப்படிச் சொல்லுகிறீர்கள்! நீர் ஏன், டைமன் ஜாக்கியை என் துருப்புப் பிடியில் தள்ளாமலிருந்துவிட்டீர்கள்? அதை அப்பொழுதே தள்ளியிருந்தீரானால் ஆட்டம் நம்முடையதாயிருக்குமே! பிசகு உம்முடையதாயிருக்கையில் வீணாக என்மீது பழி சாற்றுகிறீர்களே! போம் ஐயா! உம்முடன் இந்த ஆட்டம் ஆடவும் வேண்டாம், வீண் சண்டையும் வேண்டாம். (கோபத்துடன் எழுந்திருந்து போவதுபோல் நடிக்கிறார். மாதவ்ராயர் அவரை உட்காரச் செய்கிறார்.)

**மாதவ :**—நண்பர்களே! கோபித்துக்கொள்ளவேண்டாம். இந்த ஆட்டத்தில் நாம் எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தாலும் இப்பேர்ப்பட்ட குற்றங்களும், அவைகளால் பிரமாதமான சச்சரவுகளும் உண்டாவது சகஜம் ஏதோ விளையாட்டுப் போக்காக இதைக் கையாடினோம். இதை இவ்வளவுடன் நிறுத்திவிட்டு, இப்பொழுது மணி நாலு ஆகிறபடியால், சிற்றுண்டி உண்ணலாம், வாருங்கள்.

**யாவரும் :**—சரி, அப்படியே ஆகட்டும்.

**தாமோ :**—யார் அங்கே? (சேவகனைக் கூப்பிடுகிறார்.)

**சேவகன் :**—பிரபு! இதோ வந்துவிட்டேன்.

**தாமோ :**—சீனுவை நான்கு தட்டுகளில் சிற்றுண்டி கொண்டுவரும்படி சொல்.

சேவகன் :—பிரபு! உத்தரவுப்படி (போகிறான்.)

தாமோ :—கேசவா! நாளையதினம் சங்கீதக் கச்சேரியாமே! ஆசாமி யார் தெரியுமா உனக்கு?

கேசவ :—ஆம், தெரியும். மோஹனாங்கிதான். அவளை நீர் பார்த்திருக் கலாமே!

தாமோ :—இல்லை. மோஹனாங்கி என்ற பெயரையே நான் கேள்விப் பட்டதில்லை. நாளையதினம் அவளை அவசியம் பார்க்கவேண்டும். நீ என்ன சொல்லுகிறாய்?

கேசவ :—சொல்வதென்ன? நீர் அவளை அவசியம் பார்க்கத்தான் வேண் டும். அவள் அவ்வளவு அழகு வாய்ந்தவள். அவளுடைய வடிவ ழகைப் பார்க்காதவர்கள் கண்களைப் புண்கள் என்றே சொல்லவேண் டும். தவசிகளும் அவளைப் பார்த்த மாத்திரத்தில் அவள் மீது மையல் கொள்வார்களென்பது திண்ணம். நீர் அவளை நேரில் பார்த் தால்தான் நான் கூறுவதின் உண்மை விளங்கும். (சீனு நான்கு தட்டுகளில் சிற்றுண்டி கொண்டுவந்து வைக்கிறான். அவனை கேச வப்பிள்ளை கூப்பிட்டு காதில் இரகசியமாய் ஏதோ சொல்லி அனுப்பு கிறார். அடுத்த நிமிஷத்தில் சீனு ஓர் பிராந்தி புட்டியையும் நான்கு கோப்பைகளையும் கொண்டுவந்து மேஜையின்மீது கோப்பைகளை வைத்து ஒவ்வொன்றிலும் பிராந்தியை ஊற்றிவிட்டுச் செல்கிறான். தாமோதரம் பிள்ளையைத் தவிர, மற்ற மூவரும் ஆளுக்கு ஒரு கோப்பையை எடுத்துக்கொள்ளுகிறார்கள்.)

கேசவ :—(தாமோதரம் பிள்ளையைப் பார்த்து) பிள்ளைவாள்! நீரும் ஒரு கோப்பையை எடுத்துக்கொள்வதுதானே!

தாமோ :—கேசவா! அது மதுபானமல்லவா? அது எனக்குப் பழக்கமே யில்லை. மன்னிக்கவும்.

கேசவ :—என்ன ஐயா! நீர் பண்டைக்காலத்துப் பள்ளியைச் சேர்ந்தவரா யிருக்கிறீர்! இக்காலத்தில் அந்த பானமில்லாமல் யாதொரு சங்கத் திலும் இருக்க முடியாதே! நான் சொல்வதைக் கேளும். அதை எடுத்துக்கொள்ளும்.

மாதவ :—ஆம் பிள்ளைவாள்! கேசவப்பிள்ளை கூறுவது உண்மை. தற்கால நாகரீகத்திற்குத் தகுந்தவாறு நடப்பதுதான் மேன்மை. நாம் எங்கு சென்றாலும் சரி, எத்தகையோரின் நட்பைக் கொண்டாலும் சரி, அவ்வப்போது அவரவர்கள் அநுசரிக்கும் பழக்கங்களைக் கைக்கொண்

டால்தான் நாம் அவர்களுக் கிடையில் பெயரும், புகழும் பெற்று வாழலாம். அவ்விதமில்லாமல் நாம் வேறு விதமாக நடப்போமா ஞல் மற்றவர்கள் நம்மை வெறுத்துத் தள்ளுவார்கள். ஆகையால் எங்கள் வேண்டுகோளை மறுக்கவேண்டாம்.

**தாமோ** :—நண்பர்களே! நீங்கள் சொல்லுவதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். ஓர் சபையில் சிலர் செய்யுங் காரியம் கெடுதலானது என்று தெரிந்தால் நாம் அவர்களை அக்காரியத்தைச் செய்யவொட் டாமல் தடுப்பது நியாயமாகுமே ஒழிய, நாமும் அவர்களுடன் சேர்ந்து அக்காரியத்தைச் செய்வது மதியீனமல்லவா! தவிர, நான் மதுவிலக்குச் சங்கத்தின் அங்கத்தினன். அச்சங்கம் எதற்காக ஏற் படுத்தப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலா மென நினைக்கிறேன்.

**யாவரும்** :—ஆம்! தெரியும். நாங்களும் அச்சங்கத்தில் அங்கத்தினர்களா யிருந்தவர்கள்தான்.

**தாமோ** :—(ஆச்சரியத்துடன்) ஹா! அப்படியா! பின்னர் ஏன் நீங்கள் அச்சங்கத்தின் கொள்கைக்கு விரோதமாக நடக்கிறீர்கள்? சத்தியம் தவறி நடக்கலாகுமோ?

**கேசவ** :—(மாதவராயரைப் பார்த்து) மாதவா! நீர்தான் அவருக்குத் தகுந்த பதில் அளிக்க வேண்டும்.

**மாதவ** :—சரி, அப்படியே. (தாமோதரம் பிள்ளையைப் பார்த்து) பிள்ளை வாள்! நீர் கேட்ட கேள்விக்கு நான் விடை அளிக்கிறேன், கேளும். நாங்கள் மூவரும் எங்கள் நாட்டில் அச்சங்கத்தின் அங்கத்தினர்க ளாவதற்கு முன் சிறு குடியர்களா யிருந்தோம். அச்சங்கத்தைச் சேர்ந்த நண்பர் ஒருவர் எங்களிடம் வந்து அச்சங்கத்தில் அங்கத்தி னர்களாகும்படி எங்களைப் பலவந்தஞ்செய்து வந்தார். அச்சமயத் தில், அச்சங்கத்தைச் சேராத சிலர், எங்களைப் பார்த்து, "ஐயா! நீங்கள் அச்சங்கத்தில் சேருவீர்களானல் பெரிய குடிகாரர்களாகிவிடு வீர்கள். ஆகையால், அதில் சேரவேண்டாம்" என்று சொன்ஞர் கள். நாங்கள் இன்னது செய்வது என்று தெரியாமல், கடைசி யாக, எப்படியும் அச்சங்கத்தைச் சேர்ந்து உண்மையை அறிய வேண்டுமெனத் தீர்மானித்து அச்சங்கத்தில் அங்கத்தினர்களா ஞேம். உண்மையை அறிந்தோம். மதுபானம் அருந்துவதை அறவே விட்டோம். மதுபானம் அருந்தும் மற்றவர்களுக்கும் அச் சங்கத்தால் உண்டாகும் நன்மைகளையும் எடுத்துக் கூறிவந்தோம். இந்நாட்டிற்கு வந்தோம். இச்சங்கத்தைச் சேர்ந்தோம். இச்சங்கத் தின் ஒழுக்கங்களைக் கைக்கொள்ளவே அச்சங்கத்தை முற்றிலும்

மறந்தோம். இச்சங்கத்தின் அங்கத்தினர்களாகிய சில பிரபுக்க ளின் நட்பையும் பெற்ரும். அவர்களால் பெயரும், புகழும் அடைந்தோம். அதுபோலவே நீரும் எல்லாருடனும் ஒத்திருந்து பெயரும் புகழும் அடைய வேண்டுமென்பது எங்கள் கருத்து. ஆகையால், எங்கள் கோரிக்கையை நிறைவேற்றவேண்டும்.

தாமோ :—நண்பர்களே! நீங்கள் சொன்னதைக் கேட்டு அதிக சந்தோஷ மடைந்தேன். ஆனல், ஒரு விஷயம். நான் மதுபானம் அருந்துவ தில்லை என்று அச்சங்கத்தில் பிரமாணம் செய்திருப்பதால், இப் பொழுது உங்களுடைய வேண்டுகோளை நிறைவேற்றுவேனுகில், சத்தியந் தவறினவனுகி விடுவேன். கடவுள் என்னை தண்டிப்பார். இல்லையா?

மாதவ :—நீங்கள் அவ்வளவு சத்தியவந்தரா யிருக்கும்பட்சத்தில் இச்சங் கத்தைச் சேராமலிருந்திருக்கவேண்டும். உமது நண்பர்களாகிய நாங்கள் இவ்வளவு சொல்லியும் எங்கள் வேண்டுகோளை மறுப்பீரா னல் எங்கட்கு மன சமாதானம் உண்டாகாது. பிறகு, உங்க ளிஷ்டம்.

தாமோ :—(தனக்குள்) நானே இந்த அந்நிய நாட்டிற்கு வந்துவிட்டேன். கடவுள் கிருபையால் என் அந்தஸ்த்திற்கேற்ற இத்தனவந்தர்களை யும் சிநேகம் செய்து கொண்டேன். இத்தனை நாட்களாக இவர்க ளுடன் பழகி வந்ததில் இவர்களிடம் துர்ப்பழக்கங்கள் ஒன்றையும் காண்கிலேன். இச்சங்கத்திற்கு வந்து சேர்ந்த பின்னரே, இம்மா திரியான, அதாவது, மதுபானம் அருந்துதல், சீட்டு ஆடுதல், முத லிய பழக்கங்கள் நடைபெறுவதைக் காண்கிறேன். இப்பழக்கங் களில் யாவருமே கலந்துகொள்ளுகிருர்க ளென்பதையும் அறிகி றேன். இப்பொழுது இவர்களுடைய வேண்டுகோளை மறுப்பே னுகில் இவர்கள் என்மீது பகை கொள்வார்கள்போலிருக்கிறது. இச்சமயம் இவர்களை சந்தோஷப்படுத்துவதே நலமாகுமென நினைக் கிறேன். என்ன செய்வது, காலத்திற்கு ஏற்றபடிதான் நடக்க வேண்டும்.

மாதவ :—நண்பரே! என்ன ஏதோ ஆழ்ந்த யோசனையி லிருக்கிறீர்கள்? நாங்கள் கூறுவது உமக்கு மனக்கஷ்டமா யிருந்தால் உமது இஷ் டப்படியே செய்யும். அதற்காக நீங்கள் வருத்தப்படவேண்டாம். காலதாமதமாகிறது. உங்கள் பொருட்டாக நாங்களும் அருந்தாம லிருக்கிருேம்.

தாமோ :—நண்பர்களே! உங்களுடைய இஷ்டப்படியே செய்கிறேன். வீணுக உங்களுடைய மனதைக் கலங்கச் செய்வதில் எனக்குப் பிரிய

மில்லை. நீங்கள் யாவரும் இவ்வளவு கூறும்பொழுது அதை எற்றுக் கொள்ளாமல் ஒரே பிடிவாதமா யிருப்பதுங் கூடாது. ஆகையால், எதோ சிறிதளவு உட்கொள்ளுகிறேன். நீங்களும் உட்கொள்ளலாம். (மதுவை அருந்துகிறுர் - மற்றவர்களும் அருந்துகிறுர்கள்.)

**கேசவ**:—யார் அங்கே ? (சேவகனைக் கூப்பிடுகிறுர்.)

**சேவ**:—பிரபு ! இதோ வந்துவிட்டேன்.

**கேசவ**:—சீனுவை லிக்கர் கொண்டுவரச் சொல்.

**சேவ**:—பிரபு ! அப்படியே (போகிறுன்.)

(சீனு மற்ெெருரு பிராந்தி புட்டியுடன் வந்து, தாமோதரம் பிள்ளை யைத் தவிர, மற்ற மூவருக்கும் கோப்பைகளில் பிராந்தியை ஊற் றுகிறுன்.)

**தாமோ**:—சீனு ! எனக்குச் சிறிது ஊற்றுவாய் !

**மாதவ**:—பிள்ளைவாள் ! உடம்பிற்கு ஆகாது. சிறிதளவு போதும். அதிகம் வேண்டாம்.

**தாமோ**:—நண்பரே ! அதிகமில்லை, சிறிதளவுதான். (சீனுவை அதிகம் ஊற்றும்படிச் செய்கிறுர்.) (சிற்றுண்டி அருந்தாகிவிடுகிறது.)

**கேசவ**:—இன்றிரவு 9-30 மணிக்கு இச்சங்கத்தின் அங்கத்தாரால் "சரசாங்கி" என்னும் நாடகம் நடைபெறும். அதற்கு நாம் யாவரும் போகவேண்டாமா ? என்ன சொல்லுகிறீர்கள்.

**நாரா**:—சொல்வதென்ன ? அவசியம் போகத்தான் வேண்டும். இப்பொழுது நாம் வீட்டிற்குப் போய் இரவு போஜனத்தை முடித்துக் கொண்டு சரியாக 9 மணிக்குப் புறப்படலாம்.

(தாமோதரம் பிள்ளையைப் பார்த்து) நண்பரே ! உமக்கும் சம்மதந் தானே ?

**தாமோ**:—(சிறிது மயக்கத்துடன்) எங்கே போவது ? மோ-ஹ-ஞ-ங்-கி யிடத்திலா ?

**மாதவ**:—மோஹனங்கியின் கச்சேரி நாளையதினம் நடைபெறும். அப் பொழுது போகலாம். இன்றிரவு சரஸாங்கி நாடகம். அதற்கு வருகிறீர்களா ?

**தாமோ**:—எ - ன - க் - கு மயக்கமாயிருக்கிறது. நா - ன் நாடகத்திற்கு வருவதைப்பற்றி பி - ற - கு சொல்லி அனுப்புகிறேன்.

**மாதவ**:—அப்படியே ஆகட்டும். நாம் போகலாம். (எல்லோரும் போகிறுர்கள்.)

**(காட்சி முடிகிறது.)**

---

முதல் அங்கம். இரண்டாவது காட்சி.

இடம் :—தாமோதரம் பிள்ளையின் மாளிகையில் ஓர் அறை.

காலம் :—பிற்பகல்.

தாமோதரம்பிள்ளை ஓர் நாற்காலியின்மீது உட்கார்ந்துகொண்டு மதி மயங்கிப் பாடிக்கொண்டிருக்கிறார். வேலைக்காரனாகிய தாண்டவ ராயன் அவரை ஆச்சரியத்துடன் நோக்கியவண்ண மிருக்கிறான்.

தாமோ :—என்னா எழவுடா! இந்த வூட்டுலே வந்து ஆப்புட்டுக்கினேனே! அப்பிடீ க் - கிளப்புக்குப் போனாக்கா - இன்னம் - கொஞ்சம் - போட லாமே ! அடேய் ! தாண்டவா ! அம்மா - யிருக்காங்களா ?

தாண்ட :—உம், யிருக்காங்கோ, எஜமான்ரே ! என்னா கொஞ்சம் பூட லாமே அங்கிருங்கோ ! இன்னது யின்னு எங்கிட்ட சொன்னாக்கா நானு போயி கொண்ணாந்தூடுரேன் !

தாமோ :—அடேய் ! அம்மாவை கூப்பிடு ?

தாண்ட :—இதோ, கூப்பிட்டுக்கினு வாரேன் (போகிறான்)

தாமோ :—பாரு, இண்ணைக்கி அவ, ரூபா கீபா குடுக்காத மாத்திரம் போவுட்டும் ? * * *

(வேலைக்காரனும் கற்பகராஜமும் வருகிறார்கள்.)

கற்ப :—எதற்காக என்னைக் கூப்பிட்டீர்கள் ?

தாமோ :—கற்பகம் ! அவனண்டை அஞ்சி ரூபா நோட்டு ஒண்ணு குடு !

கற்ப :—ஐந்து ரூபா நோட்டை எதற்காக அவனிடம் கொடுக்கும்படி சொல்லுகிறீர்கள் ?

தாமோ :—குடு இண்ணா குடுத்துடு - மருவாதையா ! மறு பேச்சே வா ணாம் !

கற்ப :—(தனக்குள்) சரிதான், இன்று ஏதோ புத்தி தடமாட்டத்தி லிருக் கிறார்போலும். (வேலைக்காரனைப் பார்த்து) ஏண்டா ! எதற்காக பணத்தை உன்னிடம் கொடுக்கச் சொல்லுகிறார் ?

தாண்ட :—அம்மா ! என்னாத்துக்கிண்ணு ஐயா எங்கிட்ட ஒண்ணுமே சொல்லலே. ஐயாவைக் கேட்டு சொல்லட்டுமா ?

கற்ப :—அவ்விதமே கேட்டுச் சொல் ?

தாண்ட :—அப்பிடியே ஆவுட்டும். (தாமோதரம் பிள்ளையிடம் போய்) எஜமான்ரே ! என்னாத்துக்கு அம்மாவை எங்கிட்ட ரூபா குடுக்கச் சொன்னீங்கோ ?

தாமோ :—அடேய் ! நானு அப்பறம் சொல்றேன் ! முதல்லே பணம் வாங்கிக்கினு வந்தூடு ?

தாண்ட :—எஜமான்ரே ! அப்பிடியே ஆவுட்டும். (கற்பகராஜமிடம் வந்து) அம்மா ! ஐயா, பணத்தை வாங்கிக்கினு வந்தாக்கா சொல்றேண்ணு ராங்கோ !

கற்ப :—அப்படியா! நல்லது! அவ்விதமே பணத்தை உன்னிடம் கொடுக்கிறேன். அதைக்கொண்டு உன்னை என்ன செய்யும்படி சொல்லுகிறார் என்பதை உடனே என்னிடம் வந்து தெரிவிக்கிறாயா?

தாண்ட :—அப்பிடியே ஆவுட்டும் அம்மா. ஆனுக்கா ஒரு சங்கதி, அது சொல்ற சமாச்சாரமா யிருந்தா ஐயாவை நீங்கோ கேட்டபோதே சொல்லியிருக்க மாட்டாங்களா? அது என்னமோ ரவசியமாத்தானிருக்கும். அதை லேசிலே எங்கிட்ட சொல்லிடுவாரா?

கற்ப :—அதை அவர் உன்னிடம் சொன்னால் என்னிடம் வந்து தெரிவிக்கிறாயா?

தாண்ட :—அதை யாரு கிட்டவும் சொல்லாதே இண்ணு சொன்னுக்கா, நானு, எப்பிடி உங்ககிட்டே வந்து சொல்ரது?

கற்ப :—இந்தத் தடவை மாத்திரம் என்னிடம் வந்து சொல்லிவிடு. அதை நான் இரகசியமாய் வைத்துக் கொள்ளுகிறேன்.

தாண்ட :—அப்பிடீண்ணு சொல்லிடுறேன். மறந்து - கிறந்து - எஜமாங்கிட்டே சொல்லிட்டிங்களோ! என் உயிரை வாங்கிடுவாரு!

கற்ப :—நீ யாதொன்றுக்கும் பயப்படவேண்டாம். உனக்கு ஒரு தீங்கும் நேரிடாதபடி பார்த்துக்கொள்ளுகிறேன்.

தாமோ —(கோபத்துடன்) அடேய்! மடையா! கொண்ணுந்தியாடா பணம்? எவ்வளவு நேரண்டா!

தாண்ட :—(திடுக்கிட்டு) ஐயா! இதோ அம்மா பொட்டியைத் தொறந்துகிணு யிருக்காங்கோ. அம்மா! ஐயா கோவிச்சுக்கிறாரு! ஜல்தி குடுங்கோ? (நோட்டை வாங்கிக்கொண்டு வந்து தாமோதரம் பிள்ளையிடம் கொடுக்கக் கையை நீட்டினவண்ண மிருக்கிறான். அதை அவர் வாங்காமல் அவனைச் சமீபத்தில் வ்ரும்படிச் சைகை செய்கிறார்.)

தாமோ :—(மெல்லிய குரலில்) அடேய்! இந்தப் பணத்தைக் கொண்டு போயி, சுப்பையா பிள்ளை கடையிலே கொடுத்து ஒரு எக்ஷா புட்டி வாங்கிக்கிணு மீதி சில்லரையையும் வாங்கிக்கிணு ஓடி வா? இத்தை, அம்மா கிட்டே சொல்லாதே, தெரியுமா?

தாண்ட :—ஐயா! சுப்பையா பிள்ளை கடையிலே வெறுஞ் சாராயம், பிராந்திதானே விக்கிறது. சாராய புட்டியா வாங்கிக்கிணு வரச் சொல்றிங்கோ?

தாமோ :—சாராயமில்லடா முட்டாள்! "எக்ஷா" இண்ணு சொல்லு ஒரு புட்டி குடுப்பாங்கோ, அத்தை வாங்கிக்கிண்ணு வா?

தாண்ட :—ஆமாங்கோ, எஜமான்ரே! எனக்குக் கூட தெரியும். புட்டியிலேதான் சாராயம், பிராந்தி எல்லாம் ஊத்தி வச்சிக்கிணு விக்குறாங்கோ! அத்தானே வோணும்?

தாமோ :—அது அல்லடா! இது ஒரு மருந்துடா!

தாண்ட :—அவங்கொ கடையிலே, மருந்தே விக்கிறதில்லே எஜமான்ரே! சாராயம், பிராந்தி, வொயினு, இத்தான் விக்கிறது!

தாமோ :—அடேய்! நானு சொல்றப்பலே வாங்கி வா?

தாண்ட :—என்னண்ணு! "எக்ஷா மருந்து புட்டி ஒண்ணு குடுயா" இண்ணு கேக்குறதுங்களா?

தாமோ :—அப்பிடி யில்லடா! "எக்ஷா ஒரு புட்டி" இண்ணு கேள்டா?

தாண்ட :—அது மருந்து இண்ணு சொல்றிங்களே! அத்தான் "எக்ஷா மருந்து புட்டி" இண்ணு கேக்குறேன்! இதிலே என்ன தப்பு?

தாமோ :—அடேய்! அதனப்பிரசங்கி! நானு சொல்ருப்பலே கேட்டு வாங்கிக்கிணு வா! இல்லாகிட்டி உன்னை ஒழிச்சிடுவேன்! (வேலைக்காரனை உதைக்கிறார்.)

தாண்ட :—ஐயையோ! வாணம் - வாணம்! நீங்கோ சொல்ருப்பிலியே "எக்ஷா மருந்து" இண்ணு சொல்லி வாங்கியாறேன்.

தாமோ :—அடேய்! மடையா! மறுபடியும் "எக்ஷா மருந்து" இண்ணு சொல்றியேடா! "எக்ஷா - எக்ஷா", சொல்லு?

தாண்ட :—அத்தான், எக்ஷா! எக்ஷா! எக்ஷா மருந்து! எக்ஷா மருந்து! (என்று பலமாய்ச் சொல்லிக்கொண்டே ஓடுகிறான். இந்த ஓசையைக் கேட்டு கற்பகராஜம் தன் புருஷனிடம் ஓடி வருகிறாள்.)

கற்ப :—(தனக்குள்) என்ன சப்தம் அது! வேலைக்காரன் ஏதோ "எக்ஷா மருந்து" என்று சொல்லிக்கொண்டே ஓடுகிறானே! எக்ஷா என்பது ஒருவித பிராந்தியின் பெயரல்லவா! ஒரு வேளை என் நாதர் அதை வேலைக்காரனை அனுப்பி வாங்கிக்கொண்டு வரச்சொல்லியிருப்பார் போலிருக்கிறது. ஆ! காரியம் கெட்டுவிட்டதே! (புருஷனிடம் வந்து) இதற்குத்தானா பணம் கேட்டீர்கள்? இதுவரையிலும் இவ்விஷயங்களை அறியாமலல்லவா நீங்கள் கேட்டபொழுதெல்லாம் பணம் கொடுத்துக்கொண்டு வந்தேன்! ஐயோ! நான் மதிமோசம் போய்விட்டேனே! இந்நாட்டிற்கு வந்து இப்படி குடிக்கக் கற்றுக்கொண்டீரே! இன்னும் என்ன செய்வீர்களோ தெரியவில்லையே! இப்பழக்கத்தால் குடித்தனம் பாழாகிவிடுமே!

தாமோ :—(திடுக்கிட்டு - தனக்குள்) ஆ! கெட்டது காரியம்! நான் செய்யுங் காரியம் இந்த மூட்டாள் வேலைக்காரனா லல்லவா என் மனைவிக்குத் தெரிந்துவிட்டது. இருந்தபோதிலும் இச்சமயம் ஓர் உபாயத்தால் இவள் கொண்டுள்ள கெட்ட அபிப்பிராயத்தை நீக்கவேண்டும்.

கற்ப :—என் ஒன்றும் பேசாமலிருக்கிறீர்கள்? நீங்கள் செய்துவருங்காரியத்தை நான் தெரிந்து கொண்டேனே என்று வருத்தமோ? இவ்விதமாய் எத்தனைநாட்களாய் நடந்துவருகிறது? இப்பழக்கத்தை உங்களுக்கு யார் கற்றுக்கொடுத்தது? நீங்கள் மதுவிலக்குச் சங்கத்தைச்சேர்ந்தவராயிற்றே! அதையும் மறந்துவிட்டீர்களே!

தாமோ :—கற்பகம்! என் ஒன்றும் தெரியாமல் வாயில் வந்தபடி பேசுகிறாய்? நானா குடியன்? விஷயத்தை அறியாமல் பேசாதே!

கற்ப:—நான் விஷயத்தை அறிந்தே பேசுகிறேன். ஏன் தாண்டவன் சற்றுமுன்பு "எக்ஷா மருந்து" என்று சொல்லிக்கொண்டே ஓடினுன்? நீங்கள் மதுவிலக்குச் சங்கத்தின்பொருட்டு செய்துவந்த உபந்நியாசங்களில், "எக்ஷா பிராந்தி" என்பது என்ன, "ஜார்ஜ் போர்த்" விஸ்கி, என்பது என்ன, "லேகர் பிராண்ட்" பீர், என்பது என்ன, என்ற விஷயங்களை சொல்லிவந்த பொழுது நான் கேட்டிருக்கிறேனே! ஆகையால், எக்ஷா, என்றவார்த்தை இப்பொழுது என் காதில் விழுந்ததும் அப்பேர்ப்பட்டவார்த்தை இவ்விடம் வரக் காரணமென்ன என்று சந்தேகித்தவளாய் இவ்விடம் வந்தேன். மேலும், சற்றுமுன்புதானே என்னிடமிருந்து வேலைக்காரன் பணத்தை வாங்கிக்கொண்டுவந்தான்! பணம் எதற்காக என்று கேட்டபொழுதும் யாதொருபதிலும் கூறவில்லை! இப்பொழுதாவது சொல்லுங்களேன்?

தாமோ:—அஜீரணமாயிருப்பதால் மருந்துவாங்கிக்கொண்டு வரும்படிச் சொல்லியிருக்கிறேன்.

கற்ப:—ஐந்து ரூபாய்க்கு என்ன மருந்து! முன்பே என்னிடம் சொல்லியிருந்தீராஞல் மிளகு கஷாயம் செய்துகொடுத்திருப்பேனே! கை கண்ட ஔஷதம் நம்மிடமிருக்க, ஐந்து ரூபாய்க்கு மருந்துவாங்க வேண்டுமா? வெகு அழகாயிருக்கிறது!

தாமோ:—நாட்டு மருந்துகள், கஷாயங்கள்தான் எனக்குப்பிடிக்காதே! அதனுல் தான் சீர்மை மருந்தை வாங்கிக்கொண்டு வரும்படிச் சொன்னேன்.

(தாண்டவராயன் பிராந்திபுட்டியுடன் வருகிறுன்)

தாண்ட:—எஜமான்ரே! இதோ கொண்ணுந்தூட்டேன்!

கற்ப:—தாண்டவா! என்னடா அது?

தாண்ட:—அம்மா! யித்தான், எக்ஷா மருந்து, ஐயா வாங்கிக்கிண்ணு வரச்சொன்னுங்கோ!

கற்ப:—என்ன மருந்து? எக்ஷா மருந்தா? இப்படிக்கொடு பார்க்கலாம்? (தாமோதரம் பிள்ளை வேலைக்காரனைக் கொடுக்கவேண்டாமென்று சைகைசெய்கிறுர்.)

தாண்ட:—அம்மா! நானு கும்பிடுறேன்! என்னை மன்னிக்கணும்! இத்தை, பொம்புளேங்கொ கையிலே குடுக்கக்கூடாது இண்ணு சொல்லி குடுத்தாங்கொ கடையிலே!

கற்ப:—மருந்துதானே! கொடுத்தால் என்ன?

தாண்ட:—மருந்தில்லமா பி-பிராந்தீ! (அங்கிருக்கும் ஓர் மேஜையின் மீது புட்டியை வைத்துவிடுகிறுன். தாமோதரம் பிள்ளை கோபத்தால் முகத்தை நெளித்து, பற்களைக்கடித்து, காலால் தரையில் சப்தம்செய்கிறுர்).

கற்ப—:(தனக்குள்)ஆம், நான் நினைத்தபடியே ஆகிவிட்டது! (புருஷனைப் பார்த்து) இது யார்செய்யுங்காரியம்? நீங்களா இத் தகாத காரியத்தைச்செய்வது? இதுவரையிலும் பொய்பேசாதவர் இதை மறைக்கப்

பொய்யையும் பேசிவிட்டீர்களே! இந்த மதுபானப்பழக்கத்தால் இன்னும் என்ன தான் செய்யமாட்டீர்கள்? ஐயோ! குடியைக்கெடுக் கப்புறப்பட்டுவிட்டீர்களே! இதுதகுமா? (வேலைக்காரனைப்பார்த்து) அடேய்! நீயும் இக்காரியத்திற்கு உடந்தையாகிவிட்டாயல்லவா?

தாண்ட:—இல்லம்மா! ஐயாவந்து, என்னை எக்ஷா மருந்து வாங்கிகிட்டு வாடா இண்ணுசொல்லி கையிலே பணம் குடுத்தாங்கோ. மருந்து தானே இண்ணு நெனச்சி, கடையிலே "எக்ஷா மருந்து" குடுயா இண்ணு கேட்டேன். அவுங்க என்னைப்பாத்து, "எக்ஷா மருந்தா எக்ஷா மருந்து என்று இல்லை, எக்ஷா பிராந்தி இருக்கிறது. அதுவாவேண்டும்" இண்ணு கேட்டாங்கோ அதைத்தான் குடுயா இண்ணுகேட்டு வாங்கிகிட்டு வந்தூட்டேன். இதில்லே என்னம்மா தப்பு?

கற்ப:—அடேய்! அறிவில்லாதவனே! பிராந்தி என்றால் என்ன வென்று தெரியாதா உனக்கு? நாம் நமது நாட்டிலிருந்தபொழுது உன் எஜமானர் மதுவிலக்குச்சங்கத்தைச் சேர்ந்திருந்து பல உபந் நியாசங்கள் செய்துவந்தாரே தெரியுமா? அப்பொழுது ஓர் நாள் நீ கள் குடித்தாயென்று உன்னை ஏசி இனிமேல் கள் குடிக்கக்கூடாது என்று கண்டித்தாரே தெரியுமா? அக்கள்ளைப்போல் இதுவும் ஓர் மதுபானம். மருந்தல்ல தெரியுமா?

தாண்ட:—மனசுலே ஆச்சி. அப்பொவே-அது-சாராயம் இண்ணு ஐயாகிட்டே சொன்னேன். ஐயா வந்து, "சாராயமில்லடா-மருந் துடா" இண்ணு சொன்னாங்கொ, அத்தான் ஏமாந்துபோயி வாங் காந்தூட்டேன். (இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் தாமோ தரம் பிள்ளை புட்டியை எடுத்துக்கொண்டு மெல்ல வெளியே போய் விடுகிறார்) ஐயோ! அம்மா! குடுத்தனம் பழாப்பூடுமே! நானு அப் பிடித்தான் கள்ளு குடிச்சி கெட்டுப்போயி, பொண்டாட்டி புள்ளை எல்லாம் கஞ்சிக்கில்லாமே, திண்டாட்டம் போட்டாச்சி. கடசீலே, ஐயா, மவராஜரு, எனக்கு புத்தி சொல்லிவந்தாரு. என்னமோ-மருந்துகூட குடுத்தாரம்மா-இப்போ, குடியே வுட்டுட்டேன். அத் தை இப்போ கண்டா, உ-வா-வாந்தி வருது. இப்பொ எல்லா ரும் என்னை வோக்கியன் இண்ணு சொல்றாங்கோ. என் பொண் டாட்டிக்கி காதிலே பொன்னோலை கூட சேஞ்சி போட்டிருக்கி றேன்!

கற்ப:—நீ மஹா யோக்கியன்தான்! உன் எஜமானர் உன்னை என்ன சாமான் வாங்கிக்கொண்டு வரச்சொல்லுகிறார் என்பதை என்னிடம் வந்து தெரிவிக்கும்படிச் சொன்னேனே! ஏன் என்னிடம் வந்து கூறாமல் போய்விட்டாய்? ஏண்டா?

தாண்ட:—அம்மா! நீங்கொ சொன்னது நெசந்தான். ஆனா என்னை மன்னிக்கணும். ஐயா வந்தா-சீக்கிரம் மருந்து வாங்கிவாடா இண்ணு சொல்லி என்னை அடிக்கவந்தாரு. ஐயாவுக்கு என்னமோ ஒடம்புக்கு-பாவம்! சீக்கிரம் ஓடிப்போய் வாங்காந்தூடலாம்-இண்ணு போன அவசரத்திலே உங்களை மறந்தேபூட்டேன்.

**கற்ப :**—சரிதான் ! உன்மீது பிசகில்லே. இப்பொழுது அந்த பிராந்தி புட்டி அவரிடம் சேராவண்ணம் செய்யவேண்டும். எங்கே அந்த புட்டி ?

**தாண்ட :**—இதோ ! இங்கேத்தான் வச்சேன். (பார்த்து) ஐயோ ! அம்மா ! புட்டியைக் காணுமே ! சர்தான், அவரு எடுத்துக்கிணு பூட்டாரோ-என்னமோ !

**கற்ப :**—அவர் எங்கே போனூர் தெரியுமா ?

**தாண்ட :**—உம். அவரு இப்பிடித்தான் போனுரு.

**கற்ப :**—நல்லது. நாமிருவரும் அவரிடம் போய் அந்த புட்டியை அவரிட மிருந்து அபகரித்துக்கொண்டு வந்துவிடலாம். வா - போகலாம். (போகிருள்.)

**தாண்ட :**—அத்தான் நல்ல வோசனே. பொண்டாட்டிங்கோ, வாய்ச்சா - இப்பிடி இருக்கோணும். இப்பிடியில்லாமே, புருஷங்கூட பொண் டாட்டியும் சேந்து குடிச்சா - குடுத்தனம் என்னுவரது ? ஐயா, என்னேக் குடிக்கவாணுமிண்ணு முன்னே எவ்வளவு கண்டிச்சாரு ? இப்போ நா போயி அவரைக் கண்டிக்கிறேன், நாக்கைப் புடிங்கி கிணு சாராரு பாரு. (போகிருன்.)

(காட்சி முடிகிறது.)

---

**முதல் அங்கம்.** **மூன்ருவது காட்சி.**

**இடம் :**—தாமோதரம் பிள்ளேயின் மாளிகையில் சிற்றுண்டி அருந்தும் ஓர் அறை.

**காலம் :**—பிற்பகல். தாமோதரம் பிள்ளே, கேசவப்பிள்ளே, மாதவராயர், நாராயணேயா ஆகிய நால்வரும் ஓர் மேஜையைச்சுற்றிலும் நாற்காலி களில் உட்கார்ந்துகொண்டிருக்கிருர்கள். ஓர் பிராந்தி புட்டியின் வாய் திறக்கப்பட்டும், பிராந்தி நிரப்பப்பெற்ற நாலு கோப்பைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. கற்பகராஜமும் தாண்டவராயனும் சிறிது தூரத்தில் ஓரிடத்தில் மறைந்துகொண்டு இவர்களே நோக்கியவண் ணமிருக்கிருர்கள்.

---

**மாதவ :**—பிள்ளேவாள் ! அப்பொழுது வேண்டாமென்று சொன்னீர் களே ! இப்பொழுது விலேயுயர்ந்த சரக்குகளாகவே பார்க்கிறீர்களே ?

**தாமோ :**—ஆம், மாதவராயர். சாப்பிட்டதையே சாப்பிடுவதென்ருல் எத்தனே நாட்களுக்கு மனத்திற்குப் பிடிக்கும் ! புதிதான சரக்கு களேப் பார்க்கவேண்டாமா ? இன்றைக்கு " எக்ஷா பிராந்தி ". நாளேய தினம் " பிஸ்கத் பிராந்தி " க்கு உத்தரவு செய்துவிடுகி றேன்.

கேசவ :—பேஷ்! அதுதான் ஜெண்டில் மென்னுக்கு அழகு! இருந்தாலும் இப்படி அல்லவோ இருக்கவேண்டும்!

நாரா :—ஆம்! ஆம்! உயிர் உடம்பிலிருக்கிற வரையில் நன்ருகச் சாப்பிட்டுவிட்டு வேண்டியதை அநுபவித்துவிட்டால் தான் மறுபிறப்பு வாய்க்காது. இன்றிரவுதான் மோஹனங்கியின் சங்கீதக்கச்சேரி. கச்சேரி முடிந்ததும் அவளுடைய நட்பையும் அவசியம் பெறவேண்டும்!

தாமோ :—சந்தேகமென்ன இருக்கிறது? அவசியம் பெறத்தான் வேண்டும். யார் அங்கே? (பரிச்சாரகன் வருகிருன்)

பரி :—அடியேன், பிரபு!

தாமோ :—நான்கு தட்டுகளில் சிற்றுண்டி கொண்டுவா?

பரி :—அப்படியே, பிரபு! (போகிருன்.)

தாமோ :—மோஹனு நல்ல சௌந்தரியவதி என்று கேள்வி. உண்மைதானு?

நாரா :—உண்மை!
(பரிச்சாரகன் நான்கு தட்டுகளில் சிற்றுண்டி கொண்டுவந்து ஒவ்வொருவருக்கும் ஓர் தட்டை வைத்துப் போகிருன்).

தாமோ :—நாராயணையா! மோஹனு யாரைப்போலிருப்பாளென்பதைச் சொல்லுவீர்களா?

நாரா :—அவளை யாருக்கு ஒப்பிடுவது? சபையில் பார்த்துவிடலாமே! அதற்குள் என்ன ஐயா அவசரம்!

தாமோ :—இல்லை, ஒருவேளை நான் அவளைப் பார்த்திருக்கக் கூடுமா என்பதை அறியும்பொருட்டுத்தான்.

நாரா :—நீங்கள் அவளைப் பார்த்திருக்கமாட்டீர்கள். அவள் இந்த ஊருக்கே புதிதாக வந்தவள். இதுதான் அவளுடைய முதல் கச்சேரி.

தாமோ :—நல்லது வயது என்ன?

நாரா :—ஏன் ஐயா அவ்வளவு அவசரம்? இன்னும் கொஞ்சம் நாழி சென்ருல் அவளை நேரிலேயே பார்த்துத் தெரிந்துகொள்ளலாமே?

மாதவ :—நாராயணையா! அவர் கேட்பதற்கு உமக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறதுதானே! வீணுய் அவருக்கு என் மனச்சஞ்சலத்தைக் கொடுக்கிறீர்கள்? அவருக்கு வேண்டியதைக் கேட்டு சிறிது நேரம் ஆநந்தப்படட்டுமே! பிள்ளைவாள்! உமக்கு காமாட்சியைத் தெரியுமல்லவா! அவளுடைய வயதிற்கும் குறைவுதான். ஆனல் மோஹனு அவளைவிட மிக்க அழகு வாய்ந்தவள்.

தாமோ :—அப்படியா! (புன்முறுவலுடன்) அவள் ஊரெது?

மாதவ :—திருவிடைமருதூர் என்று சொல்லுகிருர்கள். உண்மையில் பவானியில் பிறந்து, மதுரையில் வளர்ந்து, ஓர் அரசனின் நட்பைப் பெற்று சிலகாலம் வரையில் அவனுடன் வாழ்ந்து வந்தாளாம்.

தாமோ :—ஓர் அரசனிடம் வாழ்ந்து வந்தவள் ஏன் இப்பொழுது வெளிக் கிளம்பி வந்துவிட்டாள் ?

மாதவ :—அவளோ தாசியின் குலத்தைச் சேர்ந்தவள். அவளுடைய குல சம்பிரதாயப்படி சபைநடுவே சங்கீதக்கச்சேரிகள் பல செய்து பெயரும் புகழும் அடையவேண்டுமென்றே இப்படி வெளிக்கிளம்பி வந்துவிட்டாள்.

கேசவ :—நண்பர்களே ! நாழியாகிவிட்டது. நாம் வீட்டிற்குப் போய் இரவு போஜனத்தை முடித்துக்கொண்டு சரியாக 9 மணிக்கு கச்சேரிக்குப் புறப்படலாம். தாமோதரம் பிள்ளை முதலில் புறப்பட்டு வரட்டும். பின், நாம் யாவரும் அவருடன் சேர்ந்து போகலாம்.

நாரா :—அப்படியே ஆகட்டும். எழுந்திருங்கள். நாம் போகலாம். (நாராயணையா, கேசவப்பிள்ளை, மாதவராயர் ஆகிய மூவரும் போகிறார்கள். தாமோதரம் பிள்ளை மதிமயங்கி பாடிக்கொண்டிருக்கிறார். இச்சமயத்தில், கற்பகராஜமும், வேலைக்காரனும் மறைவிடத்திலிருந்து வருகிறார்கள்).

கற்ப :—என்ன ! குடித்தாய்விட்டதா ? (பதிலில்லை)

கற்ப :—இது என்ன பாட்டு ? குடிவெறியோ ! இதோ இந்தப்பக்கம் திரும்பிப் பாருங்கள் ?

தாமோ :—(வாய் குளறிக்கொண்டு) யா - ர் - அது ? என் - கிட்ட - வார் - ரது ? போ - தூர ! — போனுயா ! - இல்லாகிட்டி - உதைக்கட்டுமா ?

கற்ப :—(திடுக்கிட்டு தனக்குள்) மதுபானத்தின் செய்கைதான் என்னே ! தன்னையும் மறந்து வாய்க்கு வந்தபடி வார்த்தைகளையும் வெளியிடுகின்றனரே ! (புருஷனைப் பார்த்து) சமீபத்தில் வந்தால் உதைத்துவிடுவீர்களோ ! நீங்கள்தான் புத்தி கலங்கியிருக்கிறீர்கள் ! உங்களைத் திருத்துவதற்கே நான் இவ்விடம் வந்திருக்கிறேன். அதற்கு வெகுமானமாக உங்களுடைய உதைகளையும் பெறவேண்டியதாயிருந்தாலும் பெற்றுக்கொள்ளுகிறேன்.—அது இருக்கட்டும். இவர்களுடைய நட்பு உங்களுக்கு எத்தனை நாட்களாக இருந்துவருகிறது ? கடைசியில் இப்பேர்ப்பட்டவர்களையா நீங்கள் சிநேகம்கொண்டிருக்கிறீர்கள் ? இனி குடித்தனம் அழியவேண்டியதுதான் !

தாண்ட :—ஆமாம்மா ! எங்கொ குடுத்தனங்கூட இப்பிடித்தான் குட்டிச்சுவராப் பூட்டுது. இப்போ குடியை விட்டுவிட்டேன், நல்லாக்கிறேன். உம் - ஐயாவுக்குச் சொல்லுங்கோ !

தாமோ :—அடேய் ! நீயுமடாகூட சேர்ந்துக்கிணு பேசுறாய் ! வந்தேன் இண்ணு குடலைப் பிடுங்கிடுவேன்.

தாண்ட :—எங்குடலைப் புடுங்கிறத்துக்கு உங்களாலே ஆவுமா ? என்னமோ, புலி, கிலி வந்தாக்கா, அத்தாலே ஆவும். நானு, என்னு, நல்லத்துக்குதானே சொல்றேன் !

கற்ப :—இது என்ன சண்டை ? முன் ஒரு காலத்தில் அவன் மதுபானம் அருந்தினனென்று அவனை ஏசிக் கண்டித்தீர்களே ! இப்பொழுது அவன் உங்களைக் கண்டிக்கிறான். இதுவும் ஒரு காலம்தான் ! இப்படி மதுபானம் உண்டு கெட்டுப்போவதற்குத்தானு இதுவரையிலும்,

பணம், பணம் என்று என்னைக் கேட்டு வாங்கிக்கொண்டு போனீர்கள்? நீங்கள் மதுவிலக்குச் சங்கத்தைச் சேர்ந்து செய்துவந்த பிரசங்கங்கள் எல்லாம் இப்பொழுது எங்கே போய்விட்டன? சொல்வதொன்று, செய்வதொன்ரு? இந்தப் பழானா நாட்டிற்கு வந்து சேரத் தகாதவர்களுடன் சேர்ந்து வருவதினுலல்லவா இத்தகாத காரியங்களில் பிரவேசித்துவிட்டீர்கள்! இன்னும் * * *

தாமோ:—என்னடி! ரொம்பொ - ரொம்பொ பேசரே? யாரடி குடியன்? நானு? அதுபோல இன்னெருவாட்டி சொன்னே—பார்த்துக்கோ— பல்லே ஒடைச்சிடுவேன்!

கற்ப:—(திடுக்கிட்டு தனக்குள்) ஹா! என்ன காலம்! என் நாதர் இது வரையிலும் என்னை "அடி" என்று சொன்னதே கிடையாது. இப்பொழுது தன்னையும் மறந்து என்னையும் மரியாதைக் குறைவாகப் பேசுவதுமன்றி பல்லேயும் உடைப்பேன் என்று கூறுகிருரே!— ஹா! ஈசா! இவரை நான் எப்படித் திருத்துவது! என் மானம் குலேகிறதே! (கண்ணீர்விடுகிருள். இச்சமயத்தில் கற்பகராஜத்தின் குழந்தை வருகிறது)

குழந்தை:—அம்மா! ஏன் அழறிங்கோ? அப்பா உங்களே அடிச்சாங்களா? எம்மா?

கற்ப:—என் செல்வமே! உன் தகப்பனருக்கு நீயாவது புத்தி சொல்லடா! உன் தகப்பனர் குடித்துக் கெட்டுவிடுகிருரடா!

தாமோ:—அடீ! அறிவு இல்லாதவளே! குடி, குடி இண்ணு சொல்லவாணும் அங்குறேன் — இன்னும் அதையே சொல்லுரியா! பார், உன்னே என்ன பண்ரேன் இண்ணு! (ஆசனத்தை விட்டு எழுந்திருந்து மனேவியை அடிக்க வருகிருர். அச்சமயத்தில் குழந்தை ஓடிவந்து தடுக்கிருன்)

குழ:—அப்பா! அம்மாவை ஏன் அடிக்கிறீங்கோ? அம்மா நெஜத்தை தானே சொல்ருங்கோ! நானுகூட அண்ணேக்கு நீங்கோ புட்டியைத் துறந்து கிளாஸ் டம்ளரிலே ஊத்திக் குடிக்கச்சே பாத்தேனே! அப்போத்தான், இதோ - இந்த சிப்பாயி என் கிட்டவந்து, "தம்பி, தம்பி! உங்கய்யா ஒயினு குடிக்கிருங்கோ, நீயும் போயி குடி" இண்ணு சொன்னுன். "ஒயினு இண்ணு என்னடா" இண்ணு கேட்டேன். "ஒயினு அண்ணு, சாராயம்" இண்ணு சொன்னுன். "சாராயமிண்ணு என்னடா" இண்ணு கேட்டேன். "சாராயமிண்ணு பிராந்தி" இண்ணு சொன்னுன். "பிராந்தி இண்ணு என்னு" இண்ணத்துக்கு, "அத்தான் எக்ஷா மருந்து" இண்ணு சொன்னுன். "ஐயையோ! மருந்து எனக்கு வாணும்" இண்ணு சொன்னேன். அதுக்கு, "மருந்தில்ல, மருந்தில்ல - கள்ளு, கள்ளு" இண்ணு சொன்னுன். அப்பொத்தான் நீங்கொ கள்ளு குடிக்கச்சே பார்த்தேன்.

தாமோ:—அடேய்! பயலே! நீயுமா என்னேக் குடியன் என்று சொல்லுகிருய்? உனக்கு இதற்குள்ளே என்னடா தெரியும்? போடாபோ! (என்று சொல்லிக்கொண்டே அவனைப் பிடித்து வீட்டிற்குள்ளே தள்ளிவிடுகிருர்). (மனேவியைப் பார்த்து) கற்பகம்! சீக்கிரம்

நான் வெளியே போகவேண்டும். விரைவில் சாப்பாடு தயார் செய் - போ ? (என்று சொல்லிக்கொண்டே அவளையும் பிடித்துத் தள்ளி விடுகிறார்).

**தாண்ட :**—எஜமான்ரே ! குடியைவிட்டுடுங்களேன் ! கும்பிடுறேன் ! காலைப் புடிக்கிறேன் !

**தாமோ :**—அடேய் ! நான் குடியனா ? நீ குடியனா ?

**தாண்ட :**—நம்பொ, ரெண்டுபேரும் குடியனுங்கோதான். ஆனா, நானு இப்பொ குடியை வுட்டுட்டேன். அத்தான் நீங்களும் குடியை வுட்டுடோணு மிண்ணு சொல்றேன்.

**தாமோ :**—அடேய் ! ரொம்பொ சாஸ்திரம் கத்தவண்டா நீ ! " குடியாத வீடு, விடியாது " போடா. போ ! (போகிறார்)

**தாண்ட :**—என்னமோ நானு சொல்றதைச் சொல்லிவிட்டேன். அப் பாலே அவுகபாடு. ஐயா புதிசி புதிசா குடிக்கிறாங்கோ ! வாசனை யைப் புடிச்சா, நானும் கொஞ்சம் குடிக்கணு மிண்ணு தோணுது. இத்தான் சமயம். ஒரு சான்ஸு பாக்கிறேன். (போகிறான்)

**(காட்சி முடிகிறது.)**

---

**முதல் அங்கம். நான்காவது காட்சி.**

**இடம் :**—கச்சேரி நடக்கும் மண்டபம்.

**காலம் :**—இரவு. தாசி மோஹனாங்கியின் சங்கீதக் கச்சேரி நடைபெறு கிறது. ஜனங்கள் நிரம்பிய சபையில் தாமோதரம் பிள்ளை, கேசவப் பிள்ளை, நாராயணையா, மாதவராயர் ஆகிய நால்வரும் வீற்றிருக்கி றார்கள்.

**தாமோ :**—(கச்சேரி முடிந்ததும்) நாராயணையா ! எவ்வளவு அழகு ஐயா இவள் ! இவள் இளமைப் பருவத்திற்குத் தகுந்த அழகு ! அழகுக் குகந்த குரல் !

**நாரா :**—உண்மை ! முற்றுந் துறந்த முனிவருக்கும் இவளைக் கண்டமாத் திரத்தில் இவள்மீது இச்சை உண்டாகுமென்பதற்கு ஐயமில்லை.

**மாதவ :**—சந்தேகமில்லை ! இவளுடைய நட்பைப் பெறுபவன் அதிர்ஷ்ட சாலியாகத்தானிருக்கவேண்டும்.

**தாமோ :**—மாதவராயர் ! இவளுடைய நட்பை எப்படிப் பெறுவது ?

**மாதவ :**—சற்றுப் பொறும் ! சபை கலைந்ததும் நாமிங்கிருந்து சமயம் பார்த்து இவளுடன் நெருங்கி வார்த்தையாடலாம் !

**தாமோ :**—நல்லது அப்படியே செய்யலாம். (கச்சேரி முடிந்ததும் சபை கலைந்து, தாமோதரம் பிள்ளை, கேசவப் பிள்ளை, மாதவராயர் ஆகிய மூவர் தவிர, மற்ற யாவரும் செல்கிறார்கள்.)

**மாமா :**—(நட்டுவன்) (மூவர்களையும் பார்த்து) நமஸ்காரம் ! பெரியோர் கள் இங்கு விஜயஞ் செய்ததைப் பார்க்க அதிக சந்தோஷமடைந் தோம். குட்டி அறியாதவள். இப்பொழுதுதான் சிட்சை. பிச கிருந்தால் மன்னிக்கவும் !

மாதவ :—நன்ருய்ச் சொன்னீர்கள் ! கச்சேரி வெகு நன்ருயிருந்தது. மற்றொரு முறை எப்பொழுது கேட்கலாமோ என்றல்லவோ சிந்தித்தவண்ணமா யிருக்கிருேம் !

தாமோ :—ஆம் ! வெகு நேர்த்தியான கச்சேரி ! பரமானந்தமாயிருக்கிறது. இவ்விடத்தைவிட்டுப் போகவே மனமில்லை.

மாமா :—அதற்கென்ன ! உங்களுடைய தயவு இருக்கும்பட்சத்தில் எத்தனை தடவைகள் வேண்டுமானலும் கேட்கலாமே ! என்ன சொல்லுகிருய் குட்டி ?

மோஹன :–மாமா ! என்னைக் கேட்பானேன் ! இப்பேர்ப்பட்ட பெரியோர்களுடைய தயவு எப்பொழுது கிடைக்குமோ, அவர்களை எவ்விதத்தில் திருப்தி செய்வோமோ, என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேனே !

தாமோ :—சந்தோஷம் ! நாங்கள் மறுபடியும் நாளையதினம் பார்க்கிருேம், உங்களுடைய விலாசமென்ன ?

மாமா :—ஓடக்கால் வீதியில், 43-ம் நெம்பர் வீடு. நமஸ்காரம். பெரியோர்கள் தயவு இருக்கவேண்டும்.

தாமோ :—ஆஹா ! அப்படியே ! நாங்கள் சென்று வருகிருேம் (செல்கிருர்கள் - போகும்பொழுது) மாதவராயர் ! இவளுடைய நட்பைப் பெறுவதற்கு நீர்தான் உதவிபுரியவேண்டும். என்ன சொல்லுகிறீர் ?

மாதவ :—என்ன வார்த்தை சொல்லுகிறீர் ? என்னை மாமா வேலையையா செய்யச் சொல்லுகிறீர் ? வெகு அழகாயிருக்கிறது ! உமக்கு சாமர்த்திய மிருக்கும்பட்சத்தில் நீரே முயற்சி செய்துகொள்ளும் (போகிருர்).

மோஹன :—(யாவரும் சென்றபிறகு) மாமா ! என் சாமர்த்தியத்தைப் பார்த்தீர்களா ! இவரை என் வலையில் பிடிக்க எத்தனை நாட்களாக எதிர்பார்த்தவண்ணமா யிருந்தேன் ! இப்பொழுதுதான் என் கோரிக்கை நிறைவேறிற்று என்று எண்ணுகிறேன்.

மாமா :—குட்டி ! அவசரப்படாதே ! காரியம் இன்னும் கைகூடவில்லை ! நாளையதினம் வருவதாக அல்லவோ கூறிவிட்டுச் சென்றனர். அதன்படி வந்தால்தானே உன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் ! —வராவிட்டால் ? —

மோஹன :—என்ன மாமா ! ஒன்றும் அறியாமல் பேசுகிறீர்கள் ! அவர் போகும்பொழுது என்னைக் கடைக்கண்ணல் பார்த்துக்கொண்டே சென்ருர். அப்பொழுது, நான் கண்களைச் சுழற்றி புன்முறுவல் செய்தேன். அச்சமயமே அவர் மனம் புண்ணுகிவிட்டதே ! அப்புண்ணை ஆற்றுவதற்கு என்னிடந்தானே வரவேண்டும் ! வேறு வைத்தியராலாகுமா ?

மாமா :—சபாஷ் குட்டி ! நாளையதினம் உன் திறமையைப் பார்க்கலாம். நாழியாகிவிட்டது, போகலாம், வா ! (போகிருர்கள்).

(காட்சி முடிகிறது.)

**இரண்டாவது அங்கம்.** **முதல் காட்சி.**

**இடம் :**—தாமோதரம் பிள்ளையின் மாளிகையில், கற்பகராஜத்தின் ஓர் அறை.

**காலம் :**— முற்பகல்—கற்பகராஜம் ஓர் ஆசனத்தின்மீது மனக்கலக்கத் துடன் வீற்றிருக்கிருள்.

**கற்ப :**—ஹா ! என்ன காலம் ! என் நாதர் இந்நாட்டிற்கு அதிபதியானதும் இவ்விடம் வந்து தங்கி சில சீர்திருத்தங்களைச் செய்யவேண்டு மென்று எண்ணிவந்ததற்கு மாருக, தானே இவ்வகையான துர் நடவடிக்கைகளில் பிரவேசித்துவிட்டனரே! அவரை சீர்திருத்த வேருெருவர் வேண்டும்போலும் ! இதுகாலம்வரையில் என் வார்த் தையை மீறி நடவாதவர், நான் எவ்வளவு சொல்லியும் கேளாமல் வேசியின் கச்சேரிக்குப் போய்விட்டனரல்லவா ? கள், காமம், கொலை என்று சொல்லுவார்களே ! அதுபோல, அவர் எப்பொழுது குடிக்கக் கற்றுக்கொண்டனரோ, அதன்பிறகு காமம் அதிகரித்து வேசிகளின் நேசத்தையும் பெற விரும்புவார் ! அதனுல் சில சமயங் களில் கொலையும் சம்பவிக்கலாம் ! என்ன செய்வது ? ஒரு நாட்டின் அதிபதியே இவ்விதம் நீதி தவறி நடந்தால் பிரஜைகள் எவவிதம் நடப்பார்கள் ! பிரஜைகளுக்கு அவரிடம் என்ன மரியாதை இருக்கும்! அவருக்கு மனைவியாக வாய்த்த என்னை நிந்தித்துப் பேசமாட்டார் களா ! எல்லாம் ஈசன் செயல் ! (சில பெண்கள் வருகிருர்கள்) வாருங்கள் ! உட்காருங்கள் !

**1-வது ஸ்திரீ :**—அம்மா ! கற்பகம் ! ஏன் முகவாட்டத்துடனிருக்கிருய் ?

**2-வது ஸ்திரீ :**—மீனு ! ஏன் அவ்விதம் கேட்கிருய் ? அவர்களுக்கு என்ன குறைவு ? புருஷரோ ! இந்நாட்டிற்கு அதிபதி ! ஐஸ்வரியத்திற்குக் குறைவா ? குழந்தைக்குத்தான் குறைவா ? என்ன மகிழ்வு ! எவ்வ ளவு புகழ்வு ! சகல பாக்கியங்களுட னிருக்கும்பொழுது வேறு குறைவு என்ன இருக்கப்போகிறது !

**3-வது ஸ்திரீ :**—அப்படி சொல்லக்கூடாது ! உலகத்தில் உதித்திருக்கும் யாவருக்கும் ஏதேனும் ஒரு குறைவை இறைவன் கொடுத்தே யிருக் கிருர் ! ஏழையாயிருந்தாலும் சரி, பணக்காரனுயிருந்தாலும் சரி, ஏதேனும் குறையோ, கவலையோ இருக்கிறது. ஆகையால், நமது கற்பகத்திற்கும் ஏதேனும் கவலை ஏற்பட்டிருக்கலாம். அதனுலேயே அவர்கள் முகம் வாட்டமடைந்திருக்கலாம் !

**கற்ப :**—அம்மா ! எனக்கு நேரிட்டிருக்கும் குறைவு இன்னதென்பதை என் வாயால் சொல்லாமலே உங்கள் யாவருக்கும் தெரிந்திருக்கலா மென நினைக்கிறேன். வீணுக என்னை ஏன் சோதிக்கிறீர்கள் ?

**1-வது ஸ்திரீ :**—கற்பகம் ! உன்னை நாங்கள் பரீட்சிக்க வந்தோமென்று நினைக்கவேண்டாம். உன் புருஷனுடைய நடவடிக்கையே உன் கவலைக்குக் காரணமென்று எங்களுக்குத் தெரியும். மேலும், உன் மனதைப் புண்படுத்த வந்திருக்கிருேமென்று எண்ணவேண்டாம். ஆனுல் உன் மனதைச் சமாதானப்படுத்தவே இவ்விடம் வந்திருக்கி ருேம். உன் நாதர் இப்பொழுது எவ்விடம் சென்றிருக்கிரு ரென்பது தெரியுமா உனக்கு ?

கற்ப :—ஆம், தெரியும். எங்கேயோ தாசியின் கச்சேரியாம். அங்கு சென்றவர் இன்னும் வீடு திரும்பி வரவில்லை.

1-வது ஸ்திரீ :—சரிதான். வெகு அழகாயிருக்கிறது! இனிமேல் வேசியின் நேசமும் வேண்டியதுதானே! நீ ஏன் அவரை அக்கச்சேரிக்குப் போகச் சம்மதித்தாய்?

கற்ப :—நான் சம்மதிக்கவாவது! எதற்கும் என்னிடம் சொல்லி என் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டுதான் போகிறாரோ! நான் அவரைப் போகவேண்டாமென்று என்னாலான புத்திமதி கூறியும் என் பேச்சைக் கேளாமல் சென்றுவிட்டனர். இதற்கு நான் என்னசெய்வது? கணவர் மனதுக்கிணங்கிப் பெண்கள் நடவாவிடின் இல்லற வாழ்க்கை செவ்வையாய் நடைபெறாது என்பதை நமது முன்னோர்கள் பலவிதத்திலும் வற்புறுத்தி யிருக்கிறார்கள். ஆகையால் புருஷர்கள் போகும்படியான வழியே விட்டுவிடுவதுதான் நல்லது என்று தோன்றுகிறது. என்னமோ என் தலைவிதிப்படி நடக்கட்டும்!

2-வது ஸ்திரீ :—கற்பகம்! அவ்வாறு செய்வதுதான் சுத்தப்பிசகு. அவ்விதம் உன் புருஷரை விட்டதினால்தான், முதலில் தீயார் நட்பு, பிறகு மதுபானப் பழக்கம், இப்பொழுது வேசியின் நேசமாக வந்துவிட்டது! நாளடைவில் உன் கதியும் அதோகதியாகிவிடும். இக்காலங்களில் மனைவிகள்தான் புருஷர்களை அடக்கிக்கொண்டிருக்க வேண்டும். நம்மிடத்தில் புருஷர்களுக்குச் சிறிது பயமிருந்தால் தான் இப்பேர்ப்பட்ட துர்ப்பழக்கங்களை அநுசரிக்க மாட்டார்கள். நாமும் அவர்களைப்போல் படித்து உலக நடவடிக்கைகளை அறிந்து வருவோமானால் நம்மிடத்தில் அவர்களுக்கு தானாகவே மரியாதையும் அச்சமும் ஏற்பட்டுவிடும். அப்படிக்கில்லாமல் நாம் நிரட்சர குட்சியாயிருப்போமானால், வண்டியில்பூட்டின குதிரையை அடித்து ஓட்டுவதுபோல நம்மை வீட்டிற்குள்ளேயே போட்டு ஓட்டிக்கொண்டு அவர்களுடைய இஷ்டப்படி திரவியத்தை மதுபானங்களிலும் தாசிகளுக்கும் செலவழித்துவிட்டு கடைசியில் சாப்பாட்டுக்கும் வழியில்லாமல் செய்துவிட்டு நம்மையும் குழந்தைகளையும் அனாதைகளாக விட்டுவிடுவார்கள். இதை மனதில் வைத்துக்கொண்டுதான் நாங்கள் எங்கள் புருஷர்களை அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறோம். எங்களுடைய சொல்லை மீறி எதையும் செய்யமாட்டார்கள். எங்கள் சம்மதத்தைப் பெறாமல் எங்கேயும் போகமாட்டார்கள். எங்களைப் போல் நீயும் படித்தவள்தானே! உனக்கு இந்தப் புத்தி இல்லாமல் போவானேன்? நீ இப்பொழுது அநுபவிக்கும் கவலைக்கு நீதான் காரணமென்று சொல்லவேண்டும்!

கற்ப :—நீங்கள் கூறுவது சரியே. நாங்கள் இந்நாட்டிற்கு வருவதற்கு முன் மதுரையிலிருந்து வந்தோம். அப்பொழுது என் நாதர் நடந்து வந்த மாதிரியைப் பார்ப்பவர்கள் யாவரும் அவரிடம் அதிக மரியாதையுள்ளவராயும், நட்புள்ளவர்களாயும் இருந்து வந்தனர். எங்களுடைய ஒற்றுமையான வாழ்வானது அநேகர் பொறாமைப்பட வேண்டிய தன்மையுடையதாயுமிருந்தது. அத்தன்மையான வாழ்வானது இந்நாட்டிற்கு வந்தபிறகே இவ்விதமாகச் சிதறிவிட்டது. இதற்குக் காரணம் காலத்தின் கொடுமை என்று சொல்லவேண்டுமேயன்றி,

நம்மாலாவது ஒன்றுமில்லை. எல்லாம் ஈசன் செயல். எக்காலங்களில் என்னென்ன அநுபவிக்க வேண்டுமென்று கடவுள் விதித்திருக்கிறாரோ அதன்படி அநுபவித்தே தீரவேண்டும்.

**1-வது ஸ்திரீ** :—கற்பகம் ! நீ கூறுவது வெகு விந்தையா யிருக்கிறது ! என்னமோ, காலம் என்றும் விதி என்றும் சொல்லுகிறாயே ! நீ இன்னும் பண்டைக்காலத்துப் பள்ளியைச் சேர்ந்தவளாயிருக்கிறாய். நீ கற்றது இவ்வளவுதானா ? படித்துவிட்டால் போதுமா ? உலக அநுபவம் வேண்டாமா ? நீயோ, வீட்டிற்குள்ளேயே புகுந்துகொண்டிருக்கிறாய் ! எங்களைப்போல் வெளியில் சென்று பலருடன் பேசிப் பழகினால்தானே தெரியும் !

**கற்ப** :—அம்மா ! எனக்கு அப்பேர்ப்பட்ட பழக்கங்களில் பிரியமில்லை. இனிமேலாவது அதுபோலச் செய்வேன் என்றும் எண்ணவேண்டாம். பதிவிரதைகள் அதுபோலச் செய்வது சரியல்ல என்று தோன்றுகிறது.

(குடு குடுப்பைக்காரன் வருகிறான்.)

**குடுகுடு** :—நல்ல காலம் பொறக்குது ! நல்ல காலம் பொறக்குது ! மலையாளப் பகவதீ ! எல்லக்கா தேவீ ! மாகாளியாயீ ! ச - ந் - தோ - ஷ - மிருக்கு. இந்த மூலையிலிருந்து கடுதாசி - வருகுது. அம்மா ! லட்சுமியாட்டம் இருக்கிங்கோ ! கொஞ்ச காலங் கயிஷ்டம் வருதுங்கோ ! என்னமோ இண்ணு நெனைக்கவாணும். படுபாவி ஒருத்தன் துரோவம் நெனைக்கிறான். அவன் நாசமா - ப் பூடுவான் ! அம்மா ! லட்சுமி ! எசமான் கட்ண பளய வேட்டி ஒண்ணு குடுங்களேன் ? - மலையாளப் பகவதீ ! குட்டிச் சாத்தான் ! எல்லைப் பிடாரீ ! மாகாளியாயீ ! ஓடிவா ! ஓடிவா ! - சந் - தோ - ஷ - மிருக்கு !

**கற்ப** :—வந்தாயா ! வா ! நீ ஒருவன்தான் பாக்கி, நீயும் வந்தாயல்லவா ! வா !

**குடுகுடு** :—உம் ! ஒரு பளய வேட்டி ! பளய வேட்டி ஒண்ணு !

(கற்பகம் உள்ளே சென்று ஒரு பழைய வேஷ்டியைக் கொண்டு வந்து அவனிடம் கொடுக்கிறாள். அவன் அதை வாங்கிக்கொண்டு) மவரா - ஜி - யர் - யிருக்கணும் ! மலையாளப் பகவதீ ! குட்டிச் சாத்தான் ! ஐ - யோ ! - இண்ணு போவுது குடுத்தனம் ! ஐயோ ! இண்ணு போவுது ! மாகாளியாயீ ! நல்லவாக்கு குடு (போகிறான்).

**கற்ப** :—(திடுக்கிட்டு) பார்த்தீர்களா ? அவன் சொன்னதைக் கேட்டீர்களா? ஹா ! என்ன காலம் ! ஐயோ ! என்ன தீங்குகள் சம்பவிக்குமோ தெரியவில்லையே ! ஈசா !

**2-வது ஸ்திரீ** :—கற்பகம் ! நீ ஒன்றுமே அறியாதவள். அவன் வீடுகள் தோறும் போய் பிச்சை வாங்கிப் பிழைப்பவன். அவன் என்னமோ வாயில் வந்ததை உளரிக் கொட்டினான். அதை மெய்யென்று நினைத்து வருந்துகிறாயே ! உனக்கு உலக அநுபவம் இல்லாததால்தான் இவ்வாறு வீணே கலங்கி உன் சுகத்தையும் இழந்துகொள்ளுகிறாய் !

கற்ப :—அம்மா! நீங்கள் எனக்கு என்ன சொன்னபோதிலும் கேட்க மாட்டேன். எனக்கு என்னமோ அவன் சொன்னதில் நம்பிக்கை உண்டாகிவிட்டது. ஐயோ! என்ன கெடுதி சம்பவிக்குமோ தெரியவில்லையே! ஹா! ஜெகதீசா! இவ்வளவு காலம்வரையில் என்னை எவ்வளவோ சுகத்துடன் வைத்திருந்தாயே! வியசனம் இன்னது என்று அறியாமலிருந்தேன்! இனிமேல் எப்பேர்ப்பட்ட கஷ்டங்களை அநுபவிக்கவேண்டுமோ! நீதான் இரட்சிக்கவேண்டும். (துக்கிக்கிருள்).

1வ-து ஸ்திரீ :—(மற்ற இருவர்களையும் பார்த்து) இவளுக்கு என்ன புத்தியீனம் பார்த்தீர்களா! எவனே பிச்சைக்காரன் என்னமோ சொல்லிவிட்டானும், இவளுக்கு கஷ்டகாலம் வந்துவிட்டதாம்! " காக்கை கா என்றதாம், கணவனைப்போய் - அப்பா - என்று கட்டிக்கொண்டாளாம் " அதுபோல் அல்லவோ இருக்கிறது! வாயில் வந்ததைப் பிதற்றுகிருளே! நாம் இவளுக்குத் தேறுதல் சொல்லலாமென இங்கு வர இவளுடைய மனக் கலக்கம் அதிகமாகிவிட்டதே! நம்முடைய வார்த்தைகள் ஒன்றுமே இவளுக்கு எற்கவில்லை! என்னமோ இவள் தலைவிதியாம் நாம் இனி இங்கிருப்பதில் பிரயோஜனமில்லை. எழுந்திருங்கள் போகலாம்!

(கற்பகத்தைப் பார்த்து) அம்மா! கற்பகம்! நாங்கள் கூறுவது ஒன்றுமே உனக்கு எற்கவில்லை. உன்னுடைய பரிதாபமானநிலைமையைப் பார்க்க எங்களுக்கு மனம் சகிக்கவில்லை. கடவுள் இரட்சிப்பார். பயப்படவேண்டாம். நாங்கள் சென்றுவருகிறோம் (போகிருர்கள்) (கற்பகம் தலையைச் சாய்த்துக்கொண்டு துக்கித்தவண்ணமிருக்கிருள். இச்சமயத்தில் நாராயணையா வந்து சிறிது தூரத்தில் நின்று இவளை நோக்குகிருன்).

நாரா :—(தனக்குள்) இதுதான் நல்ல சமயம்! — ஹா! இவளுடைய அழகை எதற்கு ஒப்பிடுவது! பிரம்மனுடைய சிருஷ்டியே சிருஷ்டி! இவ்வையகத்திலுள்ள அழகையெல்லாம் திரட்டி இவளுடைய உருவத்தை உண்டாக்கினர்போலும்! நான் அன்றையதினம் தாமோதரம் பிள்ளையுடன் சிற்றுண்டி அருந்தும்பொழுது இவளைப் பார்த்ததிலிருந்து உறங்கவேயில்லை. மறுபடியும் இவளை எப்பொழுது பார்க்கலாமோ, இவளுடன் வார்த்தையாட தகுந்த சமயம் என்று வாய்க்குமோ, என்று எதிர்பார்த்தவண்ணமா யிருந்தேன். நான் எதிர்பார்த்துக்கொண்டிருந்த சமயமும் இப்பொழுது கிட்டியது என்றே நினைக்கிறேன். இங்கு இவளைத் தனித்திருக்கக் கண்டேன். காதலுற்றேன். நண்பனையும் விட்டேன், அவன் நட்பையும் துறந்தேன். இவளன்பைப் பெறுவே னின்றே! (கற்பகத்தின் சமீபத்தில் செல்கிருன்).

கற்ப :—(நாராயணையாவைப் பார்த்துவிட்டு) யார் அது! என் நாதரின் நண்பர்! இத்தருணத்தில் தனிமையாக இவ்விடம் வரவேண்டிய காரணம்?

நாரா :—அம்மா! நான் இவ்வேளையில் உன்னிடம் வந்ததைப்பற்றி என்னை மன்னிப்பாய். நான் ஒரு முக்கியமான விஷயத்தை உன்னிடம் தெரிவிக்கவே வந்தேன். அது யாதெனில், உன் நாதர் —

**கற்ப** :—ஹா ! என் பிராணநாதருக்கு ஏதாவது கெடுதி நேரிட்டதா ! சொல்லும் ! சொல்லும் !

**நாரா** :—உயிர்க்கல்ல ! உடம்பிற்கு ! உன் நாதர் தாசி மோஹனங்கிக்கு அடிமையாகிக் கிடக்கிறார் !

**கற்ப** :—ஐயா ! நீங்கள் இவ்விஷயத்தை என்னிடம் வந்து தெரிவித்ததற்காக என் மனமார்ந்த வந்தனமளிக்கிறேன். அவரை அவளிடமிருந்து எப்படி மீட்டி வருவது ?

**நாரா** :—நண்பனாகிய நான் அவருக்கு எவ்வளவோ புத்திமதிகள் எடுத்துச் சொல்லியும் அவைகளைச் சிறிதேனும் செவியிற் கொள்ளாமல் என்னை அவமானப் படுத்திவிட்டார். அதனால் வேறு வழியில்லை என்று நினைத்து உங்களிடம் கூறவே இவ்விடம் வந்தேன்.

**கற்ப** :—அப்படியா ! அவரை மீண்டும் பெறுவதற்கு என்ன யுக்தி செய்யலாம் ?

**நாரா** :—வேறு வழி ஒன்றுமில்லை என்றே நினைக்கவேண்டும். ஏனென்றால் அவர் அந்தத் தாசியின் பாசத்தில் அவ்வளவு கட்டுண்டு கிடக்கிறார். நீங்கள் அவரை இழந்துவிட்டதாகவே கருதவேண்டும். மும்மூர்த்திகள் வந்தபோதிலும் நீங்கள் அவரை இனிப் பெறமுடியாது !

**கற்ப** :—ஐயோ ! நான் என்நாதரை உயிருடன் இழந்துவிட்டதாக நினைக்கவேண்டுமா ! அவரில்லாமல் நான் என்ன சுகத்தைப் பெறக்கூடும் ! நான் இனி இப்புவியில் உயிருடனிருந்து செய்வது என்ன ! இறப்பதேமேல் ! (வருந்துகிறாள்).

**நாரா** :—அம்மா ! இதற்காக நீங்கள் வருத்தப்படவேண்டியதில்லை. காலத்தின்படிதான் நடக்கும். நீயோ, யின்னும் யௌவனப் பருவத்திலிருக்கிறாய். இப்பிராயத்தில் தற்கொலை புரிவது தகாது. உனக்கு உதவிபுரிவாரும் யாருமில்லை என்று எண்ணவேண்டாம். இதோ, உன்னைப் பலவிதத்திலும் சந்தோஷிப்பதற்காக நானிருக்கிறேன். கவலைப்படவேண்டாம். உன்னை - நான் - காதலிக்கிறேன். என் காதலை நீ அங்கீகரிப்பாயானால் உன் பருவகாலத்தை வீணாகக் கழிக்காமல் சந்தோஷமாகக் கழிக்கலாம்.

**கற்ப** :—(திடுக்கிட்டு) ஹா ! என்ன வார்த்தை சொல்லுகிறீர்கள் ? இப்பேர்ப்பட்ட வார்த்தையைச் சொல்லுவதற்கா நீர் என் புருஷரின் நண்பனென இவ்விடம் என்னை அணுகி வந்தது ? இது உமக்கு அடுக்குமா ?

**நாரா** :—என் அடுக்காது ? உன் புருஷனோ, வேசியே கதி என்றிருக்கிறான். நீ இனி அவனைப் பெறமுடியாது. புருஷனில்லாமல் அநாதையாகிக் கஷ்டத்திற்குள் ளாவதைவிட என் நட்பை நீ பெறுவாயானால் எவ்வளவோ சுகத்துடனிருக்கலாமே !

**கற்ப** :—(கோபக்குறியுடன்) சைய் ! வாயை மூடு ! இனி ஒரு வார்த்தையும் என்னிடம் சொல்லாதே ! இதுவரையிலும் உன்னிடம் வார்த்தையாடினதே பிசகு. உன்னைப் பார்த்தலும் தவறு.

நாரா :—அவ்வளவு கோபம் வேண்டாம். உன் பருவக்காலத்தை வீணே கழிப்பதில் என்ன பிரயோஜனம்? உனக்குப் பல கஷ்டங்கள் நேர்ந்திருக்கும் இவ்வமயத்தில் என்னால் பல வழிகளில் உதவி கிடைக்கும். ஒரு வார்த்தை சொல்லிவிடு. நான் போய்விடுகிறேன்.

கற்ப :—இவ்விடத்தில் இச்சமயம் என் நாதரில்லாததினாலல்லவா நீர் இத்தனை தைரியமாய் வாயில் வந்தபடிக் கூறுகிறீர்! இனி ஒருக் கணமேனும் இங்கு நிற்பீரானால் மரியாதை தவறி மானத்தையும் இழக்க நேரிடும் (உள்ளே செல்கிறாள்).

நாரா :—நானா மரியாதையை இழக்க நேரிடும்! பார்க்கலாம்! (தாமோதரம் பிள்ளை வருகிறார். அவரைப் பார்த்து) பிள்ளைவாள்! உமது மனைவியின் நடத்தையைப் பார்த்தீரா! நீர் என்னிடம் கூறி அனுப்பிய விஷயங்களை நான் உமது மனைவியிடம் தெரிவிக்க இவ்விடம் வந்தேன். அப்பொழுது உமது மனைவிக்குப் பழக்கமான ஒருவர் இவ்விடம் உமது மனைவியுடன் சரசமாய்ப் பேசிவிட்டுச் சென்றதைப் பார்த்தேன். அதுவிஷயமாக நான் உமது மனைவியைக் கண்டிக்க அவர்கள் சினந்து என்னைப் பலவிதமாகத் தூஷித்துச் சென்றார்கள். தக்க சமயத்தில் நீரும் வந்தீர்கள். உமது மனைவியை நீரே விசாரித்துக்கொள்ளும். நான் சென்றுவருகிறேன் (போகிறான்).

தாமோ :—(தனக்குள்) என்ன விந்தை! என் மனைவி இத்தகைய காரியத்தைச் செய்யத் துணிந்திருப்பாளா? அப்படி யிருந்தாலும் ஆச்சரிய மொன்றுமில்லை! நானே அதற்குக் காரணம் என்று கூறலாம்! சரி, கெட்டது கெட்டதுதான்! இதைக்குறித்து பின்னே விசாரித்தறியலாம். இப்பொழுது என் பிரியை மோஹனா கோறினபடி நான் இவ்விடம் சமயம் பார்த்து என் மனைவியின் நகைகளை அபகரித்துக்கொண்டுபோய் அவளிடம் கொடுக்கவேண்டும்! (உள்ளே செல்கிறான். போகும்பொழுது தன் குழந்தை ஓடிவந்து).

குழ :—அப்பா! இவ்வளவு நாளா எங்கே போயிருந்தே? எனக்கு சாப்பாடில்லே. பசிக்குது. அம்மா அழுதுக்கினு இருக்காங்கோ! திங்கிறத்துக்கு ஏதாவது கொண்ணாந்தியா? எங்கே - கையே - காமீ? (கைகளைப் பார்க்கிறான்).

தாமோ :—அம்மா எங்கே இருக்கிறாள்?

குழ :—இதோ! (தகப்பனாரின் கைகளைப் பிடித்துக்கொண்டு உள்ளே அழைத்துப் போகிறான்) அம்மா! அம்மா! அப்பா வந்திருக்காங்கோ!

தாமோ :—கற்பகம்! என் அழுதுகொண்டிருக்கிறாய்? குழந்தை பசியால் வருந்துகிறானே! அவனையும் கவனியாமலிருக்கிறாயே! உனக்கு என்ன குறைவு நேர்ந்தது?

கற்ப :—(கண்ணீர் சிந்தியவண்ணம்) எனக்கு என்ன குறைவா? நீங்கள் இதுவரையிலும் இங்கு இல்லையே என்ற குறைவுதான். அம்மட்டில் இப்பொழுதாவது வந்தீர்களே! இதுவும் என் பாக்கியமே! கச்சேரிக்குப் போவதாகக் கூறிவிட்டுச் சென்றவர்கள் இத்தனை நாட்களாக வீடு திரும்பாததின் காரணம் என்னவோ!

தாமோ :—புருஷர்களுக்கு அநேக காரியங்களிருக்கலாம். மேலும், நானோ, தேசவிசாரணையிலிருப்பவன். ஒரு இடத்தை நாடிச் சென்றால் பல இடங்களுக்குப் போக நேரிடும். இதுவிஷயமாக நான் வீடு திரும்பி வர நாட்களாகுமென்று என் நண்பரிடம் சொல்லி அனுப்பினேனே! அவர் இவ்விடம் வந்து கூறவில்லையா?

கற்ப :—யாரிடம் சொல்லி அனுப்பினீர்கள்? உங்கள் நண்பரா? அவர் யார்?

தாமோ :—அவர்தான் நாராயணையா!

கற்ப :—நாராயணையாவா! தெரிந்தது உங்களுடைய நண்பரின் யோக்கியதை! அவர் சற்று முன்பு இவ்விடம் வந்து நீங்கள் தாசியே கெதியென்றிருப்பதாகவும் நான் அவருடைய அன்பைப் பெறும்பட்சத்தில் எனக்கு யாதொரு துன்பமும் நேரிடாதபடி பார்த்துக்கொள்வதாகச் சொன்னார். உங்களுக்கு வாய்த்த நண்பர் எவ்வளவு நல்ல எண்ணமுடையவராயிருக்கிறார் என்பதை நீங்களே தெரிந்துகொள்ளுங்கள். இவ்வளவு ஸ்திதிக்கு வந்தது உங்களாலல்லவா? இதுவரையிலும் வேறு புருஷர்கள் எவரும் என்னிடம் வந்து பேசியதில்லையே! மதுபானத்தால் அறிவிழந்து, வேசியின் சாவகாசத்தையும் நீங்கள் கொண்டதினாலல்லவா பார்ப்போர் என்னை எளனஞ் செய்யவும், கெடுக்கவும் இடமுண்டாகிவிட்டது! ஐயோ! ஈசா! நான் இன்னும் என் உயிருடன் இருக்கிறேன்?

தாமோ :—கற்பகம்! என் முன்பின் அறியாமல் பேசுகிறாய்? நான் சென்ற காரியம் வேறாக இருக்க, வேசியின் நேசத்தில் விழுந்துவிட்டேனென்று மொழிகிறாயே! அவன் உன்னை வசியஞ்செய்யவே இப்பேர்ப்பட்ட சதியாலோசனை செய்திருக்கிறான். அவன் சொன்னவைகளை நம்பாதே! நான் அவனைத் தகுந்த விதத்தில் தண்டிக்கிறேன். உன் கவலையை விடு!

குழ :—அப்பா! அம்மாவைச் சாதம் போடச் சொல்லு! பசிக்குது!

கற்ப :—சமயலுக்கு வேண்டிய சாமான்கள் ஒன்றுமில்லையே!

தாமோ :—அப்படியா! இதோ, வீட்டிற்கு வேண்டியதைக் கொணர்ந்து சேர்ப்பிக்கிறேன். எங்கே என் பெட்டி சாவி? இப்படிக் கொடு? (கற்பகம் பிசகுடன் தன்னுடைய பெட்டி சாவியைக் கொடுத்துவிடுகிறாள்). நீ சென்று குழந்தையைப் பார்? (கற்பகம் குழந்தையை அழைத்துக்கொண்டு உள்ளே போகிறாள். தாமோதரம் பிள்ளை சாவியைக்கொண்டு தன் பெட்டியைத் திறக்க முயற்சிக்கிறார். பெட்டி திறக்கப்படவில்லை) என்ன இது! பெட்டி திறக்கப்படவில்லை! (சாவியைப் பார்த்து) இது என்னுடைய பெட்டி சாவியைப் போல் காணப்படவில்லை! என் மனைவியின் பெட்டி சாவிபோல் தோன்றுகிறது! ஆம், அவளுடைய சாவிதான்! சந்தேகமில்லை. இதுவும் நான் செய்த அதிர்ஷ்டந்தான்! "கும்பிடப்போன தெய்வம், குறுக்கே வந்தாற்போல்", நான் என்ன காரியத்தை நினைத்துக்கொண்டு இவ்விடம் வந்தேனோ அது கைகூடியது! இவளுடைய பெட்டியைத் திறந்து சகல ஆபரணங்களையும் எடுத்துச் சென்று என் பிரியை, மோஹனாவிடம் கொடுத்துவிடுகிறேன்.

இனி க்ஷணமேனும் தாமதிக்கலாகாது. (பெட்டியைத் திறந்து ஆபரணங்கள் யாவையும் எடுத்துக்கொண்டு பெட்டி சாவியையும் அப்படியே விட்டுவிட்டு அதிவிரைவாகச் செல்கிறான். சிறிது நேரங் கழிந்தபின் தாண்டவராயன் வருகிறான்).

தாண்ட —அம்மா! அம்மா! ஐயா வந்தாங்களே! யிருக்காங்களா?—எம்மா?

கற்ப:—(உள்ளிருந்து வந்து) யாரது? தாண்டவனா? ஐயா இங்கேதானடா இருந்தார்கள்! நீ பார்க்கவில்லையா?

தாண்ட:—பாத்தாக்கா நா எம்மா உங்களே கேக்குறேன்? சருக்காரு உத்தியோகஸ்தரு யாரோ ஆபீஸுக்கு வந்திருக்காரு! ஐயாவைப் பார்க்கணுமா!

கற்ப:—அப்படியா! எங்கே என் நாதர்? இங்கேதானே யிருந்தார்! தன் பெட்டி சாவியைக்கூட வாங்கிக்கொண்டு வந்தாரே! இதற்குள்ளே எங்கு சென்றிருப்பார்? (சுற்றிலும் பார்க்கிறாள். தன் பெட்டி திறக்கப்பட்டிருப்பதைப் பார்த்து) ஹா! என்ன இது! என் பெட்டி திறக்கப்பட்டிருக்கிறதே! சாவியும் அதிலேயே இருக்கிறதே! என் பெட்டி சாவி இவ்விடம் எப்படி வந்தது? (தன்னிடமிருக்கும் சாவிகளைப் பார்த்துவிட்டு), ஹா! மதிமோசம் போனேன்! என் நாதருடைய பெட்டி சாவி இதோ இருக்கிறது! அவர் சாவியைக் கேட்ட பொழுது பிசகாய் என் பெட்டி சாவியைக் கொடுத்துவிட்டேன்! (பெட்டியைப் பரிசோதித்து) ஹா! கெட்டேன்! என் நகைகள் ஒன்றையும் காண்கிலேன்! ஐயோ! எந்தக் கள்வன் புகுந்தனனோ! என் நாதரையும் காணோம்; இச்சமயத்தில் நமது வேலைக்காரன் ஒருவன் தானே இவ்விடம் வந்திருக்கிறான்! ஒருவேளை இவனே களவாடி இருக்கலாமோ! இல்லாவிட்டால் நான் என் நாதரையா சந்தேகிப்பது! சே! அவ்வாறு நினைத்தலும் பிசகு! அவர் எதேனும் அவசர காரியமாய் சாவியை விட்டுவிட்டு வெளியில் சென்றிருக்கலாம். அச்சமயம் பார்த்து இவனே இக்காரியத்தைச் செய்திருக்கலாம். சந்தேகமில்லை (தாண்டவராயனைப் பார்த்து) அடேய்! உண்மையைச் சொல்லிவிடு! இப்பெட்டியைத் திறந்து இதனுள்ளிருந்த நகைகளைக் களவாடினையா? இப்பொழுதே நகைகளைத் திருப்பிக் கொடுத்துவிடுவாயானால் பிழைப்பாய்! இல்லாவிட்டால் கைதியாகிவிடுவாய்!

தாண்ட:— (நடுநடுங்கி) அம்மா! எனக்கு இதைப்பத்தி ஒண்ணுமே தெரியாது. நெசம்மா சொல்றேன். யித்தினி வருஷமா யிங்கே வேலை சேறேனே, யாராவது நானு திருட்டுப்பயன் இண்ணு சொல்லி யிருக்காங்களா? அம்மாதான் யிப்போ புதிசா சொல்றீங்கோ? நானு ஐயாவேத் தேடிக்கிணு யிப்பொத்தான் யிங்கே வந்தேன். அதுக்குள்ளே போட்டுட்டிங்களே எம்மேலே பழியை!

கற்ப:—நல்லது. நீ உண்மையைச் சொல்லமாட்டாய்! நான் இக்களவைப் பற்றி அதிகாரிகளுக்குத் தெரிவித்து உன்னைத் தண்டிக்கும்படிச் செய்கிறேன். (போகிறாள்).

தாண்ட :—எழவு ! இதென்ன சனியன் ! யிப்பொ எம்மேலே குத்தம் ஒண்ணு வந்தூட்டதே ! பழி ஒருபக்கம், பாவம் ஒருபக்கம் இண்ணு சொல்றாங்களே, அத்தைப்போல ஒண்ணுந் தெரியாத எம்மேலே சாட்டிட்டாங்களே ! யின்னும் டாணாக்காரன் கையிலே ஆப்புட்டுக்கிணு நாயம், அந்நாயமிண்ணுகூட பாக்காதே என் உயிரை வாங்கிடுவாங்கோ ! யினிமே இங்கே யிருக்காதே எங்கேயாவது ஓடிபுடலாம் (விரைவாய்ச் செல்கிறான்).

(காட்சி முடிகிறது)

---

சென்னை-600 008

இரண்டாவது அங்கம். இரண்டாவது காட்சி.

இடம் :—மரங்கள் அடர்ந்த ஓர் பாதை.

காலம் :—இரவு.-இரண்டு சேவகர்கள் சம்பாஷித்துக்கொண்டிருக்கிறார்கள்.

1-வது சேவ :—அண்ணே ! பாத்தியா ? நம்ப ஊரிலே, யித்தினி நாளா, திருட்டு அன்ற பேச்சே யில்லாத யிருந்ததே ! யிப்பொ பாத்தியா ஒண்ணு நடந்திருக்கிறதை ! ஹாங் ! நம்பொ நாட்டு அதிகாரி வூட்டுலியே, பட்டபகல்லே, பொட்டி நகையை: உருட்டிக்கிணு பூட்டாங்களே ! பயமகங்களுக்கு என்ன நெஞ்சி தைரியம் பாத்தியா அண்ணே ! ஹாங் !

2-வது சேவ :—ஆமா தம்பீ ! யிப்போ, ஊரு கெட்டுப்பூட்டுது. மனுஷரு கெட்டுப்பூட்டாங்கோ. குடி சாஸ்தியாப் பூட்டுது. அத்தாலே கொலையிண்ணும் திருட்டுயிண்ணும் பயப்படரதே யில்லே—ஆமா ! திருடனைக் கண்டுபுடிச்சிகிணு வாரோணுமிண்ணு நம்பளை அனுப்பிச்சி யிக்காங்களே - திருடன் ஆப்புடுவானா லேசிலே ?

1-வது சேவ :—என்ன அண்ணே ! என்னைக் கேக்குறே ? எனக்கு என்ன சோசியமா தெரியும், திருடன் ஆப்புடுவானா, மாட்டானா யிண்ணு பாத்து சொல்ல ? என்னமோ, நம்பொ வந்தவேளை நல்லா யிருந்துடிச்சியண்ணா திருடன் நம்பொகையிலியே ஆப்புட்டுக்குரான். யில்லாகிட்டி டேஷனுக்குப் போயி திருடன் ஆப்புடலே யிண்ணு கையே விரிச்சிடலாம். நம்பொ என்ன பண்ரது ! பிளாக் மார்க்கு குடுத்தா - வாங்கிக்கிறது !

2-வது சேவ :—அப்பிடி யில்லே தம்பி ! அப்பிடி பிளாக் மார்க்கு வாங்கிக்கிராப்பலே வச்சிக்கோ கூடாது. காலம் கயிஷ்ட காலம். . சம்பளமோ கொஞ்சம், அதில்லேயும், என்னது,- க - கட்டுலே வேறே கொறஞ்சி பூட்டுது. யிப்போ பிளாக் மார்க்கு வாங்கிக்கிணு எரியிற நெருப்புலே மண்ணெண்ணையை ஊத்துராப்பலேதான். கொஞ்சம் சந்து ஆப்புட்டாக்கா வேலையிலிருந்து ஒழிச்சிடுவாங்கோ ! நானு ஒண்ணு சொல்றேன். கேக்குறியா ?

1-வது சேவ :—என்ன சொல்றே ? சொல்லண்ணே ?

**2-வது சேவ :**—இண்ணைக்கி, விடியரத்துக்குள்ளே திருடனை புடிச்சிக்கினு வாரோணுமிண்ணு சொல்லி அனுப்பிச்சி யிருக்காங்கோ. யில்லியா? விடியரவரையிலே இந்த வளியிலே போரவங்களே, வர்ரவங்களே சோதிச்சிப் பார்க்கலாம். திருடன் ஆப்புட்டுக்கினு ஆச்சி, யில்லாகிட்டி ஏமாந்தவனு ஒரு பட்டிக்காட்டு ஆளைப் புடிச்சிக்கினு பூடலாம். என்னு சொல்றே?

**1-வது சேவ:**—நீ சொல்றது சர்தான். ஆனு அவங்கிட்ட திருட்டுப்போன நகை கிகை ஏதாவது யிருந்தாத்தானே அவன் திருடன் யிண்ணு ருசுப் படுத்தலாம்?

**2வ-து சேவ :**—தோபார்! நீ புதிசி. உனக்கு யின்னும் ஒளவு தெரியலே. யிங்கே பாத்தியா! (சில நகைகளைக் காண்பித்து) யிது என்னுண்ணு! அதுக்குத்தான் கொண்ணுந்திருக்கேனே!

**1-வது சேவ :**—ஆமா! யித்தான் திருட்டுப்போன நகைங்கோ யிண்ணு எப்பிடி ருசுப்படுத்தறது?

**2-வது சேவ :**—அடே போடா, மட்டிச் சாம்பிராணி! என்னென்ன நகைங்கோ திருடிக்கினு பூட்டாங்கோ யிண்ணு முன்னுலியே விசாரிச்சிக்கினு அதுபோல நகைங்கோ ஒண்ணு ரெண்டே பித்தளையிலே சுளுவிலே பாத்து வாங்கிக்கினு வந்தூட்டேனே! ஒண்ணு கெடைச்சா மத்ததெல்லாம் அவங்கிட்டதான் யிருக்கோணுமிண்ணு புரூப் ஆயிடாதா? இந்த வேலையிலே இதெல்லாம் நீ கத்துக்கோணுண்டா! யில்லாகிட்டி காலத்தை தள்ள முடியாது! கேஸூ கெடைக்கலே அண்ணு கேஸை உண்டாக்கொணும்!

**1-வது சேவ:**—நல்ல வோசனை அண்ணே! நம்பொ பொளைக்கிறத்துக்கு வேறொருத்தனைக் கெடுக்கணுமா? நல்லாயிருக்கு! அண்ணே! யிந்த உத்தியோகம் எனக்கு வாணும் வாணும்!

**2-வது சேவ:**—என்னடா சுத்த பைத்தியமா யிருக்கே! நானு என்னு சொல்றேண்ணு பயந்துக்கிறே? திருடன் ஆப்புட்டுக்குவான். அப்பிடி ஆப்புடலே யிண்ணுதானே நானு சொல்ருப்பலே செய்யோணு மங்குறேன்! போவுட்டும் - அதோ பாரு! யாரோ வர்ர சத்தங்கேக்குது! நீ அப்பிடி ஒளிஞ்சுக்கோ! நானு இபபிடி ஒளிஞ்சுக்கிறேன். கிட்ட வரப்பாத்து அவனைப் புடிச்சிக்கிலாம் (செடி மறைவில் ஒளிந்துகொள்ளுகிருர்கள்).

**ஓர் அம்பட்டன் (வந்து) :**—இதென்ன எளவு! நானு எங்கிட்டு வந்தூட்டேன்! இந்த வளி எனக்குப் புதிசாயிருக்கே! காட்டு வளியாயிருக்கே! இண்ணைக்கி நல்ல தலைங்கோ ஆப்புடிச்சியிண்ணு சந்தோஷப்பட்டுக்கினு வந்தத்திலே வளியை வுட்டுட்டு வந்தூட்டேன்! இங்கிட்டு திருடனுங்கோ வந்தாலும் வருவாங்கோ! சடக்கிண்ணு இந்த வளியைத் தாண்டிக்கினு பூடலாம். (விரைவாகச் செல்கிருன்.

**சேவகர்கள் :**—(மறைவிடமிருந்து வந்து) டேய்! நில்லு! ஓடாதே!

**அம் :**—(திடுக்கிட்டு) ஐயோ! நானு நெனச்சாப்பிலியே திருடனுங்கோ வந்துட்டாங்கோ! இந்த முடிச்சியை வோணுமிண்ணு குடுத்தூடலாம்.

**1-வது சேவ** :—டேய் ! அது என்ன மூட்டே ? ராசா வூட்டுலே யிருந்து திருடிக்கினு வார்ரியா ?

**அம்** :—ஐயா ! நானு திருடன் அல்ல, அம்பட்டன். இது மசுரு மூட்டே. வேணும்மிண்ணு பாத்துக்கோங்கோ !

**2-வது சேவ** :—எங்கே அவுத்துக்காமீ ? (மூட்டையை அவிழ்த்துப் பார்த்து) என்னடா ! மசுர் மசுரா வருது ?

**அம்** :—அம்பட்டன் குப்பையைக் கௌருனு மசுர் மசுராகத்தானே வரும்! நான்தான் அப்பொவே சொன் னே னே !

**1-வது சேவ** :—நல்லது ! நீ உன் மூட்டையைக் கட்டிக்கிணு நல்ல வேளையிலேப் போய்ச் சேரு ! போ ! போ !

**அம்** :—அப்பிடியே. (மூட்டையைக் கட்டி எடுத்துக்கொண்டு போகிறுன்).

**1-வது சேவ** :—அண்ணே! நல்ல சவுனம் ஆப்புடிச்சி ! முதல் முதல்லே, அம்பட்டன் வந்தான். அவங்கிட்டெ மசுரைப் பார்த்தோம். நம்பொ வந்த காரியமும் அப்பிடித்தான் ஆவுமோ என்னவோ !

**2-வது சேவ** :—தம்பீ ! அவசரப்படாதே ! லேசிலே ஆப்புடுவானு திருடன் ? பொறுத்துக்கோ பார்க்கலாம். அதோ பாரு ! யின்னொருத்தன் மூட்டையோடு வர்ரான் ! ஒளிஞ்சுக்கோ ! (மறைகிறுர்கள்).

**ஓர் வண்ணுன்** :—(மூட்டையுடன் வந்து) டே ! அப்பா ! யிந்த யிருட்டுலே யிந்தக் காட்டு வளியைத் தாண்டிக்கினு போரதுதான் ஒரு கயிஷ்டம். என்னுபண்றது ? நம்பொ பொண்டாட்டி புள்ளேங்கோ வவுத்துப் பாட்டுக்கு யிப்பிடி எல்லாம் அவஸ்தைப் படோணுமிண்ணு யிருக்கு! பொழுதோடே பூடலாமுண்ணு, எளவு, அந்த கள்ளுக்கடையிலே நேரமாயிடிச்சி. உம். டே ! அப்பா ! யிங்கேத்தானே திருடனுங்கோ சாஸ்தியிண்ணு சொல்லிக்கிறுங்கோ ! சீக்கிரம் இதைத் தாண்டிக்கினு பூடலாம் (போகிறுன்).

**சேவ** :—(மறைவிடத்திலிருந்து வந்து) டேய் ! டேய் ! நில் !

**வண்** :—(திடுக்கிட்டு மூட்டையை கீழே எறிந்துவிட்டு தனக்குள்) போச்சி என் உயிரு இண்ணைக்கி ! நானு நெனச்சாப்பிலேயே ஆயிடிச்சி ! இவனுங்கோ திருடனுங்கோத்தான் ! (வெளிப்படையாய்) ஐயா ! என்னைக் கொண்ணுடாதிங்கோ ! என் பொண்டாட்டி புள்ளேங்கோ எல்லாரும் சத்துப்பூடுவாங்கோ ! வேணுமின்னு இந்த மூட்டையை எடுத்துக்கினு என்னை வுசுரேடே வுட்டுடுங்கோ !

**சேவ** :—டேய் ! நீ யாரு ? இது என்ன மூட்டை ? எங்கிருந்து திருடியாரே ? நெசத்தை சொல்லிடு ? யில்லாகிட்டி, யிதோ, யிந்தக் கத்தியாலே குத்திடுவோம் !

**வண்** :—ஐயா ! ஐயா ! என்னைக் கொண்ணுடாதிங்கோ ! நானு திருடவேயில்லே ! நானு வண்ணுன். அதோ ! அந்த வூர்லே யிருந்து அளுக்குத் துணிங்களே எடுத்துக்கிணு போரேன்.

**சேவ** :—எங்கே, மூட்டையை அவுரு ?

வண் :—தோ, பாருங்கோ ! (மூட்டையை அவிழ்த்துக் காண்பிக்கிருன்).

சேவ :—டேய் ! போதும் ! உம்மூட்டையைக் கட்டிக்கிணு வூரு போயிச் சேரு ! பூடு ! பூடு !

வண் :—நல்லது அய்யா ! (மூட்டையைக் கட்டிக்கொண்டு, தனக்குள்) டே ! சாமி ! தப்பிச்சேன் இண்ணைக்கி, அ - ப் - பா ! இப்பொத்தான் போன உசிரு வந்தது ! இண்ணைக்கு நல்ல மூஞ்சிலே முளிச்சோம் ! இவனுங்கொ திருடனுங்கொ இண்ணு நெனச்சேன். நல்லவேளைக்கி இவனுங்கொ திருடனுங்களே புடிக்கிறதுக்கு வந்திருக்காப்பலே யிருக்கு ! சர்தான் நமக்கென்ன ! போவலாம் (போகிருன்).

1-வது சேவ :—அண்ணே ! சவுனமேலே சவுனம் வருது பாத்தியா ? முதல்லே - அம்பட்டன் மசுரு மூட்டையைப் பார்த்தோம் ! இப்போ - வண்ணன் அளுக்கு மூட்டையைக் காமிச்சான். போதும் நம்பொ திருடனைக் கண்டுபுடிக்கிறது !

2-வது சேவ:—எல்லாம் நல்லத்துக்குதாண்டா யிப்பிடி வார்ரது ! நம்பொ எதாவது பொண்ணை கிண்ணை பார்த்து முவூர்த்தம் வைக்கப் போறமா - அதுக்கு சவுனம் பாக்க ! என்னமோ, நம்பொ வந்த வேளை நல்லாயிருந்தா திருடனைப் புடிச்சிடலாம். இல்லாகிட்டி, யிருக்கவே யிருக்கு ! - டே ! அதோபாரு ! மூணுவது பேர்வழி வர்ரான் ! கையிலே பொட்டிகூட பலமாயிருக்கு ! அவனையும் ஒரு கை பாத்துடலாம். ஒளிஞ்சுக்கோ (மறைகிருர்கள்).

ஒரு தட்டான்:— (மரப்பெட்டியுடன் வந்து) அப்பா ! இவ்விடம் வந்து சேர இவ்வளவு நேரமாகிவிட்டது ! இருளும் சூழ்ந்துகொண்டது ! இனிமேல் அந்த செட்டியாரால் என்னைக் கண்டுபிடிக்க முடியாது. அவருக்கு அப்பொன் வளையல்களைச் செய்து கொடுத்ததற்குப் பேசினபடி கூலியைத் தீர்த்து வாங்கிக்கொண்டேன். மிகுந்த பொன்னைக் கேட்க மறந்துவிட்டார். இதுதான் சமயமென்று அந்தப் பொன்னையும் எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன். என்ன செய்வது ? அவர்கள் நியாயமான கூலியைக் கொடுக்காததினுலேயே இப்படி அநியாயமாய் நடக்கவேண்டி வருகிறது ! நல்லது. இனி காலதாமதஞ் செய்யாமல் இந்தக் காட்டைக் கடந்து நாட்டை அடையலாம் (போகிருன்).

சேவ :—(மறைவிடமிருந்து வந்து) யாரது ? போகாதே ?

தட் :—(திடுக்கிட்டு திரும்பிப் பார்த்து, தனக்குள்) - அடாடா ! மோசம் போய்விட்டேனே ! சேவகர்கள், என்னைப் பிடிக்கவே வந்துவிட்டார்கள்போலும் ! கைக்கு வந்தது வாய்க்கு எட்டவில்லையே ! எப்படியாவது, இவர்களிடமிருந்து தப்பிச் செல்லவேண்டும். பணம் பத்து வகை செய்யும். பார்க்கலாம்.

சேவ :—யார் அய்யா நீர் ? பாத்தாக்கா பத்தரைப்போலிருக்கிங்கோ ! எங்கிருந்து வாரீங்கோ ? இது என்ன பெட்டீ ?

தட் :—ஐயா ! நான் பத்தர்தான். பக்கத்து கிராமத்தில் சில நகைளைச் செய்து கொடுத்துவிட்டுக் கூலியை வாங்கிக்கொண்டு என் கிராமத்தைநாடிச் செல்கிறேன். இந்தப் பெட்டியில் என் ஆயுதங்களிருக்கின்றன.

சேவ :—எங்கே, பொட்டியைத் துறங்கோ பார்க்கலாம் ?

தட் :—பெட்டியில்தான் ஆயுதங்களிருக்கின்றன என்று சொன்னேனே! மறுபடியும் என் திறக்கும்படிச் சொல்லுகிறீர்கள் ?

சேவ :—யில்லே! அந்தப் பொட்டியிலே ஆயுதங்கோதானு, யில்லே, யின்னும் ஏதாவது யிருக்கா இண்ணு பாக்கொணும்! கொஞ்சங் தொறங்கோ !

தட் :—அவசியம் பெட்டியைத் திறக்கவேண்டுமோ ?

சேவ :—ஆமா !

தட் :—திறக்காவிட்டால் !

சேவ :—துறக்காகிட்டீ ! (கையிலிருக்கும் தடியைக் காண்பித்து) தோ ! பாரு ! எண்ணண்ணு ! இத்தாலே ஒரு போடு ! வேறு பேச்சில்லே !

தட் :—(தனக்குள்) நான் இவர்கள் கையில் சிக்கிக்கொண்டேன். இவர்களிடம் அதிகமாகப் பேசினுல் தொந்தரவு ஏற்படும். - வேறு வழியில்லே. சமாதானமாகவே இவர்களிடமிருந்து தப்பித்துக்கொண்டு போய்விடவேண்டும். (வெளிப்படையாய்) ஐயா ! இதோ சாவி ! இப்பெட்டியை நீங்களே திறந்து பார்த்துக்கொள்ளுங்கள் (சாவியைக் கொடுக்கிறுன்).

சேவ :—(சாவியை வாங்கி பெட்டியைத் திறந்து பார்த்து) இந்தப் பொன்னு ஏது உமக்கு ?

தட் :—தட்டாரிடத்தில் பொன், வெள்ளி முதலியன இருப்பது சகஜந் தானே ! இது ஒரு கேள்வியா ?

சேவ :—இவ்வளோ பொன்னு ஏதய்யா ? நெசத்தை சொல்றியா, யில்லாகிட்டி உன்னே ட்டாணுவுக்கு அளச்சிக்கிணு போரதா ?

தட் :-(தனக்குள்) சரிதான் ! நான் வாய்க்கொழுத்து இவ்விடம் சொல்லிக்கொண்டிருந்ததை இவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள் போலும் ! இப்பொழுது என்ன பதில் சொல்லுவது ?

சேவ :—என்னு அய்யா ? முளிக்கிறே ? என்னு சொல்றே ?

தட் :—ஐயா ! நான் அவசரமாக என் வீடு போய்ச் சேரவேண்டும். வீணுக என்னே இவ்விடம் நிறுத்திவைக்காதீர்கள்.

சேவ :—நாங்கொ கேக்குறத்துக்கு பதில் சொல்லேயா ?

தட் :—ஐயா ! இவ்வளவு பொன்னும் என்னுடையதே !

சேவ :—நீ நெசத்தைச் சொல்ல மாட்டியா ? வா - டாணுவுக்கு (அவனேப் பிடித்து இழுக்கிறுர்கள்).

தட் :—(தனக்குள்) இது என்ன எழவாயிருக்கிறது ! இவர்கள் என்னே விடமாட்டார்கள்போலிருக்கிறதே ! சரி, நமக்கோ இந்தப் பொனுல் ஒரு ஐம்பது ரூபாய் வருமானம். இதில் ஒரு பத்து ரூபாயை இவர்களுக்குத் தொலேத்துவிடலாம். (பணத்தை எடுத்து) ஐயா ! இதைப் பெற்றுக்கொள்ளுங்கள் - என்னே விட்டுவிடுங்கள். காலதாமதமாகிறது.

சேவ :—(பணத்தை வாங்கிக்கொண்டு அவனை விட்டுவிடுகிருர்கள்) நல்லது, தொலஞ்சி போ! யினிமே யிப்பிடியாப்பட்ட காரியத்தைச் செய்யாதே?

தட் :—நல்லது அப்படியே ஆகட்டும்! (பெட்டியைப் பூட்டி எடுத்துக் கொண்டு, தனக்குள்) செய்துவிட்டு அகப்பட்டுக்கொண்டால், லஞ்சம் கொடுத்து தப்பித்துக்கொள்ளலாமே! (போகிருன்).

**1-வது சேவ** :—அண்ணே! என்ன அநியாயமிது! பாவம்! அவனை மொட்டி பத்து ரூபாயை வாங்கிக்கிஞேமே! சே! நல்லாயில்லே!

**2-வது சேவ** :—அவன் என்ன கையைவுட்டா குடுத்தான்? அவனுக்கு வந்தது வருமானம். அதில்லே கொஞ்சம் குடுத்தான்! இல்லாத போஞ அவன் செறச்சாலேக்குப் போயிடவாணுமா? நானுதான் அப்பொவே சொன்னேனே! நமக்கு வாச்சம்பளம் கொஞ்சம். கைக்கும் வாய்க்கும் போதாது. அதனலே யிப்பிடி மேவரும்பிடி வாங்கிப் பொளேக்கோணுமிண்ணு!

**1-வது சேவ**:—சர்தான். நம்பொ திருடனைக் கண்டு புடிக்கோணுமிண்ணு வந்திருக்கோமே! அந்தத் திருடஞ யிருந்தாக்கா அவன்? அவனை வுட்டுட்டோமே!

**2-வது சேவ** :—இல்லே! இல்லே தம்பீ! அவன் அந்தத் திருடனில்லே! அதெல்லாம் நானு உஷாராத்தானிக்குறேன். தோ! பாரு! யின்ஞெருத்தன் வர்ரான்! பின்ஞலே திரும்பி, திரும்பி பாத்துக்கினே வர்ரான்! அவனைப் பாத்தாக்காத்தான் ரொம்பொ சந்தேகமாயிருக்கு. மறஞ்சுக்கோ! மறஞ்சுக்கோ! (மறைகிருர்கள்).

**தாமோதரம் பிள்ளை** :—(ஓர் வழிப்போக்கன்போல் வருகிருர்) அடேய் அப்பா! பெருமூச்சுகூட வருகிறது! நான் ஒருநாளும் இதுபோல ஓடி வந்ததே யில்லே. யாருடைய கண்களுக்கும் அகப்படாமல் நாட்டைக் கடந்து ஓடிவந்து இவ்விடம் சேர்ந்தேன். இங்கே மனிதர்கள் யாராகிலும் வருவார்கள் என்ற பயமும் கிடையாது. ஆகையால், விரைவில் இதையும் கடந்து சென்றுவிடலாம். காலதாமதமாகிறது. விரைவில் என் கண்மணி மோஹனவைக் கண்டு அவளிடம் இந்த நகைகளேக் கொடுத்து அவளைத் திருப்தி செய்யவேண்டும். நகைகள் யாவும் இருக்கின்றனவா? ஒருவேளே நான் ஓடி வந்ததில் எதாவது கீழே விழுந்திருந்தால்? நல்லது, பார்க்கலாம். (கீழே உட்கார்ந்து சுற்றிலும் பார்த்துவிட்டு மூட்டையை அவிழ்த்துப் பார்க்கிருன். எல்லாம் சரியாயிருப்பதை நோக்கிவிட்டு மூட்டையைக் கட்டிக் கொண்டிருக்கிருன்).

சேவ :—(தாமோதரம் பிள்ளையின் பின்புறமாக வந்து) டேய்! அத்தை அப்பிடியே வச்சிடு! இல்லாகிட்டி உன்னேடே உசுரு வொடம்புலே யிருக்காது!

(தாமோதரம் பிள்ளை திடுக்கிட்டு சேவகர்களேப் பார்த்துவிட்டு நகைகளையும் எடுக்காமல் ஓடுகிருன்).

சேவ :—(அவனைப் பின்தொடர்ந்து) டேய்! ஓடாதே! டேய்! நில்லு! (அவனைப் பிடித்துக்கொள்ளுகிருர்கள்). டேய்! நீ யாரு! இந்த

நகைங்களே எங்கிருந்து திருடிக்கிணு வாரே? நெசத்தைச் சொல்றியா, யில்லாகிட்டி இந்தத் தடியாலே மண்டையைப் பொளக்குறதா?

தாமோ :—(சற்று தைர்யத்துடன்) ஐயா! நீங்கள் யார்? இங்கே எதற்காக வந்திருக்கிறீர்கள்? இந்த நடுக்காட்டில் போகுவோர் வருவோர்களைக் கொள்ளையடிக்கவா வந்திருக்கிறீர்கள்?

சேவ :—பேஷ்! நல்ல கேள்வி கேட்டே? ஊருமுட்டு நகைங்களைக் கொள்ளை அடிச்சிக்கிணு போரியே! உன்னை புடிக்கிறதுக்குதான் நாங்கோ யிங்கே வந்திருக்கிறோம்! தெரிஞ்சுதா? நட தாணுவுக்கு!

தாமோ :—என்னை அனுவசியமாகத் தொந்தரவு செய்யவேண்டாம்! நான் என் மனைவியின் நகைகளை அவளிடம் கொடுக்க அருகாமையிலிருக்கும் ஊருக்கு எடுத்துக்கொண்டு போகிறேனே ஒழிய, வேறொருவரிடமுமிருந்தும் அபகரித்துக்கொண்டு வரவில்லை! வீணாக வாயில் வந்ததைச் சொல்லி என்மீது பழி சாற்றவேண்டாம்.

சேவ :—இந்த பேச்செல்லாம் யாருகிட்ட சொல்றே? எங்கோகிட்டவா? இதெல்லாம் செல்லாது நீ செத்த முந்தி யிங்கே உக்காந்துக்கிணு என்னா சொன்னே? நீ சொன்னதை யெல்லாம் நாங்கொ கேட்டுக்கிணுதான் யிருந்தோம். எங்களை தபாய்க்காதே!

தாமோ :—நான் என்ன சொன்னேன்! என் மனைவியின் நகைகளை வழியில் கள்வர் கையில் கொடுத்து ஏமாராமல் இவ்வளவு தூரம் கொண்டுவந்து விட்டேனே! விரைவில் இக்காட்டையும் கடந்து சென்று என் மனைவியிடம் கொடுத்துவிட வேண்டும் என்றுதானே சொன்னேன்! இதில் என்ன தப்பு? சரி, உங்களிஷ்டம்போலவே என்னை ட்டாணுவுக்கு அழைத்துச் செல்லுங்கள். அங்கே நான் நிரபராதியென்று ருசுப்படுத்திக்கொள்ளுகிறேன்.

1-வது சேவ :—(2-வது சேவகனைப் பார்த்து) அண்ணே! இவரைப் பாத்தாக்கா பெரிய யெடத்து ஆசாமியாட்டந் தோணலே? இவரு சொல்றுப்பலியே யிந்த நகைங்கோ யிவருதாத்தான் யிருக்கும். என்னா சொல்றே?

2-வது சேவ:—தம்பீ! நானும் அப்பிடித்தான் நெனக்கிறேன். ஆனா ஒண்ணு. இவரு எப்பொ நம்பொகிட்ட ஆப்புட்டுக்கினரோ, ஒரு கை பாத்து வுட்டுடலாம். அப்பிடியிப்பிடி மெரட்டி அவருகிட்டயிருந்து எதாவது தட்டிக்கிலாம். நீ ஒண்ணும் பேசாதே. நானு பாத்துக்கிறேன் (தாமோதரம் பிள்ளையை நோக்கி) ஆனா, நடங்க அய்யா? உம்?

தாமோ :—இதோ நடக்கிறேன் (மூட்டையைக் கட்டிக்கொண்டு தனக்குள்) இவர்களைப் பார்த்தால், திருட்டைக் கண்டுபிடிக்க வந்திருக்கும் சேவகர்கள் போலிருக்கிறது. என்னுடைய திருட்டை ருசுப்படுத்த இவர்கள் என்னை நியாயாதிபதியிடம் கொண்டுபோவார்களேயாகில் நான் இன்னாரென்று தெரிந்துவிடும். அதனால் அதிக அவமானமும் அபகீர்த்தியு முண்டாகும். அவைகளுக் குள்ளாவதைக் காட்டிலும்

எப்படியாவது இவர்களிடமிருந்து தப்பித்துக்கொண்டு போய்விடுவதே நலம் (சேவகர்களை நோக்கி) ஐயா! நிரபராதியான என்னை நீங்கள் அழைத்துக்கொண்டு செல்வதில் உங்களுக்கு யாதொரு பிரயோஜனமும் கிடைக்காது. நானோ அதிக அவசரமாக வீடு போய்ச் சேரவேண்டும். (ஒரு முத்து மாலையை எடுத்து) ஆகையால், தயவுசெய்து இதை வாங்கிக்கொண்டு என்னை விட்டுவிடுங்கள். இதன் விலை ஒரு ஆயிரம் ரூபாயாகிறது.

சேவ:—ஓஹோ! எங்களுக்கு லஞ்சம் குடுத்தூட்டு நீ தப்பிச்சிக்கிணு போவப் பாக்கிரியா? முடியாது!

தாமோ:—ஐயா! நான் கூறுவதைக் கேட்கமாட்டீர்களா? ஒரு ஆயிரம் ரூபாயை நீங்கள் சம்பாதிக்க உங்கள் ஆயுள் முழுவதும் முயற்சித்தாலும் முடியாது. உங்கள் சம்பளமும் சொற்பமாகத்தானிருக்க வேண்டும். நான் நியாயாதிபதி யிடம் வர நேரிடின் நிரபராதி என்று கண்டிப்பாய் ருசுப்படுத்திக் கொள்ளுவேன். பிறகு உங்களுக்குக் கிடைப்பது ஒரு காசுமில்லை. தவிரவும், வேலையில் அபகீர்த்தியும் உண்டாகும். " காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் " என்றபடி இச்சமயத்தை விட்டுவிடாதீர்கள். நான் கொடுப்பதை மறுக்காமல் வாங்கிக்கொண்டு என்னை விட்டுவிடுங்கள்.

சேவ:—(தங்களுக்குள்) ஆமா! யிவரு சொல்றதும் சரிதான். நம்பொ சம்பளமோ, கொஞ்சம். மாசாமாசம் கடன் படுறமே ஒழிய மிஞ்சிய பாடில்லே. அப்பிடியிருக்க, இந்த ஆயிரம் ரூபாயை எப்போ பாக்கப் போறும்! இவரு குடுக்கிறதை வாங்கிக்கிணு திருடன் ஆப்புடலே யிண்ணு சொல்லிடலாம். என்ன செய்றது! (தாமோதரம் பிள்ளையை நோக்கி) ஐயா! உம் பேச்சை நம்புறோம். உங்கோ மனசுபோலவே குடுத்துட்டுப் போயிடுங்கோ. (முத்து மாலையை வாங்கிக் கொள்ளுகிறார்கள்).

தாமோ:—அநேக வந்தனம். நான் சென்று வருகிறேன். (போகிறான்)

2-வது சேவ:—தம்பீ! நம்பொ யிண்ணைக்கி நரி முவத்திலே முளிச் சோண்டா! கொஞ்சமா! ஆ - ஆயிரம் ரூபாடா! கெடச்சா - இப்பிடிக் கெடைக்கோணும்! வா - நம்பொ போயி திருடன் ஆப்புடலே யிண்ணு சொல்லிடலாம். நடந்த சமாச்சாரத்தை ஒண்ணுமே சொல்லாதே! தெரியுமா? (போகிறார்கள்.)

(காட்சி முடிகிறது.)

---

இரண்டாவது அங்கம். மூன்றாவது காட்சி.

இடம்:—கற்பகராஜத்தின் வீட்டில் ஓர் பாகம்.

காலம்:—மாலை.

கற்பகராஜம் ஓர் ஆசனத்தின்மீது துக்கத்துடன் வீற்றிருக்கிறாள்.

கற்ப:—நகைகள் யாவும் களவு போய்விட்ட நாளன்று வீட்டை விட்டுச் சென்ற என் நாதர் இன்னும் என் திரும்பிவரவில்லை! அவர் சென்று எத்தனை நாட்களாகிவிட்டன! அவர் அத்தாசியின் வசத்தில் சிக்கிக்

கொண்டுதா னிருக்கவேண்டும்! இல்லாவிட்டால் இத்தனை நாட்களாக என்னையும் குழந்தையையும் மறந்து வீடு திரும்பாமலிருப்பாரா? சந்தேகமில்லை. களவு போய்விட்ட என் நகைகளைப்பற்றியும் யாதொரு தகவலும் கிடைக்கவில்லை. ஒருவேளை என் நாதரே அந்த வேசிக்குக் கொடுப்பதற்காக அவைகளை எடுத்துச் சென்றிருப்பாரோ! அப்படி யிருந்தாலும் இருக்கலாம். நமது வேலைக்காரன் மீது குற்றஞ் சாற்றினது பிசகு என்று நினைக்கிறேன். அப்படிச் செய்ததினால் அவனும் பயந்து எங்கேயோ ஓடிப்போய்விட்டான். பாவம்! - ஐயோ! என் நகைகளையுமிழந்து, புருஷனில்லா நாரியாயுமாகிவிட்டேனே! இப்பொழுது என் கதி என்ன ஆவது! குழந்தையையும் வைத்துக்கொண்டு என் மீதி வாழ்நாளை எவ்வாறு கழிப்பேன்? ஜெகதீசா! என்னை ஏன் இக்கதிக்கு ஆளாக இப்புவியில் படைத்தாய்? இவ்விதமாக அல்லல்படவோ! பார்ப்போர் என்னை இகழவோ! அன்றையதினம் எத்தனை பெண்கள் என்னிடம் வந்து எனக்குத்தேறுதல் சொல்லுவதுபோலப் பாவனைசெய்து கடைசியில் என்னைப் பரிகசித்துச் சென்றனர்! போதாததற்கு படுபாவி ஒருவன் வந்து என்னைப் பெண்டாளப் பார்த்தானே! இவைகளுக்கெல்லாம் காரணம் என் நாதருடைய நடவடிக்கையல்லவா! அவர் இருக்க வேண்டிய நிலைமையிலிருந்தால் இவ்வாறு நடக்குமா! சே! மானமிழந்து வாழ்வதைப் பார்க்கிலும் தற்கொலை செய்துகொள்வதே மேல்! - இல்லை, அவ்விதம் செய்வதும் பிசகு! நான் இறப்பேனாகில் குழந்தையின் கதி என்ன ஆவது! என், நம்முடைய பெற்றோர்களிடம் சென்றுவிட்டால்? - சே! அதுவும் தகாது. - என் நாதர் திரும்பி வரும்வரையில் எனக்கு எவ்வளவு கஷ்டங்கள் நேரிட்டபோதிலும் அவைகளை அநுபவித்துக்கொண்டு இவ்விடமே இருக்கிறேன். அந்த வேசியானவள் என் நாதரிடமிருந்து எவ்வளவு அபகரிக்க முடியுமோ அவ்வளவையும் அபகரித்துக்கொண்டு, இனி அவரிடமிருந்து பெறுவது ஒன்றுமில்லை என்று தெரிந்ததும் தன் வீட்டு வாசற்படியைக்கூட ஏறவொட்டாமல் புறக்கணிப்பாள். அப்பொழுது எப்படியும் என்னை நினைத்துக்கொண்டு வீடு திரும்பியே வர நேரிடும். இதற்கு சந்தேகமில்லை. அதுவரையிலும் பொறுமையுடனிருக்கலாம். என்ன செய்வது? வருவன வந்தே தீரும். அவைகளினின்றும் தப்பித்துக்கொள்ள முடியாது. - ஹா! என்னகாலம்! எனக்குவந்துற்றகாலம்! (பெருமூச்செறிந்து நாற்காலியின்மீது சாய்கிறாள். இச்சமயத்தில் நாராயணையா வருகிறான்).

**நாரா**:—நான் அன்றையதினம் கற்பகத்தின்மீது மோகங்கொண்டு அவளை என் வசப்படுத்த எவ்வளவோ முயன்றும் பயன்படவில்லையல்லவா? அச்சமயம் நான்செய்த சூழ்ச்சியால் அகஸ்மாத்தாய் அவ்விடம் வந்த தாமோதரம் பிள்ளையும் என்பேச்சை நம்பியிருப்பான். அவன் வீட்டிற்குள் போனதும் மறுநிமிஷமே வீட்டைவிட்டு வெளியே அதிவிரைவாகச் சென்றதைப் பார்த்தால் தன் மனைவியின்மீது வெறுப்பு கொண்டனன்போலும். அவன் இனி வீடு திரும்பிவருவான் என்று எண்ணவே இடமில்லை. நான் எதிர்பார்த்துக்கொண்டிருந்த மறுசமயமும் கிட்டியது. உள்ளே சென்று கற்பகம் என்ன செய்துகொண்டிருக்கிறாள் என்பதை அறிந்தபின் நடக்கவேண்டிய காரி

யத்தைப்பற்றி யோசனை செய்யலாம். (உள்ளேசென்று சோர்வடைந்திருக்கும் கற்பகத்தை நோக்கிவிட்டு) ஹா! இவள் என்னகாரணத்தைமுன்னிட்டோ சோர்வடைந்திருக்கிருள்! ஒருவேளை பசியால் களைப்புற்றிருக்கலாமோ! (சமீபத்தில் சென்று பார்த்து) ஆம். நான் எண்ணியது சரியே, அதி சீக்கிரத்தில் இவளுக்கு ஏதாவது ஆகாரத்தை அனுப்பிவைக்கிறேன். இவளுடைய பசி நீங்கியபின் என் எண்ணத்தை நிறைவேற்றுகிறேன். (செல்கிருன். மறுநிமிஷத்தில் வேலைக்காரி ஓர் தட்டில் ஆகாரத்தையும், ஓர் கோப்பையில் பாலையும் கொண்டுவருகிருள்).

வேலை :—அம்மா எழுந்திருங்கள்! ரொம்பவும் களைத்திருக்கிறீர்கள்போலிருக்கிறது! இதோ, இந்த ஆகாரத்தை உட்கொண்டு, இப்பாலையும் அருந்துங்கள்.

கற்ப :—(சாய்ந்துகொண்டே) யா - ர் - அ - து?

வேலை :—அம்மா! நான்தான் மோஹனவல்லி, உங்களுடைய நண்பரின் வேலைக்காரி.

கற்ப :—(எழுந்திருந்து) என் நண்பருடைய வேலைக்காரியா? யாரடி என் நண்பர்?

வேலை :—என்ன அம்மா! ஒன்றுமே அறியாதவர்கள்போலக் கேட்கிறீர்களே? அவர்தான் நாராயணையா!

கற்ப :—யார்? நாராயணையாவா? ஐயோ! அந்தப்பாவி மறுபடியும் தீங்கிழைக்கக் கருதுகிருளு?

வேலை :—அம்மா! என் அவரை வீணுக தூஷிக்கிறீர்கள்? நீங்கள் இருக்கும் நிலைமையைக் கண்டே இச்சமயம் இந்த உணவை இவ்விடம் கொண்டுபோகச் சொன்ஞர். உங்கள் புருஷரோ வேசியே கதிஎன்றிருக்கிருர். இச்சமயத்தில் என் எஜமானருடைய தயவை நீங்கள் பெறும்பட்சத்தில் உங்கள் ஆயுள் உள்ளவரையில் யாதொரு கவலையுமற்றிருக்கலாம்.

கற்ப :—சீ! வெளியில் போய்விடு! நீ எனக்கு புத்தி புகட்டுவதற்கா இவ்விடம் வந்தாய்! இனி க்ஷணமேனும் இங்கே நிற்காதே! போய்விடு!

வேலை :—அம்மா! உங்களுடைய நன்மையைக் கருதியே சொல்லுகிறேனே ஒழிய வேறில்லை. பிறகு உங்களிஷ்டம். இதோ நான் போய்விடுகிறேன். (செல்கிருள் - வழியில் நாராயணையா இவளைச் சந்தித்து).

நாரா :—மோஹனு! காரியம் கைகூடிற்ரு? என் இந்த ஆகாரத்தைக் கொண்டுவ்ந்துவிட்டாய்?

வேலை :—ஐயா! என்னல் கூடுமானவரையில் பேசிப்பார்த்தேன். உங்களுடைய பேச்சை எடுத்தால் பாம்பைப்போல் சீறுகிருள். ஆகாரத்தையாவது உட்கொள்ளும்படி சொன்னேன். அவள் இதைக் கண்களால் கூட பார்க்காமல் எடுத்துக்கொண்டு போய்விடும்படிக் கடிந்து சொன்ஞள். நான் திரும்பி வந்துவிட்டேன். என்னை மன்னிக்கவும்.

நாரா :—அப்படியா! நல்லது. நீ போ! (வேலைக்காரி போகிருள். நாராயணையா கற்பகத்தின் சமீபம் வருகிருன்).

கற்ப :—(ஆசனத்தைவிட்டு எழுந்திருந்து) ஐயோ ! பாவி, மறுபடியும் வந்தாயா ?

நாரா :—ஆம், வந்தேன் ! கற்பகம் ! உனக்கு இப்பொழுது மிகுந்த ஆபத்து நேரிடும்படியான காலம் வந்துவிட்டது. இப்பேர்ப்பட்ட சமயத்தில் நான் உனக்கு வேண்டிய உதவிபுரிவதற்கு வந்திருக்க வீணுக என்னை ஏன் தூற்றுகிருய் ?

கற்ப :—வாஸ்தவந்தான் ! "ஆடு நனைகிறது என்று ஓநாய்க்கு வருத்தமாம்". முன்னே ஒரு முறை எனக்கு எத்தகைய உதவி புரிந்தாய் என்று தெரியும்! உன் யோக்கியதை எப்பேர்ப்பட்டதென்று அன்றே கண்டுகொண்டேனே !

நாரா :—அன்றையதினம் நான் உனக்கு ஒரு தீங்கும் செய்யவில்லையே ! உன் புருஷன் மதுபானம் உண்டு அறிவிழந்து தாசியின் நேசமுங்கொண்டு காலத்தைக் கழிக்கும்பொழுதும் உன் புருஷன்மேலிருக்கும் அன்பு அப்படியே இருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா என்பதை அறியும்பொருட்டே நான் உன்னை அவ்வாறு சோதித்தேன். வேறுவிதமான கெட்ட எண்ணத்தோடு செய்யவில்லையே !

கற்ப :—பேஷ்! வெகு பொருத்தமான பேச்சு ! "இவள் என்ன, பெண்தானே. என்ன சொன்னபோதிலும் நம்பிவிடுவாள்" என்று நினைத்து இப்பேர்ப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுகிருயோ ? உன்னுடைய எண்ணங்களையெல்லாம் நான் அறிவேன். வீணுக என்னிடம் வார்த்தையாடவேண்டாம்.

நாரா :—கற்பகம் ! என் எண்ணங்களை நீ அறிந்துகொண்டதாகவே வைத்துக்கொள்ளுவோம். அவ்விதமாக நடப்பதில் என்ன தப்பு ? நீ இனி உன் புருஷனைப் பெறப்போவதில்லை. என்னைப்போன்ற வேறு புருஷனுடைய தயவை நீ சம்பாதித்துக்கொண்டு உன் மீதி வாழ்நாட்களை ஏன் சுகமாகக் கழிக்கக்கூடாது ? நான் கூறுவதைச் சற்று யோசித்துப் பார் ?

கற்ப :—இப்பேர்ப்பட்ட எண்ணந்தான் வேண்டாமென்று சொல்லுகிறேனே! இதைப்பற்றி இனி ஒருவார்த்தையும் கூறவேண்டாம். மரியாதையுடன் வெளியில் சென்றுவிடு ? எனக்கு எக்கேடு உற்றபோதிலும் அதனல் உனக்காவது ஒன்றுமில்லை.

நாரா :—நான் உனது நன்மையைக் கோரி இவ்விடம் வந்திருக்க இவ்வளவு சீக்கிரத்தில் உன்னைவிட்டு எப்படிப் போவேன் ?

கற்ப :—இது என்ன எழவாயிருக்கிறது ? நான்தான் என்ன தீங்குகள் நேரிடினும் அவைகளை அநுபவிக்கத் தயாராயிருக்கிறேனென்று சொன்னேனே ! நீர் இதைக்குறித்து கவலைப்பட வேண்டியதில்லையே !

நாரா :—நீ என்ன சொன்னபோதிலும் உன் பரிதாபமான நிலைமையைப் பார்க்க என் மனம் சகிக்கவில்லை. நீயோ, அதிக யௌவன வயதுடையவளாயிருக்கிருய். உனது இளமைப் பருவத்தில் அநுபவிக்கவேண்டிய சுகங்களை அநுபவிக்காமல் வாடுவதைப் பார்க்க யாருக்கு மனம் பொறுக்கும் ? ஆகையால், இச்சமயத்தில் என் காதலை

நீ அங்கீகரிப்பாயானல் உன் ஆயுள் முழுவதும் உனக்கு வேண்டிய சுகபோகங்களைக் கொடுத்து உன்னைத் தேவலோக ஸ்திரீயைப்போல் வைப்பேன். என்னுடைய வார்த்தையை மறுக்காதே.

கற்ப :—அடா பாவி! நீ கற்றது இவ்வளவுதானா? பிறர் மனைவியை இச்சிப்பது நியாயமாகுமா? என் உயிர் போவதாயிருந்தாலும் மற்றொரு புருஷன்மீது இச்சையை வைப்பேன் என்று எண்ணவேண்டாம். உன் ஐஸ்வரியத்தையும், சுகங்களையும் வேண்டியவர்களுக்குக் கொடு, வெளியில் போகிறாயா, என்ன?

நாரா :—உன்னையே நாடி வந்தவன் உன் அன்பையாவது பெறுமல் போவேனே? ஆகையால், கண்ணே! ஒரு வார்த்தை சொல்லிவிடு! உன் காதலைப் பெருமல் நான் உயிர்வாழ முடியாது. தயவு செய்ய வேண்டும்.

கற்ப :—இவ்விடம் நான் தனிமையாக அகப்பட்டுக்கொண்டேனென்று உன்னையுமறியாமல் வாயில் வந்ததைச் சொல்லுகிறாய்? நீ என்ன சொன்னபோதிலும் சிறிதேனும் பயன்படாது. அதற்கு மாறுக, உனக்கே தீங்கு நேரிடும். வீணாக அழிந்து போகாதே.

நாரா :—உன்னால் எனக்கு என்ன தீங்கு நேரிடினும் சரி, என் உயிர் போவதாயிருந்தாலும் சரி, உன்னை நான் இன்று விடமாட்டேன். ஆகையால், கண்ணே! (கற்பகத்தின் சமீபத்தில் நெருங்கி அவளைப் பிடிக்க முயல்கிறான்).

கற்ப :—(அவனுடைய கைகளுக்கு அகப்படாமல்) அடா! பாவி! உனக்கு என்டா கேடுகாலம்? உன் சொந்த மனைவி இருக்க, உன் நண்பருடைய மனைவியை இச்சிக்க வந்தாயே! இது உனக்கு அடுக்குமா? நண்பருடைய மனைவியைத் தாயைப்போல் அல்லவோ கருதவேண்டும்! ஐயோ! இச்சமயத்தில் எனக்கு உதவுவார்கள் யாருமில்லையே! இந்தப்பாவி என்னை மானபங்கம் செய்கிறானே! (அவனிடமிருந்து தப்பி ஓடி வெளியே வந்து) ஹா! ஜெகதீசா! நான் இன்று தப்பியது என் பாக்கியமே. இனி இங்கிருப்பது தவறாகும். மறுபடியும் ஏதாவது தீங்கிழைக்கக் கருதுவான். ஆகையால், யாரும் அறியாமல் வீட்டிற்குப் பின்பக்கமாய்ப்போய் ஆண்வேடம் பூண்டு குழந்தையையும் அழைத்துக்கொண்டு என் நாதரைத் தேடிச் செல்கிறேன். ஜெகதீசா! என்னை ரட்சிப்பாயாக! (விரைவாகப் போகிறாள். நாராயணையா வருகிறான்).

நாரா :—எங்கே அவள்? இங்கேதானே வந்தாள்! (சுற்றிலும் பார்த்து) என்ன ஆச்சரியம்! இங்கு வந்தவளைக் காணோமே! இச்சமயமும் என்னை ஏமாற்றிவிட்டு ஓடிவிட்டனளே! இருக்கட்டும். கள்வர் தலைவனான என்னை கேவலம் ஒரு பெண் ஏமாற்றுவதா? பார்க்கலாம்! என் உயிர் உடம்பிலிருக்கிறவரையில் எப்படியாவது இவளைக்கண்டு பிடித்து என் குகையில் சிறையிட்டு என் காதலுக் கிணங்கும்படிச் செய்கிறேன். காலதாமதமாகிறது. இவ்விடம் அதிக நேரமிருந்தால் பிறர் யாராவது என்னை காணும்படி நேரிடும். இப்பொழுதேசென்று மேலே நடக்கவேண்டிய காரியங்களைப்பற்றி யோசிக்கலாம்.—ஆம்; இதுதான் நல்ல யோசனை (விரைவாகப் போகிறான்).

(காட்சி முடிகிறது.)

மூன்ருவது அங்கம். முதற்காட்சி.

இடம் :—ஓர் பாதை.

காலம் :—மாலே.

*தாமோதரம் பிள்ளை நின்றுகொண்டு யோசித்தவண்ணமா யிருக்கிருன்.*

தாமோ:– என் அருமை மோஹனங்கி என்மீது கோபங்கொண்டிருக்கிருள். அவள் கேட்டபணத்தைக் கொண்டுபோனுலொழிய என்னுடன் பேச மாட்டாள். இதற்கு என்ன செய்வது? அவளை எந்நேரமும் பார்த்துக்கொண்டிருக்கும்படியான நான் சிறிது நேரம் அவளைப் பாராவிடில் குருடன்போல விளங்குகிறேன். அவளுடன் சதா பேசிக்கொண்டு இருக்கும்படியான நான் சற்று வார்த்தையாடாவிடில் ஊமைபோல் தோன்றுகிறேன். அப்படியிருக்க, இனி ஒரு கணமும் அவளை விட்டுப் பிரிந்திருக்க முடியாது. இது நிச்சயம், ஆனல் பணத்தைக் கொண்டுபோனுலொழிய அவள் என்னைப் பாராள். இதற்கு என்ன செய்வது? என்னிடமிருந்த சகல ஐஸ்வரியங்களையும் அவளுக்குக் கொடுத்துவிட்டேன். அதுவுமல்லாமல் என் மனைவியின் சகல நகைகளையும் கொண்டுவந்து கொடுத்துவிட்டேன். இப்பொழுது கையில் ஒரு காசுமில்லை. இப்பேர்ப்பட்ட சமயத்தில் என் மனதிற்கு ஒன்றுமே தோன்றவில்லை. (சிந்தித்தவண்ணமாக மெல்ல நடக்கிருன். தன் சொக்காய் பையிலிருந்து மதுபான புட்டியை எடுத்து மதுபானத்தை அருந்துகிருன்). சே! இந்த மதுபானம் என் கண்மணி மோஹன தன் கையால் எனக்கு அருந்தக் கொடுக்கும்பொழுது உண்டாகும் சுவையைப்போல் இப்பொழுது இல்லை. என் பிரியையை சீக்கிரம் பார்க்கவேண்டும். ஆனல், பணம்! பணத்தைப் பெறுவதற்கு எனக்கு ஒரு யோசனையும் தோன்றவில்லையே! காலதாமதமாகிறது. இச்சமயத்தில் பணத்தைப் பெறுவதற்கு என்னை என்ன செய்யச்சொன்னபோதிலும் செய்து முடிக்கத் தயாராயிருக்கிறேன். பஞ்சமாபாதகங்களைச் செய்யவும் பின்வாங்க மாட்டேன். (இவன் பேசிக்கொண்டிருந்ததை மறைவாகயிருந்து கேட்டுக்கொண்டிருந்த ஓர் வழிப்போக்கன் இவனிடம் வருகிருன்).

வழி :—என்ன! அண்ணே! என்னைத் தெரியுதா இன்னுரிண்ணு? என்ன என்னமோ வோசனையிலிருக்கிங்கோ?

தாமோ :—ஐயா! நீங்கள் யார்?

வழி :—என்ன அண்ணே! அதுக்குள்ளே மறந்துபூட்டிங்கோ! உங்கொ ஆரு, நாட்டுரொட்டியில்லே?

தாமோ :—நாட்டுரொட்டியுமல்ல, கோதுமை ரொட்டியுமல்ல. நாட்டுப்பட்டியல்லவா?

வழி :—அத்தான் அண்ணே! நாட்டுப்பட்டி! அந்த ஆருலே, வீர்சாமி தெருவு யிருக்கே, தெரியுமா?

தாமோ :—ஆம், வீராசாமித் தெருவு?

வழி :–அந்தத் தெருவு முக்குலே யிருக்கே, கள்ளுக்கடை, அங்கே நம்பொ ரெண்டுபேரும் ஒரு மொந்தையிலே குடிச்சோமே! காபகமிருக்கா?

தாமோ :—எதைக் குடித்தோம் ?

வழி :—என்னத்தைக் குடிப்பாங்கோ கள்ளுக் கடையிலே ? அத்தான்— கள்ளு !

தாமோ :—நானு கள்ளைக்குடித்தேன் ? அடேய் ! என்னைக் குடியனென்று சொல்லுகிறாய் ?

வழி :—நானு என்ன உன்னை குடியன் இண்ணு என் வாயாலே சொன்னேனு யிப்போ ? நம்பொ ரெண்டுபேரும் குடிச்சோமே, நனவு யிருக்கா யிண்ணு கேட்டேன். அது போவுட்டும், அண்ணே ! அந்த வூருலே நண்டுவளை வீதியிருக்கே ! அத்தைத் தெரியுமா உனக்கு ?

தாமோ :—நண்டுவளை வீதியா ? இல்லை, குண்டுபிள்ளை வீதியல்லவா ? அதையா கேட்கிறாய் ?

வழி :—அஹான் - அத்தான் - அத்தான் அண்ணே ! அந்த வீதியிலே யிருக்கே சாக்கடை ! அதில்லே நம்பொ ரெண்டுபேரும் போதையிலே வுழுந்து பந்தியம் போட்டுக்கிணு பொரண்டோமே தெரியுமா ?

தாமோ :—அடேய் ! நீ யாருடன் குடித்துவிட்டுக் கிடந்தாயோ ! வீணுக என்னை வம்புக்கு இழுக்கிறாயே ? ஏது அதனப்பிரசங்கியாயிருக்கிறாய் ?

வழி :—அண்ணே ! கோவுச்சுக்காதே. அப்பொ என்னமோ - சேஞ்சிட்டிங்கோ போதையிலே. இப்போ, கெவுர்தையாத்தான் யிருக்கோணும். அதெல்லாம் போவுட்டும், அந்தப் பிடாரியான் புளியந் தோப்புயிருக்கே அத்தையாவது தெரியுமா ?

தாமோ :—பீடாராம் புளியந் தோப்பா ?

வழி :—அஹான் ! அத்தான்! அந்தத் தோப்புலே புளியமரத்துக்கடியிலே, நம்பொ ரெண்டுபேரும் துட்டுவச்சி சீட்டு ஆடுனமே, அதுகூட நெனவுயில்லியா ? - வோசனை பண்ணிபாரு ?

தாமோ :—அடேய் ! என்ன வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசுகிறாய் ! முதலில் குடிகாரனென்றாய், பிறகு வெறியனென்றாய், இப்பொழுது சூதாடி என்கிறாயே ? யாரிடத்தில் இவ்வார்த்தைகளை மொழிகிறாய் ? ஜாக்கிரதை ?

வழி :—ஆமா அண்ணே ! உள்ளத்தை சொன்னுக்கா, எல்லாருக்கும் கோவந்தான் வரும் ! அது போவுட்டும், கோவிச்சுக்காதே ! - அது என்னு ஜோபியிலே - புட்டியாட்டமிருக்குது ? எடு பாக்கலாம் ? (தாமோதரம் பிள்ளை சாராயபுட்டியை எடுக்கிறான்) இப்பிடி குடு பாக்கலாம் ? (புட்டியை வாங்கிக்கொள்ளுகிறான்) பாத்தியா, சாராய புட்டி ! நானு சொன்னத்துக்கெல்லாம் கோவுச்சுக்கினியே ? (சாராயத்தைக் குடிக்கிறான்) - உம் ! தோ ! பாரு ? ஏன் ஒரு மாதிரியா யிருக்கே ? என்னு கொறை ?

தாமோ :—என் குறையைச் சொன்னல் அதைத் தீர்க்க உன்னலாகுமா ?

வழி :—என்னலியா முடியாது ? அது இன்னதுயிண்ணு சொல்லு ? தீக்கிரனு இல்லியா யிண்ணு பாரு ! மனுஷனுக்குப் பணம் யிருந்திடிச்சி அண்ணு அப்பாலே என்ன கொறை அவனுக்கு ? அந்தக்

கொறைதான் உனக்கும் யிருக்கோணுமிண்ணு தெரியுது. - அத் தானே ? - எனக்கு கொஞ்சம் சோசியங்கூட தெரியும்.

**தாமோ** :—பலே ! அப்படி ! சரியாய்ச் சொன்னீர்கள் ! பணத்தால் உண்டாயிருக்கும் கவலைதான். எனக்கு இப்பொழுது - ஆயிரம் - பொன் - வேண்டும். அதற்காக நீர் என்னை எதைச்செய்யச்சொன்ன போதிலும் செய்வதற்குப் பின்வாங்கமாட்டேன்.

வழி :—ஆஹா ! அப்பிடியா ? (தனக்குள்) நானு என்னுத்தை நெனச்சிக்கிணு வந்தேனோ, அதேபோல் ஆச்சி. யிருக்கட்டும், எங்காரியத்தை இவனைக்கொண்டே முடிச்சிடலாம். (வெளிப்படையாய்) அண்ணே ! தோ, பாரு ? நானு சொல்றுப்பலே நடந்தியாண்ணா உனக்கு ஆயிரமில்லே, யின்னும் ரொம்பொ பணம் புடிச்சித் தாரேன் ! என்ன சொல்றே ?

**தாமோ** : —ஐயா ! அப்படியே செய்கிறேன்.

வழி :—யிப்பொ, எம்பின்னாலியே வாங்கோ ? நானு நிண்ணுகிற யெடத்திலே நீங்களும் நிண்ணுகோங்கோ ? அப்பாலே என்ன செய்யோணுமிண்ணு சொல்றேன்.

**தாமோ** .—ஐயா ! நீர் இப்பொழுது எங்கே போகவேண்டுமென்று சொல்லுகிறீர்கள் ?

வழி :—அந்தக் கேள்வி ஒண்ணுங் கேக்காதிங்கொ. பேசாதே எம்பொறத்தாலியே வாங்கொ. அப்பாலே எல்லாந் தெரிஞ்சுக்கலாம்.

**தாமோ** :—அப்படியல்ல. தயவுசெய்து நான் கேட்பதற்குமாத்திரம் பதில் சொன்னால் போதும்.

வழி :—நானு யிப்பொ சொல்றேண்ணு வச்சிக்கோ. அப்பாலே நீ வராதே போயிட்டாக்கா !

**தாமோ** ·—நான் ஒருபொழுதும் அவ்விதம் செய்யமாட்டேன். பொன்னைப்பெற என்ன காரியத்தை என்னைச் செய்யச் சொன்னபோதிலும் செய்யத் தயாராயிருக்கிறேனென்று முன்னமே கூறினேனே ! அப்படியிருக்க, நான் இப்பொழுது பின்வாங்குவேனா ?

வழி :—நானு சொல்ற யெடத்துக்கு நெசம்மா வருவியா ?

**தாமோ** ,—உண்மையாக வருவேன். இது சத்தியம். என் குறையைத் தீர்ப்பதற்கு என் உயிரையுமிழக்கத் தயார் !

வழி :—சீச்சீ! வாணாம்! நீ செத்துபூட்டியானா உங்கொறை எப்பிடித்தீரும் ? எங்காரியமும் கெட்டுப்பூடுமே ! தோ, பாரு ! நானு சொல்றதைக் கேளு ! நம்பொ ரெண்டுபேரும் ஒரு யெடத்துக்குப் போறது. யெடம் அண்ணா, ஒரு பணக்காரன் வீடு. அந்த வீடு ஒரு கொகைக்குள்ளே யிருக்கு. அந்த கொகைக்கு வெளியிலே நம்பொ மறஞ்சிக்கிணு யிருக்கோணும். அவன் வெளியிலே வந்ததும் அவனை ஒரே வெட்டா வெட்டிடோணும். அப்பாலே, கொகைக்குள்ளே போயி, நகை, பணம் வேணுமங்குரதை எடுத்துக்கிணு வந்தூடலாம். சம்மதந்தானா ?

**தாமோ** :—சரி, அப்படியே. வாருங்கள் போகலாம். (போகிறார்கள்)

**(காட்சி முடிகிறது.)**

மூன்றுவது அங்கம். இரண்டாவது காட்சி.

இடம் :—காடு.

காலம் :—சூரியாஸ்தமானம். ஆண்வேடம் பூண்டு கற்பகராஜம் தன் குழந்தையுடன் வருகிருள்.

கற்ப :—ஹா! ஜெகதீசா! நெடுநாழியாக நடந்து நாட்டைக் கடந்து வழி தவறி இக்காட்டில் வந்து அகப்பட்டுக்கொண்டேனே! பொழுதும் புலர்ந்துவிட்டதே! இவ்விடத்தில் வசிக்கும்படியான வனவிலங்குகளின் ஓசை காதில் விழும்பொழுதெல்லாம் என் மனதைத் திடுக்கிடச் செய்கிறதே! என் நாவும் உலர்ந்துவிட்டது! குழந்தையும் பசியால் வருந்துகிருன்! அருந்தத் தண்ணீரையும் காணேம்! இக்கானகத்தில் இந்நேரத்தில் ஜலமிருக்குமிடத்தை எங்கே தேடுவது? ஐயோ! நான் பிறந்தது முதல் இதுவரையிலும் இப்பேர்ப்பட்ட கஷ்டங்களை அநுபவித்தறியேனே! ஆபத்பாந்தவா! அநாதரட்சகா! நீயே எனக்குத் துணையிருந்து என்னையும் என் குழந்தையையும் காப்பாற்றுவாய்! - (குழந்தையைப் பார்த்து) என் செல்வமே! நீ இவ்விடமே இருப்பாய். நான் சென்று தண்ணீர் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து, அருந்தத் தண்ணீரையும், எதாவது கனி, கிழங்குகளையும் சேகரித்துக்கொண்டு அதிசீக்கிரத்தில் திரும்பி வருகிறேன். இவ்விடத்திலேயே இரு! எங்கேயும் போகாதே! தெரியுமா? (குழந்தைக்கு முத்தமிட்டுவிட்டுச் செல்கிருள்).

குழந்தை :—(சிறிது நேரங் கழிந்ததும்) ஐயோ! அம்மாவைக் காணேமே! அம்மா! அம்மா! எனக்குப் பயமாயிருக்கு! நானும் வர்ரேன்! அம்மா! அம்மா! (வேறு பக்கமாய்ச் செல்கிருன்).

கற்ப :—(கானகத்தில் ஓர்புறமாக வந்து) ஆ! இதோ ஓர் சோலை காணப்படுகிறது! இதன் மத்தியில் ஓர் கிணறு இருப்பதுபோலவுந் தோன்றுகிறது. சமீபத்தில் சென்று பார்க்கலாம். (சமீபத்தில் வந்து) ஆம், கிணறுதான்! தண்ணீர் வெகு ஆழத்திலிருப்பதுபோல் காணப்படுகிறதே! இதை எப்படி அடைவது? இந்த இருளில் தண்ணீரிருக்குமிடத்தையும் சரியாய்ப் பார்க்க முடியவில்லையே! இக்கானகத்தில் இவ்வளவு நேரமாக அலைந்தபின் ஜலமிருக்குமிடத்தைக் காணும்படிச் செய்த கருணாநிதி அதை அடைவதற்கும் ஒரு வழியைக்காண்பிக்க மாட்டாரா? நான் குழந்தையைத் தனிமையாக விட்டு வந்து அதிக நேரமாகிவிட்டது. இருளும் சூழ்ந்துகொண்டது, குழந்தையின் கதி என்னவானதோ! சீக்கிரம் திரும்பிப் போக வேண்டும். ஜலமில்லாமல் எப்படிப் போவது? நீர் வேட்கையால் இனி ஒரு அடிகூட எடுத்துவைக்கவு முடியவில்லை. (மனிதர் குரல் கேட்டு) ஹா! யார் அது? மனிதர் குரல் கேட்கிறதே? (பார்த்து) யாரோ இருவர் வருகிருர்களே! இவ்விடத்தை நாடியே வருகிருர்கள். இதுவும் நம்முடைய பாக்கியந்தான். இவர்களைக்கொண்டு தண்ணீரைப்பெற முயற்சி செய்யலாம். (மறுபடியும் பார்த்து) ஐயோ! அவர்களைப் பார்க்கும்பொழுதே பயமாயிருக்கிறதே! நரமனிதர்கள்தாஞ, அல்லது வனத்தில்சஞ்சரிக்கும் பைசாசங்களோ!- இல்லை, இல்லை! திருடர்கள்போலிருக்கிறதே! - (திருடர்கள் இருவர் வருகிருர்கள்) - ஆம்! திருடர்கள்தான்! ஐயோ! இவர்களிடமிருந்து எப்படித் தப்புவது?

திரு :—யிதி, எமி காலம் ! யீ தோவலா, எவருகூட லேது ! (கற்பகத்தைப் பார்த்துவிட்டு) ஏ ! யாரு நீ ? யிங்கே என்ன பண்றே ? உங் ?

கற்ப :—ஐயா ! நான் ஒரு வழிப்போக்கன். இருட்டில் வழி தவறி இக் கானகத்தில் வந்துவிட்டேன். தயவுசெய்து என்னைச் சரியான வழியில் கொண்டுபோய் விட்டுவிடுவீர்களானல் உங்களுக்கு புண்ணியமுண்டு.

திரு :—தெரிஞ்சுது ! உன்னேடே வளியே அப்பாலே காமிக்கிறேம். இப்போ எங்களுக்கு என்ன வளி ?

கற்ப :—ஐயா ! நீங்கள் சொல்லுவது எனக்கு விளங்கவில்லை. நீங்களும் வழி தவறி இவ்விடம் வந்திருக்கிறீர்களா ?

திரு :—ஏ ! என்ன ? ஒண்ணும் தெரியாதபோலே பேசுரியே ? எங்களைப் பாத்தா இன்னரிண்ணுத் தெரியலே ? உன்னைப்போலவங்கோ, இந்தக் காட்டுலே வந்து ஆப்புட்டுக்கின அவங்ககிட்டே நாங்கொ என்னத்தான் கேப்போம் ?

கற்ப :—ஐயா ! உங்களைப் பார்த்தால் பரம சாதுக்கள்போலக் காணப்படுகிறீர்கள். ஆனல் நீங்சள் கூறுவது ஒன்றுமே விளங்கவில்லை.

திரு :—என்ன - ரொம்பொ ஒலக்கடமாயிருக்கு ! ஏ ! நாங்கொ திருடருங்கோ - சீக்கிரம் உங்கிட்ட யிருக்கிற காசி, பணம் எல்லாம் எடு ?

கற்ப :—ஐயா ! நான் பரம ஏழை. என்னிடத்தில் ஒன்றுமே யில்லை. வீணக என்னைத் தொந்தரவு செய்யாமல் விட்டுவிடுங்கள். உங்களுக்கு அதிக புண்ணியமுண்டு.

திரு :—மருவாதையாக் கேக்கப்போன இப்பிடித்தான் சொல்ற வளக்கம். எங்கொ வேலையைச் செய்ய ஆரம்பிச்சாக்கா, ஒவ்வொண்ண வெளியேவந்துடும். இப்பொ என்ன சொல்றே ? மருவாதையா சட்டையெல்லாம் அவுத்துக் கீளே வைக்கிறியா - இல்லாகிட்டி நாங்கொ கிட்ட வர்ரதா ?

கற்ப :—(தனக்குள்) ஐயோ ! சிவமே ! என் கதி இப்படியும் ஆகவேண்டுமா ? என்னைக் கெடுக்க வந்த ஒரு பாவியிடமிருந்து தப்பித்துக் கொண்டு வர, இங்கே இரு பாதகர்களிடம் அகப்பட்டுக்கொண்டேனே ! நான் பெண் என்று தெரிந்தால் இவர்கள் என்னைச் சும்மா விட்டுவிடுவார்களா ? அந்தோ ! நான் ஏன் இப்புவியில் பெண்ணகப் பிறந்தேன் ! என் குழந்தை என்னவாயினனே ! ஹா ! ஜெகதீசா ! இவ்வேளையில் எனக்கு உதவுவார் யாருமில்லையா ?

திரு :—ஏ ! என்ன சும்மாயிருக்கே ? நாங்கொ வந்து அவுக்குறதா ?

கற்ப :—ஐயா ! நான் கூறுவதைக் கேட்கமாட்டீர்களா ? ஆயினும் உங்களிஷ்டப்படியே இதோ சட்டையைக் கழற்றுகிறேன். (சட்டையைக் கழற்றுகிருள். பெண் வடிவத்துடன் நாணி தலைகுனிந்து நிற்கிருள்).

1-வது திரு :—அண்ணே ! பாத்தியா ? யிவ - பொம்பிளே ! நம்பளே ஏமாத்த யிப்பிடி வேசம் போட்டுக்கிட்டாப்பலிருக்கு ! யிவ - லேசானவயில்லே !

2-வது திரு :—அஹான் தம்பீ! யிவ நல்லா அளகாகூட யிருக்கா! ஒரு வேளே யிவ புருஷனே ஏமாத்திட்டு யிப்பிடி வேசம் போட்டுக்கிணு ஓடிவந்துட்டாப்பலிருக்கு! தோ! பாரு - நானு சொல்றதைக்கேளு?

1-வது திரு :—கேக்குறேன். என்ன சொல்றே?

2-வது திரு :—இவளே, நம்பொ யிங்கே ஒண்ணும் பண்ணுதே நம்பளோடே கூட்டிக்கிணுபோயி நம்பொ எஜமாங்கிட்ட வுட்டுடலாம். என்ன சொல்றே?

1-வது திரு :—ஊ, ஊங் - அது ஒதவாது அண்ணே! இவ எப்போ-நம்பொ கண்ணுலே ஆப்புட்டாளோ, யிவளே நம்பொதான் கூட்டிக்கிணு போய் வச்சிக்கோணும்.

2-வது திரு :—டேய்! யிப்பிடியெல்லாம் சொல்லாதேடா! நம்பொ போர வார வளியிலே, காட்டுலே மேட்டுலே - சந்துலே பொந்துலே, அப்பிடி யிப்பிடி, பொண்ணு கிண்ணு யாராவது ஆப்புட்டாக்கா தங்கிட்ட கொண்ணாந்து வுட்டுடோணுமிண்ணு நம்பொ எசமாங் கட்டளேயிட்டிருக்கிருரே! அதை மறந்து பூட்டியாடா? அப்பிடித்தான் நம்பொ கொண்டுபோயி வச்சிக்கினேமிண்ணு மத்தவங்கொ போயி எசமாங்கிட்டே சொல்லிடுவாங்களே! அப்பாலே நம்பளே உசுரோடே வைப்பாராடா? இத்தையெல்லாம் வோசனேபண்ணுதே பேசுரியேடா முட்டாளாட்டம்?

1-வது திரு :—ஆமா அண்ணே! அத்தை மறந்தே பூட்டேன்! வாணும், வாணும்! நம்பொ உசுரே ஒரு பொம்மனாட்டிக்கா வுடுறது? நீ சொல்றாப்பலியே சேஞ்சுடு அண்ணே!

2-வது திரு :—அத்தாண்டா சரி! (கற்பகத்தை நோக்கி) என்னம்மே! மொதல்லே ஆம்பிளே வேசம் போட்டுக்கிணு யிருந்தே? எங்களே ஏமாத்தவா?

கற்ப :—ஐயா! நான் ஒரு காரணத்தால் ஆண்வேடந் தரித்து வெளிக் கிளம்பி வரவேண்டியதாயிற்று.

2-வது திரு:—சர்தான். வா எங்கொ பின்னேடே? உனக்குப் புடிச்ச யெடத்திலே கொண்டுபோருேம்.

கற்ப :—ஐயா! என்னே வேறு ஒரு இடத்திற்கும் கொண்டுபோகவேண்டாம். என் நாட்டிற்குப் போகச் சரியான வழியைக் காண்பிப்பீர்களானல் அதுவே போதும்.

2-வது திரு :—அத்தான் அம்மே! அங்கேத்தான் கொண்டுபோருேம். வா எங்க பின்னலே?

கற்ப :—ஐயா! சிறிது தூரத்தில் என் குழந்தையை விட்டுவிட்டு தண்ணீர் பெற இவ்விடம் வந்தேன். அங்கு சென்று என் குழந்தையையும் அழைத்துக்கொண்டு வருகிறேன்.

திரு :—சரி - நட? நாங்களும் உன்னேடே வர்ரோம். (எல்லோரும் ஒரிடத்தில் வருகிருர்கள். கற்பகம் சுற்றிலும் பார்த்துக் குழந்தையைக் காணமல் வருந்துகிருள்).

கற்ப :—ஐயோ! இங்குதானே விட்டுச் சென்றேன்! குழந்தையைக் காணேமே! அதற்குள்ளே எங்கு சென்றிருப்பான்? ஒருவேளை என்னைப் பின்பற்றி வழிதவறி வேறு எங்கேயாவது சென்றுவிட்டனனே? அல்லது ஏதாவது வன விலங்குகள் அவனைத் தூக்கிச் சென்றனவோ! அப்பா! கண்ணே! உன்னையுமா இழக்கும்படி நேரிட்டது? ஹா! ஈசா! (புலம்புகிறுள்).

திரு :—சர்தான். கொழந்தையே இந்நேரத்திலே இந்த யிடத்திலே தனியாவுட்டாக்கா யிருக்குமா? இங்கே புலி சிறுத்தை சாஸ்தி யாச்சே! அதுங்கோ ஏதாவது தூக்கிக்கிணு பூட்டுதோ என்னமோ? அழுதாக்கா வந்துடுமா? உம் - நேரமாச்சி - புறப்படு சீக்கிரம்? இன்னம் இங்கிருந்தா நம்பளேயும் ஏதாவது வாயிலே போட்டுக்கும். வா, போகலாம்? (கற்பகத்தை அழைத்துக்கொண்டு போகிறுர்கள். சிறிது நேரங் கழிந்தபின் குழந்தை வேறொரு பக்கமாக வருகிறுன்).

குழ :—ஐயோ! அம்மா போயி ரொம்ப நேரமாச்சி! இருட்டிகூட போச்சி! எங்கெங்கெல்லாம் தேடுனே! கண்ணுக்கு ஆப்புடலே! அம்மா! அம்மா! எனக்குப் பசிக்குது! தண்ணி தாவமெடுக்குது! (இவ்வமயத்தில் சேரமான் ராஜ்ஜியத்து அரசனுன கருணசேகரர் தன் பரிவாரத்துடன் வேட்டையாடிக்கொண்டு வருகிறுர். குழந்தையைப் பார்க்கிறுர்).

அர :—(ஆச்சரியத்துடன்) இவன் யாருடைய குழந்தை? இவனுடன் வேறு யாரையும் காணேமே! அப்பா! நீ யார்? இக்கானகத்தில் இவ்வேளையில் என் தனிமையா யிருக்கிறுய்?

குழ :—அம்மா கூட வந்தேன். அம்மா தண்ணி கொண்டாரப் போனுங்கோ, யின்னும் திரும்பி வரலே. எனக்குப் பசியாயிருக்கு! தண்ணிதாவங் கூட எடுக்குது!

அர :—ஹா! அப்படியா! சேவகர்களே! சில கனிகளையும் அருந்தத் தண்ணீரையும் இவனிடம் கொடுங்கள்? சீக்கிரமாக இருவர் சென்று இக்கானகத்தில் யாராவது ஒரு பெண்மணி இருக்கிறுர்களா என்று பார்த்து இவ்விடம் அழைத்துக்கொண்டு வாருங்கள்? (குழந்தையிடம் சில கனிகளையும் தண்ணீரையும் கொடுத்துவிட்டு இரு சேவகர்கள் போகிறுர்கள்). குழந்தை அதிக அழகாகவே இருக்கிறது. அரச குடும்பத்தில் பிறந்த குழந்தையாகவே இருக்கலாம். பாவம்! இவர்கள் இக்கானகத்தில் எப்படி வந்து அகப்பட்டுக்கொண்டனரோ தெரியவில்லை! அப்பா! பசி தீர்ந்துவிட்டதா?

குழ :—உம் - அம்மா வோணும்!

அர :—இதோ வந்துவிடுவார்கள்! கவலைப்படாதே!

சேவ :—(திரும்பி வந்து) அரசே! ஒருவரையும் காணேம். அதிகதூரம் சென்று பார்க்கலாமென்றுல் எங்கே வழிதவறி உங்களையும் பிரிந்து விட நேரிடுமோ என்று பயந்து சமீபத்தில் பார்த்துவிட்டு வந்தோம்.

அர :—இந்நல்லிருளில் இந்த அடர்ந்த காட்டில் தேடுவது அசாத்தியம். நல்லது. இக்குழந்தையை நம்முடன் நாட்டிற்கு அழைத்துச்

சென்று உதயத்தில் சில வீரர்களை அனுப்பி இவனின் தாயைக் கண்டுபிடித்துக் கொண்டுவரும்படிச் செய்யலாம். குழந்தாய்! வா உன் அம்மாவிடம் போகலாம் (போகிறார்கள்).

(காட்சி முடிகிறது.)

---

**மூன்றாவது அங்கம்.** **மூன்றாவது காட்சி.**

இடம் :—குகை.

காலம் :—இரவு.

திருடர்கள் கற்பகராஜத்தை அழைத்துக்கொண்டு குகையின் சமீபத்தில் வருகிறார்கள்.

---

திரு :—வா அம்மா சீக்கிரம்?

கற்ப :—(குகையைப் பார்த்து திடுக்கிட்டு) ஐயா! இது மலைபோலிருக்கிறதே! பாதை ஒன்றும் காணப்படவில்லையே! எப்படிப் போவது?

திரு :—யித்தான் எல்லமலை! இதைத் தாண்டிக்கினு போனா வளியைப் பாக்கலாம். இந்த கொகையிலே நுளஞ்சி போ? பாத்து போ? (கற்பகம் இரு திருடர்களுடன் குகைக்குள் நுழைந்து செல்கிறாள். சிறிது நேரங் கழிந்தபின் தாமோதரம் பிள்ளையும் வழிப்போக்கனும் வருகிறார்கள்).

வழி :—அண்ணே! பாத்தியா யிது என்னாண்ணு? யித்தான் நானுசொன்ன கொகை. நம்பொ இந்த பாறைக்குப் பின்னாலே ஒளிஞ்சுக்கினு யிருக்கலாம். திருடனுங்கொ எல்லாரும் இந்தக் கொகையிலிருந்து வந்து வெளியிலே போயிடுவானுங்கோ. அப்பறம் நம்பொ கொகை வாசப்படியண்டே போயி ஒளிஞ்சுக்கிலாம். அவுங்க எசமான் வந்ததும் தீத்துடலாம். என்ன, தெரிஞ்சுதா?

தாமோ :—அப்படியே ஆகட்டும். (மறைகிறார்கள்). (கள்வர் இருவர் குகையினின்றும் வெளியே வருகிறார்கள்).

1-வது கள்வன் :—அண்ணே! கேட்டியா கதையை !நம்பொ அமாவாசே யிருக்கானே - அவனும், யிருளனும் ஒரு பொம்பளையே அளச்சிக்கினு வந்தாங்கோ. பயமக - என்னத்தான் அளகு அங்குறேன்! அவளைப்போல அளகு பொம்பளையே யிதுவரையிலும் நானு பாக்கவேயில்லே! அவளைக் கொண்ணாந்து நம்பொ எசமாங்கிட்ட வுட்டுட்டாங்கோ! அவரு — —

2-வது கள்வன் :—அவளை நம்பொ கிட்டே எண்டா கொண்டாராதே போயிட்டாங்கோ? அறுவுகெட்டவங்கோ?

1-வது கள்வன் :—உம். நம்பொ எசமான்தான் யிப்பிடி யாராவது பொண்ணு ஆப்புட்டாக்கா அளச்சிக்கினு வந்து தங்கிட்டே வுட்டுடோணுமிண்ணு கட்டளை யிட்டிருக்கிறாரே! - ஆச்சா! கேளு, கதையே? - அப்பாலே, அவுரு அந்தப் பொண்ணே என்னென்னமோ கேட்டாரு. அது ஒண்ணுமே பதில் சொல்லலே. அப்பாலே. நகைங்கோ, துணிமணிங்கோ, பணங்கோ - யின்னும் என்னென்னமோ - வாயிலே வரல்லே - காமிச்சாரு. அதுக்கெல்லாம் ஒண்ணுமே சொல்லாதே அப்பிடியே பொம்மையாட்டம் யிருந்துது அண்ணே!

**2-வது கள்வன் :**—அது புது யிடம். அத்தாலே ஒருவேளை வெக்கப் பட்டதோ என்னமோ! அது யிருக்கட்டும். இப்பொ நம்பொ எங் கடா போறது?

**1-வது கள்வன் :**—அத்தான் - திவான் வீட்டுக்குப் போவச் சொல்லி எச மான் சொன்னாரே!

**2-வது கள்வன் :**—ஆமாண்டா! சாயரட்சேதான் பணம் வந்து கெடக்கு தாம். யின்னும் கஜானாவுக்கு அனுப்பலியாம். அதுக்குள்ளே அதை அப்பிடியே அபேஸ் பண்ணிடலாம். சீக்கிரம், வா போக லாம்? (போகிறார்கள். பின்னும் இரண்டு கள்வர்கள் குகையினின் றும் வெளியே வருகிறார்கள்).

**இருளன் :**—எண்டா அமாவாசை! இண்ணைக்கு நம்பளுக்கு யெந்த இடண் டா?

**அமாவாசை :**—எண்டா யிருளா! அதுக்குள்ளே மறந்து பூட்டியாடா எச மான் சொன்னதை?

**இருளன் :**—இல்லே மறக்கலே - அவரு சொன்னாரே அந்த யெடந்தானா அல்லது வேறே யெடமா இண்ணு கேக்குறேன்!

**அமாவாசை :**—எசமாங் கட்டளைப்படி சேஞ்சுடலாண்டா. யில்லாகிட்டி நம்பொ பாடு கஷ்டமாயிடும்!

**இருளன் :**—சரி - புறப்படு சீக்கிரம் (செல்கிறார்கள்). (இன்னும் பல திரு டர்கள் குகையிலிருந்து வந்து வெளியே சென்றுவிடுகிறார்கள்). (பிறகு தாமோதரம் பிள்ளையும் வழிப்போக்கனும் மறைவிடத்திலி ருந்து வெளியே வந்து குகையின் வாயில் பக்கத்தில் மறைந்து கொள்கிறார்கள். கள்வர் தலைவனான நாராயணையா குகைக்கு வெளி யே மெதுவாக வருகிறான். இருவரும் அவன்மீது பாய்ந்து அவனைக் குத்திக் கொன்றுவிடுகிறார்கள்).

**வழி :**—அண்ணே அவனுக்கு மூச்சு பேச்சு யிருக்கா பாரு?

**தாமோ :**—(பார்த்துவிட்டு) இல்லே! பிணமாகிவிட்டான்!

**வழி :**—நல்லது! வா? நம்பொ சீக்கிரம் உள்ளே போயி நம்பளுக்கு வேணுமங்கிரதைக் கட்டிக்கிணு வந்தூடலாம். (குகைக்குள் சென்று சிறிது நேரங்கழிந்து இருவரும் இரண்டு மூட்டைகளுடன் வெளியே வருகிறார்கள்).

**தாமோ :**—(மறுபடியும் பிணத்தைப் பார்த்து) ஹா! இவன் என் நண்ப னாகிய நாராயணையாபோல் காணப்படுகிறானே! - ஆம், அவன்தான்— சந்தேகமில்லை! ஐயோ! பாவம்! என் நண்பனைக் கொன்றுவிட் டேனே! இவன் இவ்விடத்தில் எப்படி வந்தான்?

**வழி :**—அண்ணே! ரொம்பொ நாழி யிங்கே யிருந்தாக்கா வெளியிலே போயிருக்கிற திருடனுங்கோ திரும்பி வந்து நம்பளே பாத்துட்டா நம்பொ உசுரு போயிடும். வா போயிடலாம். (போகிறார்கள்). (கற்பகம் குகைக்குள்ளே யாரோ இருவர் வந்து அதிவேகமாக வெளியில் சென்றதைப் பார்த்து விஷய மின்னது என்பதை அறி யும்பொருட்டு குகைக்கு வெளியில் வருகிறாள். கள்வர் தலைவன் பிணமாய் வீழ்ந்து கிடப்பதை நோக்குகிறாள்).

கற்ப :—ஹா ! இது என்ன விந்தை ! சற்றுமுன் இவன் உயிருடனிருந் தானே ! அதற்குள்ளே இவனை யார் கொன்றிருப்பார்கள் ! இதுவும் நம்முடைய அதிர்ஷ்டந்தான். - இதுதான் சமயம். கள்வர்கள் திரும்பி வருவதற்குள் நான் இக்குகையை விட்டுத் தப்பிச் சென்று விடவேண்டும். ஆனால் இந்த உடையுடன் போனால் மறுபடியும் ஏதாவது ஆபத்து நேரிடும். ஆகையால் குகைக்குள்ளே சென்று சந்நியாசி வேடந் தரித்துக்கொண்டு வெளியே சென்றுவிடுகிறேன். இனி காலதாமதஞ் செய்யலாகாது ! (விரைவாகக் குகைக்குள்ளே சென்று மறு நிமிடத்தில் சந்நியாசி வேஷத்துடன் வெளியே வந்து கானக மார்க்கமாய்ச் சென்றுவிடுகிறாள்).

(காட்சி முடிகிறது.)

---

நான்காவது அங்கம். முதற்காட்சி.

இடம் :—அரண்மனை.

காலம் :—முற்பகல்.

சேரமான் ராஜ்ஜியத்து அரசன் கருணசேகரர் மந்திரி முதலானோர் புடைசூழ சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார்.

---

அர :—மந்திரீ ! அன்றையதினம் நான் கானகத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த குழந்தையின் தாயைப்பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா ?

மந்திரி :—அரசே ! தங்களுடைய கட்டளைப்படி அநேக வீரர்களை பல திசைகளில் அனுப்பினேன். அவர்கள் எங்கெங்கு தேடியும் அப் பெண்மணியைக் கண்டுபிடிக்க முடியாமல் திரும்பி வந்துவிட்டார்கள்.

அர :—அப்பெண்மணியைக் கண்டுபிடிக்க முடியவில்லையா ? பாவம் ! ஒரு வேளை அவள் வனவிலங்குகளுக்கு இரையாகிவிட்டனளோ ! அவ்வாறு நேர்ந்திருப்பின் குழந்தையின் கதி என்னாவது ? பாலகன் தன் தாயைப்பற்றி நினைத்து அடிக்கடி புலம்புகிறானே ! அவனை நான் பார்க்கும்பொழுதெல்லாம் என்னை அறியாமலேயே ஓர்வித சந்தோஷமும் பிரியமும் உண்டாகின்றன. அவன் ஓர் தனவந்தன் குடும்பத்தில் உதித்தவனாகவே இருக்கவேண்டும். அவனின் பெற்றோர்களுக்கு என்ன விபத்துகள் நேர்ந்தனவோ தெரியவில்லை. அவர்களில் யாரையாவது ஒருவரைக் கண்டு பிடித்துவிட்டால் பிறகு எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்ளலாம். யாராவது ஒருவரைக் கண்டு பிடித்துக்கொண்டு வருபவருக்கு ஆயிரம் பொன் வெகுமதி கொடுக்கப்படுமென்று உடனே அறிக்கை செய்யும் ?

மந் :—அரசே ! அப்படியே செய்கிறேன்.

(சில குடிகள் வருகிறார்கள்.)

குடிகள் :—ஐயோ ! அப்பா ! எங்களுடைய ஆஸ்தி பூஸ்தி யாவையும் கொள்ளை அடித்துக்கொண்டு போய்விட்டனரே ! இதை விசாரணை செய்பவர்கள் யாருமில்லையா ? - மகாராஜா ! கும்பிடுகிறோம். உங்க

ளுடைய நாட்டில் இதுவரையிலும் இப்பேர்ப்பட்ட அநியாயங்கள் நடந்ததில்லையே! கள்வர் பயமே இல்லாமலிருந்தோமே! உங்களுடைய ஆட்சி எவ்வளவோ சந்தோஷகரமாயிருந்ததே! இப்பொழுது சிலநாட்களாக திருடர்கள் எங்களுடைய வீடுகளில் புகுந்து கொள்ளை அடித்துக்கொண்டு போகிறார்களே! இதை நீங்கள் கவனிக்கக் கூடாதா?

அர:—மந்திரீ! என்ன விஷயமென்று விசாரியும்?

மந்:—அரசே! அப்படியே. குடிகளே! என்ன விஷயம்? ஏன் இவ்வாறு பிரலாபிக்கிறீர்கள்? நடந்த விஷயங்களைத் தெளிவாகச் சொல்லுங்கள்?

குடி:—அரசே! சென்ற நாலைந்து நாட்களாக திருடர்கள் எங்கள் வீடுகளில் புகுந்து கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். அவர்களைப் பிடிக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. ஏனென்றால் அவர்கள் சந்நியாசிகள்போலத் தோன்றுகிறார்கள். அவர்களைக் கள்வர்களென்று சந்தேகிக்க இடமில்லை.

மந்:—குடிகளே! அவர்கள் எச்சமயங்களில் எந்தெந்த விதமாக வருகிறார்கள்? என்ன பொருள்களைக் களவாடிச் செல்கிறார்கள்? விபரமாய் ஒவ்வொருவராகக் கூறுங்கள்?

1-வது குடி:—அரசே! என் வீட்டில் களவுபோன விஷயத்தைக் கூறுகிறேன். ஓர்நாள் சாயங்காலத்தில் அதிக மழையும் குளிர்காற்றுமாக இருந்தது. அச்சமயத்தில் ஓர் சந்நியாசி என் வீட்டிற்கு வந்து தான் மழையில் நனைந்திருப்பதாகவும் தங்குவதற்கு சிறிது இடம் வேண்டுமென்றும் கேட்டான். அவனுடைய நிலைமையைப் பார்த்து பரிதபித்து அவனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி வெளியில் வீட்டுத் திண்ணையின்மீது தங்கும்படிச் சொன்னேன். சற்றுநேரங் கழிந்தபிறகு அவன் என்னிடம் வந்து வெளியில் காற்றும் குளிரும் அதிகமாயிருப்பதால் உள்ளே சிறிது இடம் கொடுத்தால் அதிக புண்ணியமா யிருக்குமென்று சொன்னான். அதன்படியே வீட்டிற்குள் ஓர் பாகத்தைக் காண்பித்து அங்கே தங்கிப்போகலாமென்று சொன்னேன். அவன் அதற்குச் சம்மதித்து அவ்விடத்தில் படுத்து உறங்கிவிட்டான். நானும் என் இடத்திற்கு போய்ப் படுத்து உறங்கி விட்டேன். வழக்கப்படி மறுநாள் காலையில் படுக்கையை விட்டெழுந்து சந்நியாசியைப் பார்க்க எண்ணி அவன் படுத்துக்கொண்டிருந்த இடத்தை நாடிப்போனேன். அங்கே சந்நியாசியைக் காணவில்லை. ஒருவேளை வெளியே போயிருக்கலாமென நினைத்து வெளியேபோய்ப் பார்க்க அங்கேயும் காணோம். இவ்வமயத்தில் என் மனைவி குய்யோ முறையோ என்று கதறிக்கொண்டு என்னிடம் வந்து, "ஐயோ! மோசம்போனோமே! வீட்டிலிருந்த துணிமணிகள் யாவும் களவு போய்விட்டனவே!" என்று சொன்னாள். அவைகளை இரவு வந்த சந்நியாசியே களவாடிச் சென்றிருப்பானென்று நினைத்து அவனைக் கண்டுபிடிக்க எங்கெங்கு தேடியும் அகப்படவில்லை.

**2-வது தூதி** :—அரசே ! என் வீட்டில் நடந்ததைக் கூறுகிறேன். நான் பிரதி தினமும் ஓர் சந்நியாசியை அழைத்துக்கொண்டு வந்து சாப்பி டும்படிச் செய்வது வழக்கம். வழக்கப்படி ஓர்நாள் யாராவது சந்நியா சியை அழைத்துக்கொண்டு வரலாமென வெளியில் போக முயலும் பொழுது ஒரு சந்நியாசி தானாக என்னிடம் வந்தான். இதுவும் நல மென நினைத்து அவனை வீட்டிற்குள்ளே அழைத்துக்கொண்டுபோய் சாப்பிடும்படிச் செய்தேன். சாப்பாடு முடிந்தபிறகு அவன் சற்று தங்கிப்போவதாகச் சொன்னான். அதற்குச்சம்மதித்து நான் போஜன சாலைக்குச் சென்று என் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வெளியில் வந்தேன். அங்கு தங்கியிருந்த சந்நியாசியைக் காணவில்லை. அவன் சென்றிருப்பானென எண்ணி வீட்டிற்குள் வந்தேன். அந்தோ ! என்ன சொல்லுவது ! பணப்பெட்டி முதலானவிருக்கும் அறை திறக்கப்பட்டிருப்பதையும், அவ்வறையிலிருந்த பணப்பெட்டி உடைக்கப்பட்டு அதனுள்ளிருந்த பணம், நகை முதலானவை களவு போயிருந்ததையும் கண்டேன். சந்நியாசியே இவைகளைக் களவாடிச் சென்றிருப்பான் என்று நினைத்து உடனே வெளியில்போய் எங் கெங்கு தேடியும் அவன் அகப்படவில்லை. அன்னமிட்ட வீட்டில் கன்னம் வைத்தானே பாதகன் என்று வருத்தப்பட்டு இவ்விஷயத் தை உங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று வந்தேன்.

**3-வது தூதி** :—அரசே! நான் சமீபத்திலிருக்கும் மடவாக்கனூருக்குப் போய் எனக்குச் சேரவேண்டிய பணத்தைச் சேகரித்துக்கொண்டு சில புதிய வஸ்திரங்கள் மூட்டையுடனும் கால்நடையாக என் ஊருக் குத்திரும்பி வந்து கொண்டிருந்தேன். ரெட்டிமாந் தோப்பின் சமீபத்தில் வந்ததும் ஒரு சந்நியாசி ஓர் மாமரத்தடியில் உட்கார்ந்து கொண்டு மெல்லிய குரலில் என்னைத் தன்னருகில்வரும்படி கூப் பிட்டான். நான் அவன்மீது மனமிரங்கி சமீபத்தில் சென்றேன். அவன் என்னைப்பார்த்து "ஐயா ! நான் அதோ - அந்தக்கிராமத்தில் வசிப்பவன். ஒரு வேலையினிமித்தம் பக்கத்துக் கிராமத்திற்குப் போய்விட்டு என்கிராமத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். சூரிய வெப்பத்தால் மிகவும் களைத்துப்போய் மேற்கொண்டு நடக்க முடியாமல் இம்மரத்தினடியில் உட்கார்ந்துகொண்டேன். சிறிது களைப்பு நீங்கினதும் எழுந்திருக்கமுயன்றேன். என்னால் எழுந் திருக்க முடியவில்லை. தயவு செய்து என்னைச்சிறிது தூக்கிவிட்டீர் களானால் மெள்ளத் தள்ளாடிக்கொண்டு என் வழியே செல்வேன்" என்று மிகவும் பரிதாபகரமான குரலில் சொன்னான். நான் உடனே அவனது வேண்டுகோளுக்கிணங்கி, என் மூட்டையைக் கிழேவைத் துவிட்டு அவனைத்தூக்கிவிட்டேன். உடனே அவன் புலிபோல என்மீது பாய்ந்து என்னைக்கீழே தள்ளி என் கைகளையும் கால்களை யும் கயிற்றால் கட்டி என் வாயில் துணியையும் நுழைத்துவிட்டான். பிறகு என் உடம்பு முழுவதும் சோதித்து என்னிடமிருந்த பணத் தையும், துணி மூட்டையையும் எடுத்துக்கொண்டு அதிவேகமாய் தோப்பில்புகுந்து மறைந்து விட்டான். அவன் சென்ற ஒருநாழி யான பிறகு அவ்வழியே வந்த சில வழிப்போக்கர்கள் என்னைப் பார்த்துவிட்டு என்னிடம் ஓடோடியும் வந்து என் கை கால்களின் கட்டை அவிழ்த்து வாயிலிருந்த துணியையு மெடுத்துவிட்டு நடந்த

வரலாற்றைக் கேட்டார்கள். நடந்த விஷயங்களைக் கூறிக்கொண்டே அவர்களுடன் என் நாடுவந்து சேர்ந்தேன். இதுவரையிலும் அக் கள்வனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

**அர** :—ஆஹா ! நமது ராஜ்ஜியத்தில் இதுவரையிலும் இப்பேர்ப்பட்ட அக்கிரமங்கள் நடந்ததில்லையே ! என்ன ஆச்சரியம் ! சந்நியாசிவேடம் பூண்டுவரும் கள்வர்களின் சாமர்த்தியம்தானென்னே ! மந்திரி ! இக் கள்வர்கள் ஒரு கூட்டமாகவே இருக்கவேண்டும். அக்கூட்டத்திற்கு சில தலைவர்களும் இருப்பார்களென நினைக்கிறேன். சீக்கிரத்தில் அவர்கள் யாவரையும் பிடித்து அந்தக்கூட்டத்தையே அடியோடு அழித்துவிடவேண்டும். இதற்கு என்ன செய்யலாம் ?

**மந்** :—அரசே ! எனக்குத் தோன்றுவது யாதெனில் சந்நியாசிகள் யாவரையும் பிடித்துச் சிறையிலடைத்துவிட வேண்டும்.

**அர** :—நல்லது, அவ்வாறே செய்யும் ?

**மந்** :—அரசே ! அப்படியே, குடிகளே ! உங்களுடைய குறைகளைச் சீக்கிரத்தில் தீர்ப்போம். நீங்கள் கவலையின்றிச் செல்லலாம்.

**குடிகள்** :—அரசே ! மிகவும் சந்தோஷம். நாங்கள் சென்றுவருகிறோம். (நமஸ்கரித்துவிட்டுப் போகிறார்கள்.)

**(காட்சி முடிகிறது.)**

---

**நான்காவது அங்கம். இரண்டாவது காட்சி.**

**இடம்** :—அரண்மனை சமீபம்.

**காலம்** :—பிற்பகல்.

வீரர்களிருவர் சந்நியாசி வேஷத்துடனிருக்கும் கற்பகராஜத்தைச் சிறையில்டைக்கக் கொண்டுவருகிறார்கள்.

---

**கற்ப** :—(தனக்குள்) ஹா ! தெய்வமே ! இதுவும் உன்னுடைய திருக் கூத்தா ! இப்படியும் என்னைப் பரிசோதிக்க வேண்டுமா ! செல்வத்தில் பிறந்தேன், செல்வத்தில் வளர்ந்தேன். செல்வாக்குடையவருக்கு வாழ்க்கைப்பட்டுச் சுகமாகவாழ்ந்து வந்தேன். புத்திரனையீன்று புகழுடன் மகிழ்ந்தேன். என்ன விதிவசமோ ! என்ன காலக் கொடுமையோ ! மதுபானத்தால் சம்பவித்த கேடு. ஹா ! ஈசனே ! சிவகாமி நேசனே ! கணவர் என்னைத் துறந்தார். பரபுருஷன் தன்னை மறந்தே என்னை அணுகினான். அவனிடமிருந்து தப்பி என்பாலனுடன் வெளிப்போந்தேன். உறவினரை மறந்தேன். வீட்டை விட்டுப் போய் காட்டில் சிக்கினேன். காட்டை விட்டு நாட்டை அடைவதற்குள், அந்தோ ! கள்வர்கையில் விழுந்தேன். பாலகனையும் பறிகொடுத்தேன். கள்வர் சிறையிலிருந்து தப்பி ஓடி இந்நாட்டிற்கு வந்தேன். கலிபுருஷன் " உன்னை விடுவேனோ" என்று இவ்விடம் சிறைக்கு அனுப்பக் கருணையுடனிருக்கிறானே ! அப்பொழுதே என் உயிரை மாய்த்துக்கொண்டிருந்தால் இக்கஷ்டங்களெல்லாம் நேர்ந்திருக்காதே ! சே ! இனி என்னைப்போல் இவ்வுலகில் யாருமே பிறவாதிருப்பார்களாக. (கண்ணீர் விடுகிறாள்.)

**1-வது வீரன் :**—ஐயா ! நேரமாயிடிச்சி. மந்திரி பாத்துட்டாங்களன்னு எங்க தலே போயிடும். நடங்கோ சீக்கிரமா ? (காலடி சத்தம்கேட்டு) யாரோ வீர்ராப்பிலே யிருக்கு. தம்பி ! யாரு பாரு. ஒருவேளே மந்திரி வந்துடப் போராரு !

**2வது வீரன் :**—(பார்த்துவிட்டு) மந்திரியில்லே அண்ணே ! நம்பொ மவாராணிதோழி - அவுக கொளந்தையே அளச்சிக்கினு வழக்கமா ஓலாத்தப்போரதில்லே ! இண்ணைக்கி இந்த வளியா வாராங்கோ !
(கற்பகராஜத்தின் குழந்தையுடன் தோழி வருகிருள்.)

**கற்ப :**—(தன் குழந்தையெனக் கண்டு ஓடிப்போய்) ஹா ! என்னருஞ் செல்வமே (குழந்தையைக் கட்டிக்கொண்டு முத்தமிடுகிருள்.)

**தோழி :**—ஹா ! இது என்ன விந்தை ! நான் அழைத்துக்கொண்டு வந்த குழந்தையை இந்த சந்நியாசி ஏன் தழுவிக்கொண்டு முத்தமிடுகிருன் ? (வீரர்களைப் பார்த்து) இந்த சந்நியாசி யார் ? சற்றுமுன் ஏன் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தான் ?

**வீரர்கள் :**—அம்மா ! சந்நியாசிங்களே எல்லாம் புடிச்சி செறச்சாலேயிலே போடணு மிண்ணு நம்பொ மந்திரி அவுக கட்டளேயிட்டிருக்காங்கோ. அதுபறகாரம், இந்த சந்நியாசியே புடிச்சிக்கினு போரோம். (சந்நியாசியைப்பார்த்து) எ ! சந்நியாசி ! மவாராஜா அரண்மணேயிலிருக்கிற கொளந்தை யிது. உங்குளந்தையாட்டம் புடிச்சிக்கினு கொஞ்சுரியே! சே ! விடு ! மவாராணிங்கோ பாத்துட்டாக்கா எங்கொ தலே போயிடுமே !

**கற்ப :**—(சந்நியாசி உடுப்பைக் கழற்றிவிட்டு) ஹா ! என் செல்வமே ! நீ இவ்விடம் எப்படியடா வந்தாய் ? நீ வன விலங்குகளுக்கு இரையாகி விட்டாயோ என்று எண்ணி அல்லல்பட்டேனே ! தெய்வ கடாட்சத்தால் இங்கேயே உன்னே உயிருடன் காணப்பெற்றேனே ! ஹா ! ஈசா ! இன்று என் குழந்தையை என்னிடம் சேர்ப்பித்ததும் உன் திருவருளே ! உனக்கு அநந்தகோடி வந்தனம் !

**தோழி :**—(ஆச்சரியத்துடன்) அம்மா ! நீங்கள் யார் ? சற்றுமுன் சந்நியாசி வேடத்துடனிருந்ததின் காரணம் என்ன ? ஏன் இக்குழந்தையைப் பார்த்து இவ்வாறு பிரலாபிக்கிறீர்கள் ?

**கற்ப :**—அம்மா ! இக்குழந்தை என்னுடையது. இவனுடன் என் பெற்ருேர் நாட்டை நாடி வெளிப்போந்தேன். வழி தவறி ஓர் கானக மார்க்கமாய் வர நடந்த சிரமத்தால் நீர்வேட்கையும் பசியுமுண்டாகவே இவனே ஓரிடத்தில் நிறுத்திவிட்டு தண்ணீர் இருக்கும்படியான இடத்தைத் தேடிச்சென்றேன். சிறிது தூரம் சென்றதும் வந்த வழியை தவறி இவனேயும் கண்டுபிடிக்க முடியவில்லே. அச்சமயம் அங்கு வந்த கள்வர் கையில் விழுந்து சிறையிலிடப்பட்டேன். தெய்வகடாட்சத்தால் ஓர்நாள் அவர்களுடைய சிறையினின்றும்தப்பி சற்றுமுன் களேந்த சந்நியாசி உடுப்புடன் வெளிக்கிளம்பி வரும் வழியில் இவர்கள் என்னேப் பிடித்துக்கொண்டு சிறையிலிட இவ்விடம் கொண்டுவந்தார்கள். தெய்வாதீனமாய் இங்கு என் குழந்தையைக் கண்டேன். குழந்தை இவ்விடம் எப்படி வரும்படி நேரிட்டதோ தெரியவில்லே.

149257

**தோழி** :—என்ன ஆச்சரியம்! நீங்கள்தானா இக்குழந்தையின் தாயார்? வெகு சந்தோஷம். ஓர் நாள் மஹாராஜா கானகத்திற்கு வேட்டையாடப் போனபொழுது அங்கே இக்குழந்தையைக் கண்டு இவ்வரண்மனைக்குக் கொணர்ந்து வளர்த்து வருகிறார்கள். இவனின் தாயைக் கண்டுபிடித்துக்கொண்டு வருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் கொடுப்பதாகவும் விளம்பரம் செய்திருக்கிறார்கள். இதுவரையிலும் உங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. தாங்களே இங்கு வந்து சேரும்படி நேரிட்டதும் இக்குழந்தையின் பாக்கியந்தான்! நான் மஹாராஜாவிடம் சென்று உங்களைப்பற்றி தெரிவித்துவிட்டு வருகிறேன். நான் திரும்பி வரும்வரையில் இவ்விடமே இருங்கள். (வீரர்களைப் பார்த்து) வீரர்களே! இந்த அம்மாவைச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோக வேண்டாம். நான் திரும்பிவரும்வரையில் இங்கேயே இருக்கட்டும். தெரியுமா?

**வீரர்கள்** :—எம்மா! மந்திரி உத்தரவு யிட்டிருக்காங்களே - அதுபரகாரம் செய்ரதா, யில்லாகிட்டி உங்கொ உத்தரவு பரகாரம் செய்ரதா? நாங்கொ உங்கொ பேச்சைக் கேட்டுக்கினு இருந்துட்டோமின்னு எங்கொ தலை போவுமா - உங்கொ தலை போவுமா? அதெல்லாம் முடியாது. இப்பொ நாங்கொ இவுகளை செறச்சாலைக்கு அளைச்சிக்கினுதான் போவோம்.

**தோழி** :—அடேய்! நான் சொல்வதைக் கேட்கமாட்டீர்களா? இப்பொழுதே நான் மஹாராஜாவிடம் சென்று உங்களுக்குத் தகுந்த தண்டனையை விதிக்கும்படிச் செய்கிறேன்.

**வீரர்கள்** :—அம்மா! அம்மா! அப்பிடி ஒண்ணும் சேஞ்சிடாதிங்கொ! நாங்கொ சும்மானுத்திக்கி சொன்னோம். நீங்கொ போயி சீக்கிரம் வாங்கோ! நாங்கொ யிங்கேயே இருக்கிறோம். (தோழி போகிறாள்)

**கற்ப** :—(குழந்தையை அன்புடன் முத்தமிட்டு) என் கண்ணே! உன்னை நான் உயிருடன் காணப்பெற்றதற்கு என்ன பாக்கியம் செய்தேனோ! நான் அடைந்த கவலையும் பாதி தீர்ந்தது. உன் அருமைத் தந்தையின் கதி என்னவாயிற்றோ! நான் இங்கு உன்னை அடையப் பெற்றதுபோல் உன் தந்தையையும் அடைவேனாகில் என்னைப்போல பாக்கியசாலி இவ்வுலகில் யாருமே இருக்கமாட்டார்கள். நான் அவர் நிமித்தம் அநுபவித்த வேதனைகளெல்லாம் நீங்கிவிடும். ஹா! ஜெகதீசா! என் கணவரை அடைவதற்கு ஏதாவது ஒரு மார்க்கத்தைக் காண்பிக்கமாட்டாயா? (ஸ்துதிக்கிறாள்).

(வீரர்கள் இருவரும் ஒரு பக்கமாக சம்பாஷிக்கிறார்கள்).

**1-வது வீரன்** :—மூக்கா! பாத்தியா தமாஷே? நம்பொ என்னமோ சந்நாசி இண்ணு பிடிச்சிக்கினு வந்தா - பொம்பிளையா போயிடிச்சே! இதில்லே என்னமோ ரவசியமிருக்குடா. இல்லாகிட்டி பொம்பளே என்னாத்துக்கு சந்நாசி வேஷம் போட்டுக்கினு யிருக்கோணும்?

**2-வது வீரன்** :—ஆமாண்டா பல்லா! அப்பொவே எனக்குக்கூட சந்தேகந்தான். நானு நெனச்சாப்பிலேயே ஆயிடிச்சி

**1-வது வீரன்** :—ஆ:மா, இந்தப் புள்ளையைத் தன்னது இன்னு சொல்றுங்களே. நெசமாயிருக்குமாடா?

**2-வது வீரன் :**—நெசமாயில்லாகிட்டி அவுக யித்தனே தைரியமா சொல்லு வாங்களாடா? அந்தப்புள்ளே தான் அவுககிட்ட போவுமாடா? ஒண்ணு செய்யலாமே. அந்தக்கொளந்தையே கூப்பிட்டு "உங்கொ அம்மா எங்கே தம்பி" இன்னுகேக்கலாம். அதுக்கு - (தோழி வருகிருள்)

**தோழி :**—அம்மா! உங்களே மஹாராஜாவும் மஹாராணியும் பார்க்க வேண்டுமாம். அழைத்துக்கொண்டுவரச் சொன்னூர்கள். போகலாம் வாருங்கள்!

**கற்ப :**—நல்லது. அப்படியே.

**வீரர்கள் :**—(தோழியைப்பார்த்து) அம்மா! நாங்களும் வர்ரதா?

**தோழி :**—நீங்கள் வரவேண்டிய அவசியமில்லே. நீங்கள் உங்கள் வேலேயி னிமித்தம் போகலாம்.

**வீரர்கள் :**—உஊங் - அதுமுடியாது. எப்பொ இவுகளே எங்கொ கை யிலே ஒப்பிச்சாங்களோ - அப்பொயிருந்து செறச்சாலேக்குக் கொண்டு போயி அடச்சிட்டு அந்த சேவகன் கையெழுத்தை வாங்கிகினுவர்ர வரையிலே எங்க சார்ஜி ஆச்சே. இப்போ, உங்ககிட்ட வுட்டுட்டாக்கா மந்திரிக்கு நாங்கொ என்னுபதிலு சொல்றது? அந்த தொந்தரவு யெல்லாம் வாணும். நாங்களும் வந்து மகாராஜா கிட்டே சார்ஜி கொடுத்துடுரோம். அப்பாலே அவுகபாடு உங்கொபாடு. என்னவாவது சேஞ்சுகோங்கோ. (எல்லோரும் செல்கிருர்கள்.)

(காட்சி முடிகிறது.)

---

*நான்காவது அங்கம்.* *மூன்ருவது காட்சி.*

**இடம் :**—*அரண்மனே.*

**காலம் :**—*பிற்பகல்.*

மஹாராஜாவும் மஹாராணியும் ஆசனங்களில் அமர்ந்திருக்கிருர்கள். வீரர்கள் பின்னுல்வர தோழியும் கற்பகராஜமும் குழந்தையுடன் வருகிருர்கள்.

**தோழி :**—அரசே! இதோ! இவர்கள்தான்.

**கற்ப :**— அரசே! நமஸ்கரிக்கிறேன். அம்மணி! நமஸ்கரிக்கிறேன்.

**மஹா :**—மங்கள முண்டாவதாக! - பெண்ணே! இக்குழந்தை உன்னு டையதா?

**கற்ப**—ஆம், அரசே.

**மஹா :**—அப்படியா! நல்லது. இக்குழந்தை எப்படித்தனிமையாக கான கத்தில் வரும்படி நேரிட்டது? நீ என் சந்நியாசி உடுப்புடனிருந்து வந்தாய்? நடந்தவற்றைச் சவிஸ்தாரமாய்ச்சொல்?

**கற்ப :**—அரசே! நான் பிறந்தது வசுவதத்தநாடு. என் தந்தையின் பெயர் வாமநேச நாய்க்கர்.

**மஹா :**—(ஆச்சரியமாக) வாமநேச நாய்க்கரின் புதல்வியா நீ? என்ன ஆச் சரியம்! அவர் எனக்கு கப்பம் கட்டுபவரல்லவா? பிறகு -

கற்ப :— என்னைத் தக்கபிராயத்தில் நாட்டுப்பட்டி ஜமீன்தாரருக்கு கன்னிகாதானம் செய்து கொடுத்தார்கள்.

மஹா :—நாட்டுப்பட்டி ஜமீன்தாரர் தாமோதரம் பிள்ளையல்லவா? அவருடைய பத்தினியா நீ? ஆச்சரியம், ஆச்சரியம்? பிறகு -

கற்ப :—நாங்கள் எவ்வளவோ சந்தோஷமாக காலத்தைக் கழித்துவந்தோம். பிறகு, என்ன காலக்கொடுமையோ, முன் ஜென்மத்தின் வினைப்பயனோ, என் நாதர் சில தீயோரின் நட்பைக்கொண்டார். மதுபானப் பழக்கத்தைக் கையாடினர். வேசியின் நேசமுங்கொண்டு அவளுடைய வலையில் அகப்பட்டுக்கொண்டார். என்னையும் குழந்தையையும் துறந்தார். பரபுருஷன் ஒருவன் துர்எண்ணத்துடன் என்னை அணுகினன். அவனிடமிருந்து தப்பி ஓடி இக்குழந்தையுடன் ஓர் கானகமார்க்கமாய் வந்தேன். நீர் வேட்கையால் குழந்தை வருந்த அவனை ஓரிடத்தில் இருத்திவிட்டு ஜலமிருக்கு மிடத்தைத் தேடிச்சென்றேன். வெகுதூரம் போய் கடைசியில் ஓர் பாழுங் கிணற்றண்டை வந்து சேர்ந்தேன். அச்சமயம் சில கள்வர் வந்து என்னை அவர்களுடன் அழைத்துச் சென்று ஒரு குகையில் சிறையிட்டனர். என் குழந்தையையும் கண்டுபிடிக்க முடியாமற் போய்விட்டேன். ஓர் நாள், கள்வர்கள்யாவரும் குகையை விட்டு வெளியில் போயிருந்தசமயத்தில், அவர்களுடைய தலைவன், குகையின் வாயிலில் கொல்லப்பட்டு கிடந்தான். அச்சமயம் நான் சந்நியாசி உடுப்புடன் வெளியே வந்து தப்பி ஓடி இந்நாட்டிற்கு வரும்வழியில் உங்களுடைய வீரர்கள் என்னைப்பிடித்து இவ்விடம் சிறையிலிடக் கொண்டுவந்தார்கள். தெய்வாதீனமாய் இங்கு என் குழந்தையைக் காணப்பெற்றேன். தாங்கள் இக்குழந்தையை இவ்விடம் அழைத்துக்கொண்டுவந்து இதுகால பரியந்தம் காப்பாற்றிவந்ததற்கு என் அன்பார்ந்த வந்தனத்தை அளிக்கிறேன். என் பிராணநாதரையும் கண்டுபிடித்து என்னிடம் சேர்ப்பீரானல் உங்களுக்கு அநேககோடி புண்யமுண்டு.

மஹா :—நல்லது, சந்தோஷம். நீ அரசகுடும்பத்தைச் சேர்ந்த பெண்மணியாயிருப்பதைக்கேட்டு அதிக சந்தோஷமடைகிறேன். நீயும் உன் குழந்தையும் எவ்வளவுகாலம் வேண்டுமானலும் இவ்வரண்மனையிலேயே இருக்கலாம். சீக்கிரத்தில் உனது கணவனையும் கண்டுபிடித்துக்கொண்டு வரும்படிச் செய்கிறேன். உனது தந்தைக்கும் நிருபம் எழுதி, நீயும் உன் குழந்தையும் இவ்விடம் சௌக்கியமாயிருக்கும் விஷயத்தை அறிவிக்கிறேன். நல்லது, நீங்கள்யாவரும் அந்தப்புரத்திற்குப் போயிருங்கள். (மஹாராணி, கற்பகராஜம், தோழி, குழந்தை போகிறார்கள்.)

சேவகா! மந்திரியை அழைப்பாய்.

சேவ :—அரசே! அப்படியே (சென்று மந்திரியுடன் வருகிறான்.)

மந் :—அரசே! நமஸ்கரிக்கிறேன்!

மஹா :—மங்கள முண்டாவதாக! மந்திரீ! நான் அன்றையதினம் வனவேட்டைக்குச் சென்று அங்கு ஓர் குழந்தையைக் கண்டு இவ்விடம் அழைத்துக் கொண்டு வந்தேனே! அக்குழந்தை, நமக்குக்கப்பம்

கட்டும் வசுவதத்தநாட்டின் அரசன் வாமநேச நாய்க்கரின் பௌத்திரன். நாட்டுப்பட்டி ஜமீன் தாரரின் புத்திரன். இன்று ஒரு சந்நியாசியைச் சிறையிலடைக்கும்படி அனுப்பினீரே, அந்த சந்நியாசியே அக்குழந்தையின் தாய். அவளுடைய விருத்தாந்தங்களையெல்லாம் எம்மிடம் கூறினள். நீர் உடனே வாமநேச நாய்க்கருக்கு ஒரு நிருபம் வரைந்து அவருடைய புதல்வியும் பௌத்திரனும் இவ்விடம் சௌக்கியமாயிருப்பதாகவும், அவருடைய மருமகனைக் கண்டுபிடித்துக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்வதாகவும் தெரியப்படுத்தும். அப்பெண்மணியின் கணவனன தாமோதரம் பிள்ளையைக் கண்டு பிடித்து இவ்விடம் கொண்டுவருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் அளிக்கப்படுமென்று அறிக்கை செய்யும். சரி, நீர் போகலாம்.

மந் :—அரசே! அப்படியே. (செல்கிருர்.)

மஹா :—என்ன ஆச்சரியம்! மதுபானத்தால் இப்பேர்ப்பட்ட அரச குடும்பம் பாழாகிவிடுவதா! நமது எல்லைக்குள் இப்பேர்ப்பட்ட அநியாயங்கள் நடந்து வருவதைப்பற்றி சிறிதும் அறிகிலேன். நல்லது, இருக்கட்டும். இந்த மதுபானம் என்ற நாமமே என் ராஜ்ஜியத்தில் வழங்காதபடி செய்கிறேன். (போகிருர்.)

(காட்சி முடிகிறது.)

---

ஐந்தாவது அங்கம். முதல் காட்சி.

இடம் :—மோஹனங்கியின் படுக்கை அறை.

காலம் :—முன்னிரவு.

மோஹ :—எனக்கு வேண்டிய திரவியத்தைக் கொண்டுவருவதாகச் சென்ற தாமோதரம்பிள்ளை இன்னும் என் திரும்பிவரவில்லை! அவனிடமிருந்த ஏராளமான திரவியங்களையும் அபகரித்துவிட்டேன். அவனே இப்பொழுது ஆண்டிபோலாகிவிட்டான். இன்னும் எங்கிருந்து அவனுக்குத் திரவியம் கிடைக்கும்? அவனுக்கு இனி கிடைப்பது ஒன்றுமில்லையாகையால் இவ்விடம் அவன் திரும்பி வரமாட்டான். - என்னே! நமது குலத்தின் பெருமை? எத்தனை அரசர்கள்-எத்தனை ஜமீன் தாரர்கள்-நமது மாயவலையில் அகப்பட்டு ஆண்டியாகிருர்கள்! இதனல் நமக்கு ஏதாவது புகழும் கீர்த்தியும் உண்டாகின்றனவா? அதுவுமில்லையே! அவர்களை இக்கதிக்குக் கொண்டுவருவதாலுண்டாகும் பாபமல்லவோ நம்மைச் சூழும்! - இருந்தபோதிலும் இது நமது குற்றமில்லை. அவர்களுடைய பிசகு என்றே சொல்லலாம். திரவியத்தை எந்த நல்ல வழிகளில் செலவிட வேண்டுமென்பதை அறியாமல், தீயோர் நட்பில் வீழ்ந்து தீய நடவடிக்கைகளைக் கையாடிவருவதால், அவ்வழிகளில் சிறிதளவே செலவு ஆனபோதிலும், மிஞ்சிய பெரிதளவு ஒரே இடத்தில் வந்து சேரும்படியாகக் கடவுள் நம்மைச் சிருஷ்டித்திருக்கிருரென்றே சொல்லவேண்டும். ஆகையால், நாம் நமது குலதர்மப்படிதான் நடக்கவேண்டும். மேலும், நாமில்லாவிட்டால் பணத்தால் மதங்கொண்ட ஜனங்கள் தங்களுடைய காம இச்சையைத் தீர்க்க பல குலஸ்திரீகளைக் கெடுக்க நேரிடும். ஆகவே,-(யாரோ வருகிற காலடி சத்தம் கேட்டு) யார் அது?

யாரோ வருகிற சப்தம் கேட்கிறது? (தாமோதரம் பிள்ளை பண மூட்டையுடன் வருகிருன்.)

தாமோ :—மோஹனு! இதோ வந்துவிட்டேன்.

மோஹ :—ஹா! வந்துவிட்டீர்களா? நான் கோரினதைக் கொண்டுவந்தீர்களா?

தாமோ :—கண்ணே! நீ கோரினதைக் கொண்டுவராமலும் நான் இவ்விடம் திரும்பி வருவேனு?- கவலைப்படவேண்டாம். இதோ இதைப் பெற்றுக்கொள்ளுவாய். (திரவியத்தைக் கொடுக்கிருன். மோஹனுங்கி அதை அரைமனதுடன் வாங்குவதுபோல் நடித்து.)

மோஹ :—கண்ணுளா! இது எனக்கு எதற்காக? தாங்கள் சௌக்கியமாக இவ்விடம் திரும்பி வந்தீர்களே, இதுவே எனக்கு பெரிய புதையல் கிடைத்ததுபோலாயிற்று. தாங்கள் என்னை விட்டுச்சென்ற பிறகு நான் தங்களைப்பற்றி நினைத்து வருந்தியது இவ்வளவு அல்ல. ஏன் உங்களைத் திரவியம் கொண்டுவரும்படி அனுப்பினேன் என்று என்னை நானே நிந்தித்தவண்ணமா யிருந்தேன். தாங்கள் சீக்கிரத்தில் திரும்பிவர மாட்டீர்களா என்று தங்களுடைய வருகையை எதிர்பார்த்திருந்த என் கண்களும் மங்கிவிட்டன. தாங்கள் இவ்விடமில்லாத ஒவ்வொரு க்ஷணமும் ஒவ்வொரு யுகமாகவே இருந்தது. (திரவியத்தைப் பார்த்து) ஹா! இவ்வளவு திரவியங்களைக் கொண்டுவர எவ்வளவு கஷ்டப்பட்டீர்களோ தெரியவில்லை! நாதா! சற்று இப்படி உட்காரும். இவைகள் உங்களுக்கு எப்படிக் கிடைத்தன?

தாமோ :—கண்ணே! நீ கோரினதைக் கொண்டுவர என் உயிரையும் இழப்பேன் என்று சொல்லிப் போகவில்லையா? - இவைகளை ஓர் தனவந்தன் மாளிகையிலிருந்து களவாடிக்கொண்டு வந்தேன்.

மோஹ :—ஹா! திருடியாக் கொண்டுவந்தீர்கள்? என்னிமித்தம் சிறைவாசம் கிடைத்தாலும் கிடைக்கட்டுமென்று, மனந்துணிந்து, இப்பேர்ப்பட்ட காரியத்தைச் செய்தீர்களே! உங்களுடைய அன்புக்கு மெச்சினேன். தாங்கள் மிகவும் களைத்திருக்கிறீர்கள். அடி, அஞ்சலை? (வேலைக்காரியை விளிக்கிருள்.)

அஞ்சலை :—(வந்து) அம்மா! ஏன் கூப்பிட்டீர்கள்? சிற்றுண்டி தயாராயிருக்கிறது. கொண்டுவரவா?

மோஹ :—ஆம். இரண்டு தட்டுகளில் கொண்டுவா?

அஞ்சலை :—அப்படியே (போகிருள்.)

தாமோ :—மோஹனு! என் மனதுக்கிசைய சில கீர்த்தனைகளைப் பாடு?

மோஹ :—காதலரே! அப்படியே பாடுகிறேன். (அஞ்சலை சிற்றுண்டியைக் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போகிருள்.)
நீங்கள் சிற்றுண்டி அருந்திக்கொண்டிருங்கள். (வீணையை மீட்டிப் பாடுகிருள்.)

தாமோ :—பலே! பலே! பேஷ்! ஆநந்தம்! ஆநந்தம்! பரவசமடைந்தேன். கண்ணே! போதும். வா, நாமிருவரும் சிற்றுண்டி கொள்ளலாம்?

மோஹ :—அப்படியே ஆகட்டும். (உள்ளே சென்று மதுபானப் புட்டியுடன் வந்து இரண்டு கோப்பைகளில் மதுபானத்தை நிரப்பி ஒன்றைத் தாமோதரம் பிள்ளையிடம் கொடுத்துவிட்டு மற்றொன்றைத் தான் எடுத்துக்கொள்ளுகிறாள்.)

தாமோ :—(சிற்றுண்டி முடிந்ததும்) காதற்கிளியே! இவ்வுலகில் பெற வேண்டிய சுகங்களுக்கெல்லாம் மேலான சுகம் நீயே! நீயே மோட்சம்! நீயே எல்லாமும்! - கண்ணே! உனக்கு இனி வேண்டியது எதுவாயிருந்தாலும் சரியே! அதை நீ இயம்புவாயாகில் இந்த க்ஷணமே கொண்டுவந்து சேர்க்கிறேன். என்ன சொல்லுகிறாய்?

மோஹ :—(தனக்குள்) இதுதான் சமயம். (வெளிப்படையாய்) உண்மை தானா?

தாமோ :—உண்மைதான் - இதோ சத்தியம் செய்து கொடுக்கிறேன்.

மோஹ :—எனக்கு நெடுநாட்களாக இந்த நாட்டின் மஹாராஜாவிடமிருக்கும் ஓர் பச்சைக்கல் மோதிரத்தை அடையவேண்டுமென்ற ஆசை இருந்துவருகிறது. அதை நான் அடைவேனாகில் இவ்வுலகில் என்னைப்போல பாக்கியசாலி யாருமே இருக்கமாட்டார்கள். அது மஹாராஜாவின் படுக்கை அறையிலுள்ள நகைப் பெட்டியிலிருக்கிறது. அதைத் தாங்கள் கொண்டுவர முடியுமா?

தாமோ :—இவ்வளவுதானே? இது அசாத்தியமல்ல. இன்றிரவே அதை அபகரித்துக்கொண்டு வந்துவிடுகிறேன். நீ கவலைப்படவேண்டாம். உத்தரவு அளிப்பாய்.

மோஹ :—மறுபடியும் உங்களைவிட்டுப் பிரிந்திருக்க வேண்டியதாயிற்றே, ஐயோ! நான் என் உங்களுக்கு இதைப்பற்றி கூறினேன்? ஆனால்! அதி விரைவில் திரும்பி வந்துவிடுகிறீர்களா?

தாமோ :—ஆஹா! அப்படியே! நீ கவலைப்படாமல் தைரியமாய் இருப்பாய். (செல்கிறான்.)

மோஹ :—நான் செய்த யுக்தியே யுக்தி! மஹாராஜாவின் படுக்கை அறையில் புகுந்து களவாடித் தப்பித்துக்கொண்டு வருவது அசாத்தியம். பேதை! இவன் என் சொல்லை நம்பிப் போய்விட்டான்! இவன் எப்படியும் கைதியாகிவிடுவான். இதனால் இவனுக்கு மரண தண்டனை கிடைத்தாலும் கிடைக்கும். - சனி ஒழிந்தது! இனி இவனிடமிருந்து பெறுவது ஒன்றுமில்லை. - நல்லது. என் காரியம் நிறைவேறிவிட்டது. இனி வேறொரு தனவந்தனின் நட்பைப் பெறவேண்டும்.

(காட்சி முடிகிறது.)

**ஐந்தாவது அங்கம். இரண்டாவது காட்சி.**

**இடம்** :—மஹாராஜாவின் படுக்கை அறை.

**காலம்** :—இரவு.

மஹாராஜா கட்டிலின்மீது படுத்து உறங்கிக்கொண்டிருக்கிறார். இச்சமயத்தில் தாமோதரம் பிள்ளை மெல்லவந்து நகைப்பெட்டியை நோக்கிச் சென்று திரவுகோல் கொண்டு பெட்டியைத் திறக்கிறான். அப்பொழுது பெட்டியினின்றும் "கெல, கெல" வென்று மணி ஓசை உண்டாகவே, அவ்வோசையால் மஹாராஜா திடுக்கிட்டு எழுந்து தாமோதரம் பிள்ளையைப் பிடித்துக் கொள்ளுகிறார்.

---

**மஹா** :—அடேய்! நீ யார்?

**தாமோ** :—வெ எ - எ ஏ - வெ எ எ ஏ (நடுங்குகிறான்.)

**மஹா** :—என்னடா! விழிக்கிறாய்? திருட்டுப்பயலே! இவ்விடம் எப்படியடா வந்தாய்? உண்மையைச் சொல்லுகிறாயா, இல்லாவிட்டால் இவ்வாளால் உன்னை ஒரே வெட்டாக வெட்டிவிடட்டுமா?

**தாமோ** :—ம - ஹா - ராஜா! வேண்டாம். உண்மையைச் சொல்லிவிடுகிறேன். நான் வெகு நாட்களாக யாதொரு உணவுமின்றி பட்டினியாயிருந்து வருகிறேன். இவ்விடம் வந்தால் ஏதாவது கிடைக்குமென்றும் அதைக்கொண்டு என் கஷ்டத்தைத் தீர்க்கலாமென்று எண்ணினேன்.

**மஹா** :–இப்பேர்ப்பட்ட திருட்டுத்தொழிலை எவ்வளவு காலமாகக் கையாடி வருகிறாய்? - இருக்கட்டும். உனக்குத் தகுந்த தண்டனையை விதிக்கிறேன். யார் அங்கே?

**மெய்க்கார்ப்போன்** :—(வந்து) மஹாராஜா! உத்தரவு!

**மஹா** :—அதி சீக்கிரமாக இரண்டு வீரர்களை இவ்விடம் அனுப்பும். மந்திரியை நான் அழைப்பதாகச் சொல்லி இவ்விடம் அனுப்பும்.

**மெய்** :—மஹாராஜா! அப்படியே. (போகிறான்) (இரண்டு போர் வீரர்கள் வருகிறார்கள்).

**மஹா** :—வீரர்களே! இவன் கள்வன். இவனைக் காவல்புரியுங்கள்.

**மந்திரி** :—(வந்து) அரசே! நமஸ்கரிக்கிறேன். இவ்வேளையில் என்னை அழைத்த காரணம் யாதோ!

**மஹா** :—மந்திரி! பார்த்தனையா இவனை? இவன் சற்றுமுன் இப்பெட்டியைத் திறந்து களவாட முயன்றான். பெட்டியின் மணி ஓசையால் நான் விழித்துக்கொண்டு இவனைக் கைப்பிடியாகப் பிடித்துவிட்டேன். இத்தனை காவலாளிகளையும் கடந்து என் படுக்கை அறைக்கு வந்து திருடியவர் இதுவரையிலும் யாருமில்லையே! இவன் அதிக சாமர்த்தியவானாகவே இருக்கவேண்டும். இவனுக்கு என்ன தண்டனை விதிக்கலாம்?

**மந்** :—அரசே! சில நாட்களாக நமது நாட்டில் களவு அதிகமாயிருந்து வருவதாக அன்று நமது குடிகள் மூலமாய் அறிந்தோமல்லவா! இவன் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவனா யிருக்கவேண்டும். மேலும்,

இவனைப் பார்த்தால் அந்தக் கூட்டத்தில், ஓர் தலைவனாகவுமிருக்கலா மெனத் தோன்றுகிறது. இவனை உயிருடன் வைப்பது உசிதமல்ல. ஆகவே, இவனுக்கு மரண தண்டனையே தகும்.

மஹா :—நல்லது. அப்படியே செய்யும்!

மந் :—வீரர்களே! இவனை அழைத்துச் சென்று சிறைச்சாலையில் அடைத்து அதி ஜாக்கிரதையுடன் காவல் புரியுங்கள். (வீரர்கள் தாமோதரம் பிள்ளையை அழைத்துக்கொண்டு செல்கிறார்கள்). அரசே! நான் சென்று வருகிறேன்.

மஹா :—நல்லது. உதயத்தில் நமது அரண்மனை காவலாளிகள் யாவரையும் அழைப்பித்து கள்வன் அரண்மனைக்குள் நுழையும்படியாக அவ்வளவு அஜாக்கிரதையாய்க் காவல்புரிந்தவர்கள் யாரோ அவர்களைத் தக்கபடி சிட்சை செய்யும். சரி, நீர் போகலாம்.

மந் :—அரசே! அப்படியே (போகிறார்).

---

(காட்சி முடிகிறது.)

**ஐந்தாவது அங்கம். மூன்றாவது காட்சி.**

இடம் :—நந்தவனம்.

காலம் :—மாலை.

கற்பகராஜமும் விமலாவும் பேசிக்கொண்டிருத்தல்.

---

கற்ப :—விமலா! என்ன விஷயம்? நாளைத்தினம் ஒரு கைதியைத் தூக்கிவிடப் போகிறார்களாமே! உண்மைதானா?

விமலா :—ஆம் அம்மா. அவன் ஒரு கள்வர் கூட்டத்து தலைவனாம். அவன் நேற்றிரவு நமது மஹாராஜாவின் படுக்கை அறையில் புகுந்து களவாடும்பொழுது மஹாராஜாவே அவனைக் கைப்பிடியாகப் பிடித்து விட்டாராம்.

கற்ப :—எவ்வளவு தைரியம்? திருடனைச்சிலகாலம் வரையில் சிறையில் வைத்தால் போதாதோ? அவனுக்கு மரண தண்டனை விதிப்பானேன்?

விமலா :—அம்மா! திருட்டு என்பதே இந்த நாட்டில் கிடையாது. சில நாட்களாகத்தான் திருடர்கள் சந்நியாசிகள் போல வேடந்தரித்துக் கொண்டு அநேக குடிகள் வீடுகளில் புகுந்து களவாடிப் போகிறார்களாம். இவ்விஷயத்தை சிலகுடிகள் மஹாராஜாவிடம் வந்துசொல்லி முறையிட அதன்மேல் அவர், சந்நியாசிகள் யாவரையும் கைதி செய்து சிறையிலடைக்கும்படி உத்தரவு செய்துவிட்டார். மேலும் மஹாராஜாவின் படுக்கை அறைக்கு வந்து திருட எத்தனித்தவன் அதிக சாமர்த்தியவானாகவே இருக்கவேண்டுமென்றும், அக்கள்வர் கூட்டத்திற்கு ஓர் தலைவனா யிருக்கலாமென்றும், அப்பேர்ப்பட்டவனை உயிருடன் விடாமல் தூக்கிவிட்டால்தான் அவன் கூட்டத்தாருக்கு ஓர் பயத்தை உண்டாக்குமென்று எண்ணி அவனுக்கு மரண தண்டனையை விதித்தார்கள். - அம்மா! அவனைப் பார்த்தால் கள்வனைப்போல் தோன்றவில்லை. சிறைச்சாலையில் அவன் எப்பொழு

தும், "ஐயோ! கடைசியில் நான் இக்கதிக்கு ஆளாகினேனே! ஈசா! என் மனைவி என்னவாயினளோ! என் குழந்தையின் கதி என்ன வாயிற்றோ!" என்று கூறிக்கொண்டிருக்கிறான்.

**கற்ப** :—(ஆச்சரியமாக) உண்மையாகவா?

**விமலா** :—ஆம் அம்மா! அவனைப் பார்ப்பவர் யாருமே அவனைக் கள்வனென்று கூறமாட்டார்கள். நானும் ஓர் தடவை அவனைப் போய்ப் பார்த்தேன். ராஜ வம்சத்தில் உதிப்பவர்களுக் கிருக்கும் சின்னங்கள் யாவும் இருக்கின்றன. அவன் தானாக திருட வந்திருப்பானென்பது சந்தேகமாயிருக்கிறது.

**கற்ப** :—விமலா! நீ கூறுவது யாவும் விந்தையா யிருக்கிறதே! ராஜலட்சணங்கள் பொருந்தியிருக்கும் அப்பேர்ப்பட்ட ஒருவனைக் கள்வனென்று குற்றஞ்சாட்டி அவனைத் தூக்கிலுமிட மஹாராஜாவுக்கு எப்படி மனந்துணிந்தது?

**விமலா** :—அம்மா! அவன் திருடினனென்று வேறு யாராவது குற்றஞ் சாட்டி அவனைக் கொண்டுவந்திருந்தால் மஹாராஜா அதனை நம்பாமல் அவனை விடுதலைச் செய்திருப்பார். ஆனால் மஹாராஜாவே தன் படுக்கை அறையில் அவனைக் கைப்பிடியாகப் பிடித்துவிட்டதால் இப்பேர்ப்பட்ட கொடுந் தண்டனையை விதிக்கவேண்டியதாயிற்று.

**கற்ப** :—பாவம்! அவனுக்கு என்ன கஷ்டகாலமோ!

**விமலா** :—அம்மா! மற்றொரு விஷயம். இன்று காலையில் வழக்கப்படி நான் உங்களுடைய குழந்தையை அழைத்துக்கொண்டு உலாவப் போனேன். அப்பொழுது ஜனங்கள் கூட்டம் கூட்டமாக பெரிய சிறைச்சாலைக்குப் போகும் பாதையில் போவதைப் பார்த்தேன். என்ன காரணத்தால் இவ்வளவு ஜனங்கள் போகிறார்களென விசாரித்ததில், சந்நியாசி வேடந்தரித்த அநேகம்பேர்களைச் சிறையிலடைத்திருக்கிறார்களென்றும் அவர்களைப் பார்ப்பதற்காக அவ்வளவு ஜனங்கள் போகிறார்களென்றும் அறிந்து நானும் அக்காட்சியைப் பார்த்துவிட்டு வரலாமென எண்ணி அவ்விடம் போனேன். நமது குழந்தையுடன் அவர்களை ஒவ்வொருவராய்ப் பார்த்துக்கொண்டே நமது அரண்மனையில் திருடவந்த கள்வனை அடைத்திருக்கும் அறையின் பக்கமாக வந்து அவனை நமது குழந்தைக்குக் காண்பித்தேன். அவனும் எங்களையே சிறிதுநேரம் நோக்கிவிட்டு, "ஹா! இக் குழந்தை என்னுடையதுபோலவே இருக்கிறது. இவன் யாரோ தெரியவில்லையே!" என்று சொல்லி பெருமூச்சுவிட்டான். பிறகு நான் அரண்மனைக்குத் திரும்பி வந்துவிட்டேன்.

**கற்ப** :—(தனக்குள்) இவள் சொல்வதைப் பார்த்தால் அவர் என் நாதராகவே இருக்கவேண்டும். ஒரு வேளை அந்தத் தாசியின் சூழ்ச்சியால் அவர் இப்பேர்ப்பட்ட துர்க்கிரியத்தைச் செய்ய சம்மதித்திருக்கலாம். அவரை நான் நேரில் பார்த்தால்தான் எல்லா உண்மையும் விளங்கும். எப்படிப் பார்ப்பது? - நல்லது. அவரைத் தூக்கு மேடைக்குக் கொண்டுவருவார்களல்லவா? அப்பொழுது ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் அவ்விடம் சென்று பார்க்கிறேன் - ஆம், இதுதான் நல்ல யோசனை.

விமலா :—அம்மா ! என்ன ஏதோ ஆழ்ந்த யோசனையிலிருக்கிறீர்கள் ?

கற்ப :—விமலா ! ஒன்றுமில்லை. நமது குழந்தையைப் போலவே அவனுக்கும் ஏதாவது குழந்தை இருக்கலாம். அதனால்தான் அவன் அவ்விதம் கூறியிருப்பான். பாவம் !

விமலா :—அம்மா ! நாழியாகிவிட்டது. அதோ ! மஹாராணியாரும் நம்மைக் கூப்பிடுகிறார்கள். வாருங்கள் போகலாம் !

கற்ப :—அப்படியே (போகிறார்கள்).

(காட்சி முடிகிறது.)

ஐந்தாவது அங்கம். நான்காவது காட்சி.

இடம்:—தூக்குமேடை.

காலம் :—பகல்

இரு சேவகர்கள் தாமோதரம் பிள்ளையைக் கைகளில் விலங்குடன் அழைத்துக்கொண்டு வருகிறார்கள்.

தாமோ:—(தனக்குள்) ஹா! ஈசனே! என் ஆயுள் இவ்வாறு தூக்கு மேடையின்மீது முடியவேண்டுமா? என் தலையில் பிரம்மதேவன் இப்படியும் எழுதினனா? நான் பிறந்தது என்ன ! வளர்ந்தது என்ன! இப்பொழுது தூக்குமேடையின்மேலிருப்பது என்ன ! இவ்வளவிற்கும் காரணம் மதுபானம் அல்லவா! "குடியால் குடி கெடும்" என்பதை இப்பொழுதே அறிந்தேன். இப்பொழுது அறிந்து என்ன செய்வது ! முன்பே இருக்கவேண்டும் இந்த புத்தி. - என் மனைவி எவ்வளவோ புத்திமதி கூறினளே, அதைக் கேட்டேனா? அதுவுமில்லையே ! ஹா ! சண்டாளன் நான் ! அவள் என்ன ஆயினளோ ! குழந்தை என்னவாயிற்றோ ! என்னுருயிர் நாயகியே ! உன் மனத்தை நான் புண்படுத்தினேன். உன்னை அநாதையாக விட்டேன். பாவி வேசியின் வலையில் சிக்கினேன். உன் வயிறு எவ்வாறு எரிந்ததோ ! உன் மனம் எப்படிக் கலங்கியதோ ! உன்னையும் குழந்தையையும் மறந்து இவ்வளவு காலமாய் வேசியின் இச்சையில் புகுந்து பாராமுகமாயிருந்தேன். உன்னை அவ்வாறு செய்ததினலுண்டான பாவமே என்னை இக்கதிக்குக் கொண்டுவந்து விட்டது போலும். கண்ணே ! நீமாத்திரம் உயிருடனிருந்து, இந்த நேரத்தில் என்னை இக்கோலத்தில் காண்பாயாகில், நீயும் என்னுடன் உயிரை விடுவாய் என்பதற்கு ஐயமில்லை. - கொடும்பாவி ! அந்தத் தாசிக்கு என் திரவியங்கள் முழுவதும் கொடுத்தேன். அவள் கோரினதையெல்லாம் அற்பமான தொழில்களைச் செய்து கொணர்ந்து சேர்த்தேன். கடைசியில் நான் இக்கதிக்கு ஆளானதும் அவளாலல்லவா ? அவள் உண்மையில் என் நலத்தைக் கோருபவளாயிருந்தால், என்னை இத்தகைய திருட்டுத் தொழிலுக்கு அனுப்பியிருப்பாளா ? ஒருக்காலும் அனுப்பியிருக்கமாட்டாள். - சீ ! நான் மதியீனன் - சிறிதும் யோசிக்காமல் இக்காரியத்திற்கு உடன்பட்டேன். அதற்குத் தகுந்த தண்டனையையே அடைகிறேன். "அற்ப சாவகாசம் பிராண சங்கடம்" என்பதற்குச் சரியாக என் உயிருக்கே இப்பொழுது தீங்கு நேரிட்டது. சீ ! இனி என்னைப்போல இவ்வுலகில் யாரும் கெடாமலிருப்பார்களாக ! இனி வருந்துவதில் யாதொரு பிரயோஜனமுமில்லை. - நல்லது. என்னைத் தூக்கிலிடுவதற்கு முன் அரண்மனை உத்தி

யோகஸ்தர் என்னிடம் வந்து எனக்கு வேண்டியது என்னவென்று கேட்பார்களாம். அப்பொழுது நான் கூறவேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது. அது யாதெனில், நான் இக்கதிக்கு ஆளானது மதுபானத்தால் என்றும், இனி என்னைப்போல் வேறொருவரும் கெடாமலிருப்பதற்கு மதுபானம் என்ற நாமமே இந்நாட்டில் வழங்காதபடிச் செய்வார்களேயானால் அதுவே போதும் என்று கூறுகிறேன்.- அதோ! என்னைத் தூக்கிலிடப் போகும் காட்சியைப் பார்க்க பிரஜைகள் வருகிறார்கள்போலிருக்கிறது! ஹா! தெய்வமே! இப்படியும் என்னை அவமானப் படுத்த வேண்டுமா! (கண்ணீர் விடுகிறான். பிரஜைகள் ஒருவர்பின் ஒருவராக வருகிறார்கள். நியாயாதிபதி வந்து சேவகர்களுக்குச் சைகை செய்ததும் அவர்கள் தாமோதரம் பிள்ளையை அழைத்துக்கொண்டு வந்து தூக்கு மேடையின்மீது நிறுத்துகிறார்கள். அச்சமயத்தில் கற்பகராஜம் திடீரென்று பிரஜைகள் மத்தியிலிருந்து ஓடிவந்து மேடையின்மீதேறி தாமோதரம் பிள்ளையைத் தழுவிக்கொள்ளுகிறாள்).

**கற்ப** :—ஹா! நாதா! நீங்களா இக்கதிக்கு ஆளாயிருப்பது! ஐயோ! தெய்வமே! இதைப் பார்க்கவும் நான் சகிப்பேனா! நீங்கள் இறந்த பின்னும் நான் உயிர் வாழ்வேனா! இதோ நானும் உங்களுடன் உயிரை விடுகிறேன்!

**நியா** :—அம்மா! நீங்கள் யார்? குற்றவாளி உங்களுடைய கணவராயிருக்கும்பட்சத்தில் அவர் செய்த குற்றத்திற்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனையை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டுமே ஒழிய நீங்கள் அவருடன் உயிரை விடவேண்டியதில்லை. நீங்கள் உடனே அவரை விட்டு கீழே இறங்கி வாருங்கள்?

**சேவகன்** :—(ஒரு பக்கமாக நியாயாதிபதியைப் பார்த்து) பிரபு! இந்த அம்மா நம்ப மவாராஜா அரண்மனையிலே மவாராணிங்ககூடவே இருக்கிறவங்க. இவங்க புருஷரைக் கண்டு புடிச்சிக்கினு வார்ரவங்களுக்கு யெனும் கொடுக்கிறேண்ணு மந்திரி அய்யா தண்டோராகூட போட்டிருக்காங்கொ. இவங்க இந்த அம்மா புருஷருயிண்ணு மவாராஜவுக்குத் தெரிஞ்சா இவுங்களே தூக்கிலே போடாதே வுட்டுடுவாங்க. நானு போயி மவாராஜாகிட்டே சொல்லிட்டு வாரேன். (போகிறான்).

**தாமோ** :—ஹா! கண்ணே! நீ இவ்விடம் இச்சமயத்தில் எப்படி வந்தாய்? பாவி, சண்டாளன் நான். உன்னைப் பார்ப்பதற்கும் எனக்கு வெட்கமாயிருக்கிறது. நானே சீக்கிரத்தில் இறக்கப்போகிறேன். நான் இறப்பதற்கு முன் உன்னைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் நான் செய்த குற்றங்களுக்காக என்னை மன்னிப்பாய் என்னருஞ் செல்வமே! மதுவால் கெட்டேன். உன்னை மறந்தேன். உயிர் துறப்பேன் இன்றே!

(மஹாராஜா மந்திரி முதலானோருடன் வருகிறார்).

**மஹா** :—(கற்பகராஜத்தைப் பார்த்து) பெண்ணே! இவர் உன் கணவரா?

**கற்ப** :—ஆம் மஹாராஜா.

**மஹா** :—என்ன ஆச்சரியம்! இப்பேர்ப்பட்ட இழிவான காரியத்தைச் செய்ய எப்படிச் சம்மதித்தார்? தாமோதரம் பிள்ளையே! கீழே

இறங்கி வாரும். (தாமோதரம் பிள்ளை தூக்கு மேடையை விட்டு கீழே இறங்கி வருகிறார்) நீர் எப்படி இத்தொழிலுக்கு உடன்பட்டீர்? உம்முடைய மனைவியாகிய இப்பெண்மணி உம்முடைய விருத்தாந்தங்களை எமக்குக் கூறியிருக்கின்றனள். ஆனால் இத்தூக்கு மேடைக்கு வந்து உயிரை விடும்படியான சிட்சையைப் பெறுவதற்கு இப்பேர்ப்பட்ட துர்க்கிரியத்தை ஏன் செய்தீர்களென்பதுதான் தெரியவில்லை. நடந்தவற்றை விளங்கச் சொல்லும்.

**தாமோ:**—அரசே! நான் ஏனோ இப்புவியில் பிறந்தேன்! வேசி மோஹனாங்கியின் வலையிலகப்பட்டு அவளுடைய உத்தரவுபடி நான் உங்களுடைய அரண்மனைக்கு வந்தேன். உங்களுடைய படுக்கை அறையில் ஒரு நகைப்பெட்டி இருப்பதாகவும், அந்தப் பெட்டியில் ஓர் பச்சைக்கல் மோதிரம் இருப்பதாகவும், அதை எப்படியாவது அபகரித்துக்கொண்டு வந்து கொடுத்தால்தான் மறுபடியும் நான் அவளைப் பார்க்க முடியுமென்று சொன்னாள். நான் அவளுடைய மாயையால் மூழ்கிக் கிடந்ததால் அவள் சொன்னபடி செய்ய நேரிட்டது. அறியாமையால் தீயோர் நட்பைக்கொண்டு, மதுபானங்களைக் கைக்கொண்டு, வேசிகளின் நேசத்தையுங்கொண்டு, என் மனைவி மக்களையுந் துறந்து, உறவினர் முதலானோரையும் மறந்து, நாட்டையும் விட்டு இக்கதிக்கு ஆளாயினேன். இவ்வளவுக்கும் காரணம் மதுபானம் என்று அறிந்துகொண்டேன். என்னை மன்னிக்கவும்!

**மஹா:**—தாமோதரம் பிள்ளையே! உம்மை மன்னித்தேன். இன்று உமது மனைவியால் உயிர் பெற்றீர். இனி யாதொன்றுக்கும் கவலைப்பட வேண்டாம்.

**தாமோ:**—அரசே! இன்று எனக்கு உயிர் பிட்சையைக் கொடுத்த உங்களை என்றும் மறவேன். (மனைவியைப் பார்த்து) என் கண்ணே! உன்னாலல்லவா நான் இன்று மரணத்தினின்றும் மீண்டேன்! எப்பொழுதும் மனைவிதான் தன் கணவனுடைய நலத்தைக் கோருபவள் என்பதை இன்றே கண்டேன். மங்கையர்க்கரசியே! நீ இவ்விடம் எப்படி வரும்படி நேரிட்டது? குழந்தை சௌக்கியமா?

**கற்ப:**—நாதா! நீங்கள் என்னை விட்டுப்போனதிலிருந்து இவ்விடம் வந்து சேர்ந்தவரையில் நான் அனுபவித்த கஷ்டங்கள் இவ்வளவு அல்ல. அவைகளை யெல்லாம் சொல்வதற்கு இது தகுந்த சமயமல்ல. பின்பு நான் சொல்லுகிறேன். குழந்தையும் சௌக்கியமாகவே இவ்விடந்தானிருக்கிறான். இந்த மஹாராஜாவின் பேருதவியால் தான் இன்று என்னையும் குழந்தையையும் உயிருடன் பார்க்கிறீர்கள்.

**தாமோ:**—மிகவும் சந்தோஷம். (மஹாராஜாவை நோக்கி) அரசே! என் மனைவியையும் குழந்தையையும் இவ்விடம் கொணர்ந்து காப்பாற்றினதுமன்றி என்னையும் இவர்களுடன் இன்று சேர்ப்பித்ததற்காக என் மனமார்ந்த வந்தனத்தை அளிக்கிறேன். இத்தருணத்தில் நான் உங்களைக் கேட்டுக்கொள்வது யாதெனில் என்னை இக்கதிக்குக் கொண்டுவந்த மதுபானம் என்ற நாமமே உங்களுடைய ராஜ்ஜியத்தில் வழங்காதபடிச் செய்யவேண்டியதே. அருள் செய்யவேண்டும்.

**மஹா:**—தாமோதரம் பிள்ளையே! சந்தோஷம். உமது வேண்டுகோட்படியே செய்கிறேன். (மந்திரியை நோக்கி) மந்திரி! நமது தேயத்திலிருக்கும் மதுபானக் கடைகள் யாவையும் உத்தரவு பிறப்பித்த

24 மணி நேரத்திற்குள் மூடிவிட வேண்டுமென்றும், அவர்கள் மாசூலாகக் கட்டியிருக்கும் தொகையில் இந்தத் தேதிவரையில் சேரவேண்டிய தொகை போக, பாக்கியைத் திருப்பிக் கொடுக்கப்படு மென்றும், அப்படி மீறி கடையைத் திறந்து வைத்திருப்பவர்க்கும், அக்கடையை நாடிச் செல்பவர்க்கும் அபராதமும் கடுங்காவலும் விதிக்கப்படுமென்றும், உடனே எங்கும் பறைசாற்றி அறிக்கை செய்யும். தாசி மோஹனங்கியைப் பிடித்து சிறையிலடையும். அவள் தாமோதரம் பிள்ளையிடமிருந்து அபகரித்த நகை நாணயங்கள் பூமி முதலானவைகளை அவளிடமிருந்து மீண்டும் வாங்கி அவருக்கு ஒப்புவித்து விடும்.

(கற்பகராஜத்தின் தகப்பனார் வாமநேச நாய்க்கர் வருகிறார்.)

வாம :—மஹாராஜாவே ! நமஸ்கரிக்கிறேன் !

மஹா :—வாமநேச நாய்க்கரே ! வாருங்கள் ! மங்கள முண்டாவதாக ! "சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்தது" போல் தக்கசமயத்தில் நீங்களும் வந்தீர்கள். இதோ ! உங்களுடைய மகளும் மருமகனும் இருக்கிறார்கள் ! அவர்களை ஒப்புக்கொள்ளுங்கள் !

வாம :—ஹா ! மருமகப்பிள்ளையும் வந்து சேர்ந்தனரா ? மிகவும் சந்தோஷம், இவர்களிருவரையும் கண்டுபிடிக்க நான் எடுத்துக்கொண்ட பிரயத்தனங்கள் இவ்வளவு அல்ல. கற்பகராஜமும் குழந்தையும் இவ்விடம் வந்திருப்பதாகத் தெரிவித்திருந்த உங்களுடைய நிருபத்தைப்பார்த்ததும் என் கவலையில் பாதி தீர்ந்தது. கற்பகத்தைக் கண்டு விசாரித்தால் மருமகப்பிள்ளையின் விஷயங்கள் ஏதாவது தெரியுமென்று மனதைத் தேற்றிக்கொண்டு இவ்விடம் வந்தேன். "கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது" போல யாவரையும் இவ்விடம் காணப்பெற்றேன். பாக்கியவானானேன். மஹாராஜாவே ! தங்களுடைய பேருதவியை நாங்கள் என்றும் மறவோம். எல்லாம் ஈசன் திருவருள் ! (கற்பகராஜத்தை நோக்கி) கற்பகம் ! உன்னைப்பெற்றெடுத்த நான் ஒருவனிருக்க என்னையும் மறந்து விட்டு இப்பேர்ப்பட்ட கஷ்டங்களை அனுபவித்தாயல்லவா ? உன் கஷ்டங்களுக்குத் தகுந்த வெகுமதியே அடைந்தாய். அம்மட்டில் நீ புத்திசாலிதான். எல்லாம் நன்மையாகவே முடிந்தது.

கற்ப :—தந்தையே ! நான் உங்களை மறந்துவிட்டுப் போய்விட்டதாக நினைக்கவேண்டாம். நான் உங்களிடம் வரலாமென எண்ணினேன். ஆனால் அடுத்த நிமிஷத்தில் அந்த எண்ணம் நீங்கி என் நாதரை அடையும்படியான மார்க்கத்தில் புகுந்துவிட்டேன். மேலும் என் நாதரை நாடிச்செல்லாமல் நான் உங்களிடம் வந்திருப்பேனாயின் அவரை நான் மறுபடியும் அடைந்திருப்பேனென்று எண்ண இடமில்லை. கற்புடைய மங்கையர்க்கு நாதனே தெய்வமாகையால் அவரைப்பிரிந்து நான் என்னசுகம் பெறக்கூடும் ? அவரை எப்படியாவது பெறவேண்டும், இல்லாவிட்டால் உயிர்துறக்கவேண்டுமென்று தீர்மானம் செய்தே வெளிப்போந்தேன். (புருஷனை நோக்கி) நாதா ! நீங்கள் என்னைவிட்டுப் போனதும் மறுபடியும் உங்கள் நண்பனாகிய நாராயணையர் பல வழிகளில் என்னைக் கற்பழிக்க முயன்றான். நான் அவனிடமிருந்து தப்பி ஓடிவிட்டேன். அவனைத் தகுந்தபடி தண்டிக்கவேண்டும். ஓர் நாள் நீங்கள் வீட்டிற்கு வந்து

மறுநிமிஷமே வெளியில் விரைவாகப் போய்விட்டீர்களே! ஞாபக மிருக்கிறதா? நீங்கள் போனதும் நான் அறையில் வந்து பார்க்க என் பெட்டி திறக்கப்பட்டு அதனுள்ளிருந்த நகைகள்யாவும் களவாடப்பட்டிருந்தன. அச்சமயத்தில் நமது வேலேக்காரன் அவ்விட மிருந்ததைக்கண்டு அவனே களவாடியிருக்கலாமென சந்தேகித்து அவனைக்கேட்டதில் அவன் பயந்து எங்கேயோ ஓடிப்போய்விட்டான். இதுவரையிலும் களவுபோன நகைகளாவது ஓடிப்போன வேலேக்காரனாவது அகப்படவில்லே.

தாமோ:—அப்படியா நாராயணையாவுக்கு கடவுளே தகுந்த சிட்சையைச் செய்துவிட்டார். அவன் கள்வர் குகையில் கொல்லப்பட்டான். கண்ணே! உன் நகைகளை எடுத்துச்சென்றவன் நான். வேலேக்காரன் மீது குற்றஞ்சாட்டினது பிசகு. நல்லது, நாழியாகிறது. நாம்மஹாராஜாவிடம் விடைபெற்றுக்கொண்டு நமது நாட்டிற்குப்போகலாம்.

கற்ப:—நாதா! அப்படியே. கள்வர்குகையில் கொல்லப்பட்டிருந்தவன் தானா நாராயணையா? அக்குகையில் என்னைச்சிறைவைத்தவன் அவன்தானா? என்ன ஆச்சரியம்! அவன் கெடுமதி அவனையே கெடுத்தது! (தாண்டவராயன் வருகிறான்.)

தாண்ட:—எஜமான்ரே! நானும் இதோ வந்தூட்டேன். மவாராஜா அரண்மனை நந்தவனத்திலே தோட்டவேலையைப் பாக்குறேன். அம்மா கோவிச்சுக்கினாங்கோ. அத்தாலே பயந்து இங்கே ஓடிவந்தூட்டேன்.

தாமோ:—ஹா! நீயும் வந்து விட்டாயா? மிகவும் சந்தோஷம். எல்லாம் ஈசன் செயல். (மஹாராஜாவைப்பார்த்து) அரசே! தாங்கள் செய்த பேருதவிக்கு நாங்கள் யாவரும் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறோம். தாங்கள் உத்திரவு கொடுப்பீர்களானால் நான் என் மனைவியையும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு தங்களுடைய கிருபையால் கிடைத்த என் நாட்டிற்குச் செல்கிறேன்.

மஹா:—தாமோதரம் பிள்ளையே! அப்படியே செய்யும். இனிமேலாவது புத்திசாலியாயிருந்து உனது மனைவிமக்களுடன் நெடுகாலம் சுகமாக வாழ்வீராக, உனது மனைவி ஜெயமடைந்த சதியாயிருப்பதால் இனிமேல் ஜெயசதி என்று அழைப்பீராக.

தாமோ:—அரசே! அப்படியே, (ஷேயாரின் குழந்தை வருகிறான், பின்னால் மஹாராணியும் வருகிறாள்.)

குழ:—அம்மா! அம்மா! இதுயாரு? அப்பாவா? - அப்பா! அப்பா! (தாமோதரம் பிள்ளையைக் கட்டிக்கொள்ளுகிறான்.)

தாமோ:—என் செல்வமே! வருவாய். (முத்த மிடுகிறான்.)

கற்ப:—மஹாராஜாவே! அம்மையே! நானும் சென்றுவருகிறேன். எனக்கு இது காலபரியந்தம் பெற்றோர்களைப்போலிருந்து என்னையும் என் குழந்தையையும் காப்பாற்றிவந்ததுமன்றி கண்ணில்லாத குருடனுக்கு கண் கிடைத்ததுபோல பிரிந்த என் நாயகரை யான் மீட்டும் பெறச்செய்து என்னுடன் கூட்டியனுப்பும் உங்களை நான் எக்காலத்திலும் மறவாதிருக்கவேண்டுமெனக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

(காட்சி முடிகிறது. முற்றிற்று.)

13/3/25

200
15-23